ஜேம்ஸ் ஆலன்

# வெற்றிக்கு எட்டுவழிகள்

தமிழாக்கம்

த.கோவேந்தன்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

ஜேம்ஸ் ஆலன்

# வெற்றிக்குரிய எட்டு வழிகள்

புலவர் த. கோவேந்தன் டி.லிட்

ராஜேஸ்வரி புத்தக நிலையம்
22, 6வது தெரு, பக்தவச்சலம் நகர்,
[illegible] சென்னை – 600 114.
[illegible] : 232 0360

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வெற்றிக்குரிய எட்டு வழிகள் |
| தமிழாக்கம் | : | புலவர் த. கோவேந்தன் டி.லிட் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பாளர் | : | நா. பாலகிருஷ்ணன் |
| பொருள் | : | வாழ்வியல் |
| உரிமை | : | பதிப்புரிமை |
| முதற்பதிப்பு | : | ஆகஸ்ட் 1998 |
| நூலின் அளவு | : | 1 x 8 கிரௌன் |
| எழுத்து | : | 10 புள்ளி |
| பக்கம் | : | 160 |
| பைண்டிங் | : | சாதா அட்டை பைண்டு |
| விலை | : | ரூ. 35.00 |
| நூல்வெளியீடு | : | ராஜேஸ்வரி புத்தக நிலையம்<br>22, 6வது தெரு, பக்தவச்சலம் நகர்<br>பழவந்தாங்கல், சென்னை – 600 114. |
| ஒளியச்சு | : | பிஜிபி பெரிஃபெரல் சர்வீசஸ்<br>சென்னை – 33. ☎480 0992 |
| அச்சிட்டோர் | : | வசந்தா அச்சகம்<br>சென்னை – 600 005. |

# முன்னுரை

தனி மாந்தர்களுக்கோ நாடுகளுக்கோ அரசியல், சமுதாயச் சீரமைப்பின் ஊடாகவே மிகுதியான ஆக்கம் வர முடியும் எனப் பொதுவழக்காகக் கருதப்படுகின்றது. ஒரு நாட்டின் ஆக்கக் கூறாகத் தனி மாந்தர்கள் மேற்கொண்டொழுகுகின்ற ஒழுக்கம் நெறியானதாக இருக்காது. ஓர் இனத்தின் தனி மாந்தர்களிடையே ஒழுக்க நெறியினைக் குறித்த உயர்ந்த உற்றறிவு காணப்பெறின் சிறந்த அறமுறைகளும் சமுதாயச் சூழ்நிலைகளும் எப்போதும் அதைத் தொடர்ந்து வந்து சேரும். நன்னெறியை நாடிப் பின்பற்றிக் கைக்கொண்டொழுகுவதில் தளர்ச்சியும் சோர்வுமுடையவனாகி விடுகின்ற ஒரு மாந்தனுக்கோ ஒரு நாட்டிற்கோ இயற்றப்படுகின்ற எந்தச் சட்டமும் ஆக்கம் தேடித் தரவியலாது; ஏன், ஏற்படும் அழிவைக்கூட அது தடுக்க முடியாது.

ஒழுக்க அறநெறிகளே ஆக்கத்தின் அடிப்படையும், கால்கோளுமாகும். ஏனெனின், அவையே மேம்பாட்டின் உயிர் நிலை. அவை என்றென்றும் நிலைத்து நிற்கின்றன. நிலைத்து நிற்கும் மாந்தர் பண்புகள் அனைத்துமே அவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுப்பப்பட்டனவே. அவை இல்லையெனின் வலிமையில்லை; நிலைபேறில்லை, உண்மை யான இயற்பொருளில்லை; மற்றவை எல்லாம் கடிந்தழியும் கனவுகளேயாம். ஒழுக்க விதிகளைக் காணுவதென்பது ஆக்கம், மேம்பாடு, மெய்ம்மை ஆகியவற்றைக் கண்டுவிட்டதாகும். ஆகவே, அதுவே வலிமையுடையவராகத், துணிவுடையவராக, மகிழ்ச்சி உடையவராக, தன்னுரிமை யுடையவராக இருப்பதாகும்.

ஜேம்ஸ் ஆலன்

# பதிப்புரை

இன்றைய உலகில் ஒவ்வொருவரும் எப்படியாவது உயர வேண்டுமென்றும் புகழ்பெற வேண்டுமென்றும் சிறப்புற வேண்டுமென்றும் துடிக்கின்றனர். ஆனால் அவர்களுக்கு வழி வகைகள் தெரிவதில்லை. இக் குறையை நீக்கப் பல பேரறிஞர்கள் உலகெங்கும் வாழப்பிறந்தவர்களுக்கு வழிகாட்டிகளாகத் தோன்றியுள்ளனர். அவர்கள் கலங்கரை விளக்குப் போன்றவர்கள். அவர்களுள் ஒருவரே ஜேம்ஸ் ஆலன் அவர் மனித வாழ்வு சிறப்பதற்காகப் பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றைத் தமிழில் தர பலர் முயன்றுள்ளனர். அவர்களுள் நாடறிந்த தமிழில் ஆழங்கால் பட்ட புலவர் த. கோவேந்தனும் ஒருவர். அவர் துணையால் **வெற்றிக்குரிய எட்டு வழிகள்** நூல் வெளிவருகின்றது மக்கள் பயன்கொள்க.

இவண்

**நா. பாலகிருஷ்ணன்.**

# வெற்றிக்குரிய எட்டு வழிகள்

அற ஒழுக்கத்தின் அடிப்படையிலேயே ஆக்கம் அமைந்து கிடக்கின்றது. சூது, அடாவடி, ஏமாற்றல், பேராசை ஆகிய ஒழுங்கீனத்தின் அடிப்படையில் அது அமைந்து விடுவதாகப் பொதுவழக்காகக் கருதப் படுகின்றது. வாணிபச் செழிப்பு எனும் நன்மை நாணயக் குறைவு என்னும் தீமையின் விளைவுதான். பிறவகை களில் அறிவுக் கூர்மையுடையவனாயிருக்கின்ற மனிதனுங் கூட "ஒருவன் நாணயக் குறைவுடன் நடந்து கொள்ளவில்லை என்றால் அம் மனிதன் வாணிபத்தில் செழிப்புடையவனாக இருக்க முடியாது" என்று அறுதியிட்டுக் கூறுவதை நாம் சாதாரணமாகக் கேள்விப் படுகின்றோம். அத்தகைய கூற்று மேலெழுந்த வாரியான சிந்தனையற்றதாகும்; அற ஒழுக்கத்தைக் குறித்த காரணகாரியத் தொடர்பு பற்றிய அறிவு சிறிதும் இல்லாததையும், அளவில் புரிந்து கொண்டிருப்பதையுமே அது எடுத்துக் காட்டுகின்றது. இது, கள்ளிச் செடியை விதைத்துவிட்டுத் தேமாங்கனியை அறுத்தெடுக்க வேண்டும் என்று காரண காரியத் தொடர்பின் இயற்கையமைப்பில் கைகூடாத செயல்களைக் கூறுவதற்கு ஒப்பாகும்;

ஆகவே, அது முயற்சி செய்யப்படக் கூடாத ஒன்று. ஒழுக்கநெறி சார்ந்த காரண காரியத் தொடர்பமைப்பு கொள்கையளவில் வேறுபட்டதன்றி அடிப்படையில் மாறுபட்டதன்று. இயற்கைப் பொருள் களின் படிமுறைகளை மனிதன் காணுகின்றான்; அவற்றிற்குத் தக்கச் செயலில் ஈடுபடுகின்றான். ஆனால் ஆன்மீகப் படிமுறைகளை மனிதன் காணப்பெறாததால் அவை இயங்கவே இல்லையெனக் கருதி அவற்றுடன் இசைவற்றுச் செயலில் ஈடுபடுகின்றான்.

நீதிக்கதைகள், அறமொழிகள் அனைத்தும், மேதகு ஆசிரியர்களின் பழமொழி பலவும் இவ் உண்மையினை விளக்கிக் காட்டுதற்கெனத் திட்டம் செய்யப்பட்டனவே. மன உலகம் காட்சிக் குரியதாய் ஆக்கப் பெற்றதே இயற்கையுலகம். காணப்படாததின் கண்ணாடியே காணப்படுவது. ஒரு வட்டத்தின் மேற்பாகத்தை விடக் கீழ்ப்பாகம் எவ்வகையிலும் மாறுபட்டதன்று; ஆனால் அதன் உருண்டை வடிவம் தலைகீழாக இருக்கின்றது. அவை ஒரு முழுவட்டத்தின் இருநேர் பாதிகளேயாகும். இயற்கை சார்ந்தனவும், ஆன்மீகம் சார்ந்தனவும் நிலையான பகைமை கொண்டன வல்ல; ஆனால் உலகத்தின் உண்மையான ஒழுங்க மைப்பின்கண் அவை ஒன்றெனவே நிலையாக உறைகின்றன. கடமையையும், செயல் திறனையும் தவறாகப் பயன்படுத்துவதான இயற்கைக்கு மாறுபட்ட நிலையிலேயே பிரிவு பிறக்கின்றது; அந் நிலையிலேயே,

அவன் பிரிந்துவிட வேண்டி முயன்ற நிறை வட்டத்தினின்றும் அடுத்தடுத்து வருந் துன்பங்களுடன் மனிதன் வல்லந்தமாகப் பின்னொதுக்கப் படுகின்றான்.

இயற்கைப் பொருள் எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு நாம் ஆராய்ந்தால் அதன் அடிப்படைப் படிமுறைகள் மன மண்டலத்திலேயும் இருப்பதைக் காணலாம். எடுத்துக்காட்டாக, ஒரு விதை முளைவிட்டு, வளர்ச்சியாகிய மலர் அலரும் செடியாக வளர்ந்து மறுபடியும் விதையாகிற முறையை எடுத்துக் கொள்வோம். இதுவும் ஒரு மனப் படிமுறையேயாகும். எண்ணங்கள் விதைகளே. அவை மனமென்னும் நிலத்தில் வீழ்ந்து முறைவிட்டு அவற்றின் முழுமையான நிலையை அடைவதுவரையில் வளர்ந்து அவற்றின் இயல்புக்கேற்ப நற்செயல்கள், தீச் செயல்கள், அறிவு சான்ற செயல்கள் மடைமை மிக்க செயல்களாக மறுபடியும் பிறர் மனங்களில் தூவப்படவேண்டிய எண்ண விதைகளாக முடிவு பெறுகின்றன. ஆசிரியர் விதை விதைப்பவர், ஆன்மீகச் சொல்லோ உழவர்; அதேபோது தமக்குத் தாமே கற்பித்துக் கொள்ளுபவர், தமது மன நிலத்தின் சிறந்த வேளாண்மைக்காரர். ஓர் எண்ணத்தின் வளர்ச்சி ஒரு செடியின் வளர்ச்சியை ஒத்ததேயாகும்; பருவக் காலத்திற்கேற்ப விதை தூவப்பட வேண்டும்; அது அறிவுச் செடியாகவும், மெய்யுணர்வு மலராகவும் தனது முழுவளர்ச்சியைப் பெறக் காலம் தேவைப் படுகின்றது.

நான் இதை எழுதும் போது என் படிப்பறையின் பலகணிவழியே பார்வையைத் திருப்புகின்றேன்; அங்கு முந்நூறு அடிக்கு அப்பால் உயர்ந்து வளர்ந்த ஒரு மரம் உளது. அருகிலுள்ள புதர்க் காட்டினின்றும் வந்த காகமொன்று அம்மர உச்சியில் தனது கூட்டை முதல் முறையாகக் கட்டி முடித்திருக்கின்றது. ஒரு கடுமையான வடகிழக்குக் காற்று வீசுகின்றது. கடுங்காற்று தொடங்கி விட்டதன் காரணமாக மரத்தின் உச்சி முன்னும், பின்னுமாய் வேகமாக அசைகின்றது; எனினும், மரச்சுள்ளிகளாலும் பன்னாடையாலும் அமையப் பெற்ற வலுவற்ற அக் கூட்டிற்கு எவ்வித இடரும் இல்லை; அதோடு, தன் முட்டைகளின் மீதமர்ந்து கொண்டிருக்கும் அத் தாய்ப்பறவைக்குப் புயலைக் குறித்த அச்சம் இல்லை. எதனால்? மிகுந்த அளவு வலிமையையும், பாது காப்பையும் அளிக்கின்ற முறைகளுடன் கூடிய வகையில் தனது கூட்டை அப்பறவை இயல்பாகவே கட்டியிருப்பதே இதற்குக் காரணம். மரவுச்சி எத்துணைதான் அசைந் தாடுவதாயிருப்பினும், கூட்டின் அமைப்பு மாறுபடுவதோ அதன் கட்டுமானம் உலைவு படுவதோ இல்லை; மேலும், எந்த வெளிப்புற ஆட்டத்திற்கும் ஒரு பெருந்தடையாகப் பயன்படும் முறையிலும், தேவைக்கேற்ப உட்புறத்தில் நிறைவான நெருக்கம் மிகுதியாகப் பெறும் முறையிலும் கூடு அமைப்புத் திட்டத்தில் கட்டப்பட்டிருக்கின்றது; ஆகவே, காற்று எத்துணைதான் சீற்றம் கொண்டாலும் பறவைகள், பாதுகாப்புடன் வாழ்கின்றன. இது பழக்கப்பட்ட ஒரு காட்சி. எனினும், அதன் அமைப்பு

கண்டிப்பான கணித விதிக்குட் பட்டதாயிருப்பதைக் காணும்போது, ஒருவன் தன் செயல்களை நிலைபெற்ற முறைகளுடன் ஒழுங்குபடுத்திக் கொள்வது மூலமாகவே நிகழ்ச்சிகளின் உறுதியற்ற நிலை, வாழ்வின் கீழ்ப்படியாத கொந்தளிப்புகள் ஆகியவற்றின் இடையிலேயும் நிறைவான உறுதிப்பாடு, நிறைவான பாதுகாப்பு, நிறைவான அமைதி ஆகியவற்றைப் பெற முடியுமென்பதைக் கற்பித்து அறிவொளியூட்டும் ஒரு அறநெறி கதையாகவே அறிவுடையோர்க்குத் தென்படுகின்றது.

மனிதன் கட்டுகின்ற வீடோ தூக்கணாங் குருவிக் கூட்டைக் காட்டிலும் மிகவும் அதிகமான சிக்கலுடைய கட்டுமானமாகும்; எனினும், அது இயற்கையில் எங்கணும் தெளிவுபடக் காணக்கிடக்கின்ற கணிதப் படியான முறைகளுடன் கட்டப்படுகின்றது. வடிவ இயல் விழுக்காடுகளுக்கு எதிராக ஒரு கட்டிடத்தை எழுப்ப அவன் என்றுமே முயலுவதில்லை; ஏனெனின், அத்தகைய கட்டிடம் நிலையற்றது என்பதும், கட்டுமான வேலை நடந்து கொண்டிருக்கையிலேயே அவன் காதுகளில் ஒலிக்கும் வண்ணம் அது இடிந்து விழவில்லை என்றாலும், முதன் முதலாக வீசும் பெருங்காற்று பெரும்பாலும் அதைத் தரைமட்டமாக்கி விடுமென்பதும் அவனுக்குத் தெரியும். கட்டிடத்தை எழுப்புவதில் வட்டம், சதுரம், கோணம் ஆகியவற்றை மனிதன் சிற்றிழையும் தவறாது பின்பற்றுகின்றான்; அதோடு, கடுமையான புயற் காற்றுகளையும் தடுத்துத்

தனக்குக் கவலையற்ற புகலிடத்தையும், தொல்லையற்ற பாதுகாப்பையும் தரும் கட்டுமானத்தை வரைகோல், நேரறித்தூக்கு நூல், சாரங்கள் ஆகியவற்றின் உதவி கொண்டு அவன் எழுப்புகின்றான்.

இவையனைத்தும் மிக எளிது என கற்பவர் கூறலாம். ஆமாம், எளிதுதான், ஏனெனின், இது உண்மையானது, முழுமையானது. இடை நிலைப்பாடு எதையும் ஒத்துக் கொள்ளவியலாத அத்துணை உண்மையானது, எந்த ஒரு மாந்தனும் மேற்கொண்டு செம்மைப் படுத்தவியலாத அத்துணை முழுமையானது. பொருளுலகத்தில் உள்ள இந்த முறைகளை மனிதன் கற்றுக் கொண்டதுடன் அவற்றைப் பின்பற்றி யொழுகுவதில் அறிவு மேம்பாட்டையும் காணுகின்றான்; நிலைபெற்ற அதே விதிகளை மன உலகிலும் கடைப்பிடித்தொழுகும் முயற்சியை ஊக்குவிக்கும் பொருட்டே அவை இங்கு குறிப்பிடப் படலாயின; அவை எளிதானதும், என்றென்றும் உண்மையானதும், முழுமையானதுமாகும். எனினும். அவற்றின் இயல்பு ணராத அறியாமையாலும் காலமெல்லாம் தன்மீது தானே சுமத்திக் கொண்டிருக்கும் கேட்டினை உணராமையாலும், இன்றைய நிலையில் மனிதன் அவற்றை மீறியே நடக்கின்றான் என்பது மிகச் சிறிதளவே புரிந்து கொள்ளப் பட்டிருக்கின்றது.

தன்னறிவிற்குத் தெரிந்தோ தெரியாமையாலோ அது புறக்கணிக்கப் பட்டுவிட்டால் அழிவிற்கும்

தோல்விக்கும் நம்மை அழைத்துச் சென்றுவிடும். உண்மையில் உலகில் உள்ள நோக்காட்டுக்கும், துன்பத்திற்கும் காரணம் இந்த விதியை அறியாமையால் மீறுவதேயாகும். மனத்தைப் பொறுத்தவரை அற ஒழுக்கப்படி உணர்ந்தறியப்படுகின்றது. கணிதப்படி முறையும், ஒழுக்கப்படி முறையும் தனித்தனியானதில்லை, எதிர்மறையானதுமில்லை. அவை ஒன்று பட்ட முழுமையின் இரு கூறுகளேயாகும். சடப்பொருள் அனைத்தையும் கட்டுப்படுத்துகின்ற கணக்கியலின் நிலைப் பெறு நியதிகளை உடலென்று கொண்டால் நன்னெறியே அதன் உயிர்நிலை; அதேபோது, ஒழுக்கநெறியின் நிலையான முறைகள் மனமென்னும் உலகத்தில் இயங்குகின்ற கணிதப்படியான பொதுவுண்மைகளாகும். ஒழுக்க முறைகளிலிருந்து நீங்கி வெற்றிகரமாக வாழ்வது என்பது கணிதப்படியான முறைகளைப் புறக்கணித்து விட்டு வெற்றியுறக் கட்டுமானத்தை முடித்தல், இயலாத கூற்றேயாகும். குணவியல்புகளும் ஒழுக்கம் எனும் விதியின் அடிப்படையில் கட்டப்படுவதால் மட்டுமே வீடுகளைப் போன்று உறுதியாய் நிற்கின்றன; ஏனெனின், குணவியல்புக் கட்டுமானத்தில் செயல்பாடுகளே செங்கல்களாகும். தொழில்களும், மனிதமுயற்சிகள் அனைத்தும் இந்த நிலையான முறைமையிலிருந்து விதிவிலக்கப்படவில்லை; ஆனால் நிலைபெறு விதிகளைப் பின்பற்றுவதால் மட்டுமே அவை பாதுகாப்புடன் நிலைக்கமுடியும்.

எந்த ஒரு சமூகத்திலும் நிலையாக ஆக்கஞ் சேர் மக்களாக இருப்போர் அச் சமூகத்திலுள்ள எத்தர்களும், ஏமாற்றுக்காரர்களுமல்லர். ஆனால், நம்பிக்கைக்கு உரியவராயிருப்போரும் நேர்மைக் குணம் படைத்த மக்களுமேயாவர். இந்திய சமூகத்தின் தமிழர்களே மிகவும் நேர்மை படைத்த மக்களாகக் கூறப்படுவர்; அவர்களின் மக்கள் தொகுதி சிறிதேயாயினும் அவர்களே அதிகமான பண்பாட்டுச் செழிப்புள்ளவர்கள்.

“வாணிபக் கட்டுமானம்” குறித்து மக்கள் பேசுகின்றனர்; செங்கல்லால் கட்டப்பட்ட ஒரு வீடு போன்றோ கருங்கல்லால் கட்டப்பட்ட ஒரு தேவாலயம் போன்றோ வாணிபமும் ஒரு கட்டிடமே; அவ்வாறிருப்பினும், அக் கட்டுமானப் படிமுறை மனம் சார்ந்ததாகும். வீட்டின் மேலுள்ள கூரைபோன்று ஆக்கம் மனிதனின் தலைக்குமேல் அமைந்து அவனுக்கு பாதுகாப்பும், ஆறுதலும் அளிக்கும் ஒரு கூரையாகும்; ஆதாரத்திற்கு ஓர் அடிநிலை இன்றியமையாததாகி விடுகின்றது. ஆகவே, ஆக்கம் எனும் கூரை கீழ்க்காணும் எட்டு ஆதாரங்களால் நிலைப்படுகின்றன; இவை ஒழுக்கத்திண்மை எனும் அடிநிலையில் பொருத்தப் பெற்றிருக்கின்றன.

1. ஆற்றல்
2. சிக்கனம்
3. சால்பு
5. இரக்கம்
6. இயல்பார்வம்
7. நடுவு நிலைமை

4. முறைமை     8. தற்சார்பு

இந்த முறை அனைத்தையும் தவறாது கடைப்பிடித்தொழுகும் அளவிற்கு அத்துணை உறுதியானதாகவும், நீடித்து நிலைபெறுவதாகவும் அமைந்துவிடும். அதனின் ஆக்கத்தை எதுவும் நிலைகுலையச் செய்ய முடியாது; அதனின் வெற்றியை எதுவும் குறுக்கிட்டுத் தடுக்கவோ தரைமட்டத்திற்குக் கொண்டுவரவோ முடியாது. அதற்கு மாறாக, இந்த முறைகளைப் பின்பற்றாத நிலை எங்குளதோ அங்கு எவ்விதமான வெற்றியும் ஏற்படுவதில்லை அங்குத் தொழிலேனும் இருக்க ஏதில்லை; எப்பொருளாயினும் அதற்கு உயிரூட்டி உடலும், உருவமும் கொடுக்கின்ற இயல்பும், திண்மையும் இல்லாத நிலையிருக்கும். இந்த முறைகளைத் தன் மனத்தே கொள்ளாதவனாய் ஒரு மனிதனைப் படம் பிடித்துப் பார்க்கும்போது, குறைகளைக் குறித்த நமது அறிவு சிறிதளவாயினும், நிறைவுநிலை பெறாதாயினும் எவ்வித வெற்றிகரமான பணியைச் செய்பவனாகவும் அம்மனிதனை நாம் நினைத்துப் பார்க்க முடிவதில்லை.

மிகுதியான அளவிலோ குறைந்த அளவிலோ இந்த முறைகளே எவ்வகையான வெற்றியாயினும், அவையனைத்திற்குமான காரணக் கூறுகளாகும். ஆக்கம் அனைத்துடையவும் அடித்தளத்தில் இவையே வலுவுள்ள ஆதாரங்களாய் இருக்கின்றன; அத்தகைய

ஒரு முடிவிற்கு வருவதற்குத் தோற்றங்கள் எத்துணை தான் எதிராயிருப்பினும், மக்கள் வெற்றியென அழைக்கும் சிறப்பை முடி சூடுகின்ற ஒவ்வொரு முயற்சியையும் அவையே உருவமைத்து நிலைப் படுத்துகின்றன.

ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த எட்டு அறங்கள் அனைத்தையும் அவற்றின் முழுமையான, நிறைவான நிலையில் வெற்றிவாய்ப்புள்ள ஒருசில மக்களே கைக்கொண்டொழுகுகின்றனர் என்பது உண்மையே. அவ்வாறு செய்பவர்கள் இருக்கவே செய்கின்றனர்; அவர்களே தலைவர்கள், ஆசிரியர்கள், மனித வழிகாட்டிகள், மனிதச் சமூக ஊன்றுகோல்கள், மனித இன வளர்ச்சி அணியின் வலிமைவாய்ந்த முன்னோடிகள்.

ஒரு மனிதனுடைய ஒழுக்கவரம்புகள் அவனுடையும் வெற்றியின் வரம்புகளைக் குறித்து விடுகின்றன. எனவே, ஒருவனுடைய ஒழுக்கத் தகுதியைத் தெரிந்து கொள்வதே, அதைக் கணிதப்படி மதிப்பீடு செய்வதே, அவனுடைய இறுதியான வெற்றியையோ தோல்வி யையோ தெரிந்து கொள்வ தாகும். ஒழுக்கத் தூண்களால் தாங்கப்படுவது வரையில் தான் ஆக்கமெனும் கோயில் நிலைபேறு கொள்ள முடியும்; அவை வலுவிழந்துவிடின், அது இடர் சூழ்ந்ததாகி விடுகின்றது. அவை பின்னிழுக்கப்பட்டு விட்டால் அது அழிந்து மடியும்படி அசைந்தாடிச் சாம்பலாகிவிடுகின்றது.

ஒழுக்க முறைகளைப் புறக்கணிக்கவோ மீறவோ செய்யின், அங்கு இறுதியில் இயற்கையமைப்பின் காரண காரியத் தொடர்பு முறையிலேயே தோல்வியும், ஏமாற்றமும் இன்றியமையாத விளைவுகளாகி விடுகின்றன; மேல்நோக்கி எறியப்படுகின்ற கல் நிலத்துக்குத் திரும்பி வருதல் போன்று, நல்லதோ கெட்டதோ ஏவி விடப் படுகின்ற ஒவ்வொரு செயலும் நம்மீதே திரும்பி வருகின்றது. தீய நெறியானதோ நெறியற்றதோவான ஒவ்வொரு செயலும் அது குறிக்கொள்கின்ற முடிவையே முறியடித்துவிடுகின்றது. அதற்கு மாறாக, ஒழுக்கநெறி சார்ந்த ஒவ்வொரு செயலும் ஆக்கமெனும் ஆலய அமைப்பின் பிறிதொரு திண்மையான கல்லாகும்; அதைத் தாங்கி நிற்கும் தூண்களுக்குப் பிறிதொரு வலிமையும், செதுக்கப்பட்ட சிற்ப அழகும் அதுவே.

ஒழுக்க வலிமையிலும், அறிவிலும் தமக்குள்ள வளர்ச்சியுடன் இசைந்தே தனிமனிதர்களோடு, குடும்பங்களும், நாடுகளும் வளர்ந்து வளம் பெறுகின்றன; அம்மக்களின் ஒழுக்கச் சிதைவுக்கேற்ப அவர்கள் வீழ்ந்து தோல்வியடைகின்றனர்.

உலகப் பொருளில் அமைந்திருப்பது போலவே மனவியலிலும் உருவமும், திண்மையும் உடைய தாயிருப்பது மட்டுமே நின்று நிலைபெற முடியும். தீயநெறி என்பது வெறுமை; அதனின்று எதையுமே உருவமைக்க முடியாது. அது அடிப்படையின் எதிர்மறை, நெறியின்மை என்பது அழிவு. அது உருவத்தின் எதிர்மறை. அது

உள்ளக வெறுமை உண்டுபண்ணும் படிமுறையேயாகும். ஒழுக்க நெறியே அந்த அறிவுள்ள சிற்பி. ஒருவனிடம் அமைந்துள்ள ஒழுக்கமே அடிப்படை உருவம், கட்டமைக்கும் ஆற்றல் அனைத்தும் ஆகும். எப்போதும் தோல்வியடைந்து அழிவையும் உண்டு பண்ணுகின்ற நெறியின்மைக்கு எதிர்மறையாக இருப்பதால், ஒழுக்கநெறி எப்போதும் கட்டமைத்துக் காக்கின்றது; ஏனெனின், அதுவே அதன் இயல்பு. தனிமனிதர்களி டையேயும் சரி நாடுகளிடையேயும் சரி ஒழுக்க நெறியே எங்கணும் சிறந்த சொத்தாகும்.

ஒழுக்கநெறி தோற்கடிக்கப்பட முடியாதது; இறுதிவரை அதில் உறுதியாக நிற்பவன் கைப்பற்ற முடியாத ஓர் அரணில் இருப்பவனாகின்றான்; எனவே அவனுடைய வெற்றி உறுதியாக்கப்பட்டு விடுகின்றது. அவனுக்குத் துன்பங்கள், மிகக் கூடுதலான அளவில் ஏற்பட்டே தீரும்; ஏனெனின் போரின்றி வெற்றியிருக்க முடியாது. மேலும், நேர்த்தியாகவும், நிறைவுற்றதாகவும் கைவினைப் பட்டிருக்கும் பிற ஒவ்வொன்றைப் போலவும், அவைகளின் வலிமையை ஆய்வுசெய்து உண்மையெனக் காட்டுவது நிலைபெறு அற முறையில் நடப்பதாகும். உலகில் வலுவுடைய, இணையற்ற தேவைகளை நிறைவேற்ற வேண்டிய உருக்குக் கம்பிகள் வார்ப்படைத் தொழிற்சாலையினின்றும் வெளியே அனுப்படு முன்பு அவற்றின் உரத்தையும், தகுதியையும் ஆராயும் பொருட்டு இரும்பு பதப்படுத்துவோரால் அவை ஆய்வுக் குட்படுத்தப் பட்டேயாக வேண்டும்.

கடுமையான வெப்பத்தால் உடைந்து விடுகின்ற செங்கல்களைச் செங்கல் செய்பவர் ஒதுக்கி எறிந்து விடுகின்றார், எனவே, மிகப் பெரிய அளவிலும் நீடித்து நிலைபெறும் வகையிலும் வெற்றியடைய வேண்டிய ஒருவன் தீங்கான சூழ்நிலைகளின் கடினப்பாடுகளைத் தாண்டிவிடுவான்; மேலும், அவாவெழுச்சியெனும் நெருப்பு அவனுடைய ஒழுக்க இயல்பிலிருந்து வெறுமனே வேரறுக்கப்படுவதில்லை; அது வலிமையூட்டப் பெற்று அழகு மேற்றப் படுகின்றது. உயர்ந்த தேவைக்குத் தகுதியாயிருக்கின்ற நிலையில் நன்கு கைவினைப்பட்ட உருக்குக் கம்பியைப் போன்று அவனிருப்பான்; இரும்மைப் பதனிடுவோர் நன்கு கைவினைப்பட்ட கம்பிகளைக் கவனித்துக் கொள்வது போன்று, அவனைப் பயன் நழுவிவிடாதபடி உலகம் கவனித்துக் கொள்ளும்.

நெறியற்ற மனிதன் தனது தீய வழிப்பலன்களைக் கண்டு உள்ளூர நகைத்துக் கொண்டிருக்கும் வேளையில், ஏற்கனவே அவனுடைய சட்டைப் பையில் இருக்கின்ற ஓட்டையின் வழியே அவனுடைய பொன் விழுந்து கொண்டேயிருக்கின்றது. ஒழுக்க நெறியுடன் வாழ்வு தொடங்குபவனும் ஆய்வுநிலையின் வேளையின் போது பலன் கருதி அதைக் கைவிடுவானேயாகில், அவன் முதன் முதலில் சூடேற்றப்பட்டதும் உடைந்து விடுகின்ற செங்கல்லைப் போன்றவனே ஆவான்; அவன் உதவிக்கு உகந்தவனன்று; உலகம் அவனை உதறியெடுத்து விடுகின்றது; முடிந்த முடிவாகவே

அவ்வாறு உதறப்பட்டு விடுவதில்லை. ஏனெனின், அவன் உயிருள்ள மனிதன், செங்கல்லன்று; அவன் வாழமுடியும், கற்றுக் கொள்ள முடியும்; இரங்கிச் சீர்திருந்த முடியும், இழந்ததைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வெற்றியைத் தருவதும், உயிரோட்டமும், ஆக்கம் அனைத்திற்கும் வலிமையூட்டும் கருப்பொருளும் ஒழுக்க ஆற்றலேயாகும்; ஆனால், வெற்றியில் பல்வேறு நிலைகள் உள்ளன. எனவே, பேரளவானதும் நீடு நிலைப்பதுமான வெற்றியை அடையும் பொருட்டு மனிதன் ஒவ்வொரு திசையில் தோல்வியுற்று விடுதல் அடிக்கடி இழிவானதாகி விடுகின்றது. ஆனால் இந் நூலில் விளக்கப்படுகின்ற பொருள், ஓர் அறிவனோ, ஓர் ஆன்மீக மேதையோ பெறுகின்ற வெற்றியைப் பொறுத்ததன்று; ஆனால், சாதாரண ஆண், பெண்ணுடைய சேமம், நல்வாழ்வு, மகிழ்ச்சி ஆகியவற்றில் அக்கறை கொள்ளும் வெற்றியைப் பொறுத்ததே யாகும்; ஒரே சொல்லில் கூறுவதென்றால் மனித இனத்திரளின் ஆக்கத்தைப் பொறுத்ததாகும்; அதாவது, முன்னிலைப்படுவதாலும், இம்மைக்குரியதாயிருப்பதாலும் அது ஏறத்தாழ செல்வத்தைப் பொறுத்ததாயிருப்பினும் அதனிடத்தே அடைப்பட்டுவிடாமல், மனிதச் செயல்கள் அனைத்தையும், குறிப்பாக மகிழ்ச்சி என்றழைக்கப் படுகின்ற மனநிறைவையும் ஆக்கம் என்றழைக்கப் படுகின்ற ஆறுதலையும் உண்டு பண்ணுகின்ற சூழ்நிலைகளுடன் தனி மனிதன் கொண்டிருக்கின்ற

பிணைப்பைச் சார்ந்த செயல்வினைகளைப் பரந்து தழுவிக் கொள்கின்ற வெற்றியும், ஆக்கமுமாகும். மனித இனத்திற்கு அத்துணை விருப்பம் ஊட்டுகின்ற இப் பயனை எய்தற்கு எட்டு அறமுறை எவ்வாறு இயங்குகின்றன. ஆக்கம் எனும் கூரை அதனைத் தாங்கி நிற்கும் அடிநிலைகளால் எவ்வாறு மேலெழுப்பப்பட்டுப் பாதுகாப்புப் பெறுகின்றது என்பதை நாம் இனிக் காண்போம்.

# ஆற்றல்

வெற்றி அனைத்துக்கும் பொருள் இயக்கு நிலையே, ஆற்றலாகும். உயிர்பற்ற நிலக்கரியை அது நெருப்பாக மாற்றிவிடுகிறது; நீரை ஆவியாக மாற்றுகின்றது; மிக எளிய திறமை நுண்திறமையாக வளருவதுவரை அதற்கு உயிரூட்டிப் பலப்படுத்துகிறது; அது அறியாமை மனத்தைத் தொடுகின்ற வேளையில் முன்பு இயங்காத் தன்மையில் உறங்கிக் கொண்டிருந்த ஒன்றை உயிர்ப்புள்ள ஒரு நெருப்பாக மாற்றிவிடுகின்றது.

ஆற்றல் ஓர் ஒழுக்க அறம்; சோம்பல் அதன் எதிர்மறையான மறம். அறம் என்ற நிலையில் ஆற்றல் பண்படுத்த வேண்டியதாகும்; முயற்சியுடனிருக்கத் தன்னைத் தானே எழுச்சியூட்டிக் கொள்வதின் மூலம் சோம்பேறியான மனிதனும் சுறுசுறுப்புள்ளவனாக மாறிவிடலாம். சுறுசுறுப்புடைய மனிதேனாடு ஒப்பிடுகையில் சோம்பேறியானவனை அதில் பாதியளவு கூட உயிருள்ளவனாகக் கொள்ள முடியாது. சோம்பேறி மனிதன் உறக்கத்திலிருந்து தன்னைத் தான் தட்டியெழுப்பு முன்னரே சுறுசுறுப்புடைய மனிதன் குறிப்பிடத்தக்க அளவு வேலையைச் செய்து முடித்துவிடுகின்றான்; சோம்பேறி மனிதன் ஒரு வாய்ப்புக்காகக் காத்துக் கொண் டிருக்கையில், சுறுசுறுப்புள்ளவன் வலியச் சென்று ஐந்தாறு

வாய்ப்புக்களைத் தானே வருந்திக் கண்டு பயன்படுத்தி விடுகின்றான். முன்னவன் தன் கண்களைக் கசக்கிக் கொண்டிருக்கின்ற வேளையிலேயே பின்னவன் காரியங்களைச் செய்து முடிக்கின்றான்.

ஆற்றல் மூல ஆற்றல்களில் ஒன்று; அதுவின்றி எதையுமே செய்து முடிக்க வியலாது. செயல் வகைகள் அனைத்திற்கும் அதுவே அடிப்படையான மூலக்கூறு. இவ் உலகம் முழுமையாகப் புரியாததாயினும், சோர்வற்ற தாயிருக்கின்ற ஆற்றலின் தோற்றக் காட்சியேயாகும். ஆற்றலே வாழ்வு; ஆற்றலின்றி வாழ்வுமில்லை. ஒரு மனிதன் செயல்படத் தவறுவானேயானால் அவன் இறந்தவனேயாவான். மனத்தைப் பொறுத்த நிலையிலும், உடலைப் பொறுத்த நிலையிலும் மனிதன் செயல் படுதற்காகவே உருவாக்கப் பட்டிருக்கின்றானே அன்றி பன்றித்தனமான இளைப்பாறுதல் பெறுதற் காகவன்று. உடலிலுள்ள தசைநார் ஒவ்வொன்றும் முயற்சிக்கான நெம்புகோலாகும். ஒவ்வோர் எலும்பும் நாடி நரம்பும் உழைப்பிற்காகவே உருவாக்கப் பட்டிருக்கின்றன; நேர்மையாகப் பயன்படுத்தப் படுதற்காகவே ஒவ்வோர் இயக்கமும், செயல் திறனும் அமையப் பெற்றிருக்கின்றது. முயற்சிகள் அனைத்தும் செயல்படுதலையே தம் முடிவாகக் கொண்டிருக்கின்றன; செயல்திறங்கள் அனைத்தும் பயன்படுத்தப் படுவதிலேயே வாழ்வில் நிறைவு நிலை எய்துகின்றன.

வாழ்வில் சோம்பேறியான மனிதனுக்கு ஆக்கம் இல்லை; மகிழ்ச்சியில்லை; தஞ்சமில்லை; ஓய்வுமில்லை; அவன் நாட்டங் கொள்கின்ற இளைப்பாறுதல் கூட

அவனுக்குக் கிடைப்பதில்லை; எனவே, திறமையுடன் முறைப்பாடாக உழைப்பதைத் தவிர்ப்பதால் மிகக் கடுமையான பளுவைத் தன்மீது சுமத்திக் கொள்கின்றான் என்ற பொருள்பட "சோம்பேறியான மனிதனே மிகக் கடுமையாக உழைக்கின்றான்" என்று முதுமொழி பொருட் செறிவுடன் கூறுகின்றது.

ஆற்றல் வாய்ந்த மனிதன் ஒரு நோக்கத்தையோ பல நோக்கங்களையோ செய்து முடிப்பதில் தன்னை முனைப்புடன் ஈடுபடுத்திக் கொள்கின்றான். நோக்கம் நன்மையான ஒன்றாக இருக்கலாம்; அன்றித் திண்மையான ஒன்றாக இருக்கலாம்; ஆனால், திண்மையாகவிருப்பின், அது தன் முன்கை முட்டியால் சுவரில் குத்தித் தன் கையினையே காயப்படுத்திக் கொள்கின்ற ஒருவனைப் போன்று, செய்பவனையே அழித்துவிடும் அளவிற்கு எதிர்தாக்குகின்ற வகையில் ஆற்றலைத் தவறாகப் பயன்படுத்துவதாகும். உழைப்பாற்றல் எப்போதும் நன்மையானதே. நன்னோக்கில் செயல்புடுத்துகையில் மட்டுமே அது பயனுடைய தாகவிருக்கும்; அந்த நோக்கங்களை அடைந்துவிட்டால் அது மகிழ்ச்சி, வெற்றி, ஆக்கம் ஆகியவற்றை உருவாக்குகின்றன.

ஆற்றலே இல்லையெனும் நிலையைவிட ஆற்றல் தவறாகவேனும் செயல்படுத்தப் படுகின்ற நிலை சிறந்ததேயாகும். "வெப்பமாகவோ குறிர்ச்சியாகவோ நான் உன்னை ஏற்றுக் கொள்வேன்; நீ இளஞ் சூடாகவிருந்தால் உன்னை என் வாயினின்றும் நான் உமிழ்ந்துவிடுவேன்" என்று புனித ஜான் அவர்கள் கூறிய தொடர்களில் இது

வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கின்றது. உழைப்பாற்றலை உருமாற்றும் செயற்பாடு அதனுடைய நன்மையானதும், தீமையானதுமான கூறுகளில் இருப்பதையே வெப்பத்தினுடையவும், குளிர்ச்சியினுடையவும் உச்ச நிலைகள் இங்குக் குறிப்பிடுகின்றன.

"பெருமளவில் பாவியாக இருப்பவனே பெருமளவில் ஒழுக்கவாணராகிவிடுகின்றான்" என்ற முதுமொழியில் இந்த உண்மை மிக அழகாகச் சித்திரிக்கப் பட்டிருக்கின்றது.

ஆற்றலே உயிர்ப்புடையது. அதின்றி எதையும் செய்து முடிக்கவியலாது; அறமேனும் அங்கிருப்பதில்லை; ஏனெனின், அறமென்பது தீமையைச் செய்யாமலிருப்பதில் மட்டும் அடங்கியிருப்பதன்று. ஆனால், முதன்மையாக நன்மை செய்வதிலேயும் அடங்கியிருக்கின்றது. இதை முயற்சி செய்பவர்கள் இருப்பினும் கூட, ஆற்றல் போதாமையால் தோல்வியடைந்து விடுகின்றனர். அவர்களுடைய முயற்சிகள் ஆக்கமான பயன்களை உண்டுபண்ணப் போதிய வலுவற்றனவாயிருக்கின்றன. அத்தகையோர் தீயநெறி கொண்டவர்களல்லர்; அவர்கள் எப்போதுமே மன மறிந்து கேடு செய்வதில்லை என்பதற்காக நன்மக்கள் தோல்வியுற்றுவிடுவதாக வழக்கமாக அவர்களைக் குறித்துப் பேசப்படுகின்றது. ஆனால், கேடு செய்வதற்கான முண்டு இல்லாமை நன்மை வழி நடப்பதாகாது; அந்நிலை வலுவும் ஆற்றலுமின்றி இருப்பதேயாகும். கேடு விளைத்தற்கான ஆற்றலிருந்தும் நன்மையான வழிகளில் தம் ஆற்றல்களை நெறிப்படுத்த வேண்டுமெனத் தேர்ந்து தெளிபவனே உண்மையில் நல்ல

மனிதனாவான். எனவே, ஆற்றல் இல்லாத நிலையில் ஒழுக்க ஆற்றல் இருப்பதில்லை. இருக்கின்ற நன்னெறிப்பான்மை உள்ளுறைவதாகவும், உறங்குவது மாகவே இருக்கும்; இயக்கச் சத்தியன்றுத் தானே இயங்குகை இல்லாதவாறு போன்று நன்மையுந் தானே நகருவதில்லை.

வாழ்வின் ஒவ்வொரு துறையிலும், உலகப் பொருளியலான திசைகளிலாயினும் சரி, ஆன்மீக திசைகளிலாயினும் சரி, செயல்கள் அனைத்திலும் ஆற்றலே அறிவுறுத்து ஆற்றலாக அமைந்திருக்கின்றது. படைவீரனிடமிருந்து மட்டுமன்றி, ஒவ்வொரு சிந்தனை நிலையிலுமுள்ள ஒவ்வோர் ஆசிரியன் வாயினின்றோ எழுதுகோலினின்றோ பறிக்கின்ற செயலுக்கான அழைப்பு, உறங்கிக் கொண்டிருக்கும் தனது ஆற்றலைத் தட்டியெழுப்பிக் கொண்டு கடமையை ஊக்கத்துடன் செய்யுமாறு மக்கட்கு விடுகின்ற அழைப்பேயாகும். வாழ்வின் கோணங்கள் அனைத்திலுமே ஒரே வகையான ஆற்றல் தேவைப்படுகின்றது; படை வீரர், பொறியியல் வல்லுநர், வணிகர் ஆகியோருக்குரிய விதிகள் மட்டுமே செயல் முறை விதிகள் என்பதில்லை; திருநிலையினர், அறிவர்கள், ஒழுக்கவாணர்கள் ஆகியோரின் கட்டளைகள் அனைத்துமே செயல்முறை குறித்த கட்டளைகளேயாகும்.

"மிகவும் விழிப்புணர்ச்சியுடன் இரு" என்று தம் மாணவர்களுக்குப் பேராசிரியர்களில் ஒருவர் கூறிய அறிவுரை, ஒருவன் கொண்ட குறிக்கோள் கைகூட வேண்டுமெனின் சோர்வற்ற ஆற்றல் இன்றியமையாதது என்பதைச் சுருக்கமான சொற்களில் விளக்கிக்

காட்டுவதாயிருக்கின்றது; "ஓயாத விழிப்புணர்ச்சியே விடுதலையின் விலையாகும். ஏதேனும் செய்து முடிக்க வேண்டுமெனின், மனிதன் தானே அதைச் செய்வானாக; அதை ஊக்கத்துடன் பொருதுவானாக" என்று கூறியிருப்பதுவும் அதே ஆசிரியரேயாகும். செயற்பாடு படைப்புத் திறனுடையது, அதை முறைப்படி பயன் படுத்துங்கால் பெருக்கமும், வளர்ச்சியும் தொடர்ந்து வந்துச் சேரும். மேலும் அதிகமான ஆற்றலைப் பெற வேண்டுமெனின், நம்பால் ஏற்கனவே அமைந்துள்ள ஆற்றலை அதன் முழு அளவிற்கு நாம் பயன்படுத்தியாக வேண்டும். இருப்பவனுக்கே மேலும் தரப்படுகின்றது, ஏதேனும் ஒரு கடமையில் ஊக்கமுடன் தனது கையை வைப்பவனுக்கே ஆற்றலும் விடுதலையும் வந்து சேர்கின்றன.

ஆற்றல் படைப்புச் சத்தியுடையதாயிருக்க நன்னோக்குகளை நோக்கி அது திருப்பப்படுதல் மட்டும் போதுமானதாகாது அதனை அக்கறையுடன் கட்டுப் படுத்திப் பேணிக் காக்கவும் வேண்டும். 'ஆற்றலைப் பேணிக் காத்தல்' என்பது எந்த ஆற்றலும் வீணாக்கப் படுவதோ அழிந்துபடுவதோ இல்லை என்ற இயற்கையின் விதியை எடுத்துரைக்கும் தற்காலச் சொல்லாகும்; தன் ஆற்றல்களின் விளைவுகள் பயனுடையதாய் இருக்கவேண்டுமெனின், மனிதன் இந்த அடிப்படையில் அறிவுத் திட்பமுடன் பணியாற்ற வேண்டும். கூச்சலும், பரப்பரப்பும் மிகுதியான அளவு ஆற்றல் வீணாவதேயாகும். இயங்கிக் கொண்டு இருக்கின்ற ஆவியில் இரைச்சல் கேட்பதே இல்லை. தப்பி வெளியேறும் ஆவியே

மிகுதியான இரைச்சலை உண்டு பண்ணுகின்றது. திட்பமிக்க வெடிமருந்தே குண்டைக் குறிவைத்த இடத்திற்குச் செலுத்துகின்றது.

மனிதன் தன் ஆற்றல்களைப் பேணிக் காத்துத் தன் குறிக்கோள் நிறைவேற்றுதற்காக அவற்றை ஒருமுகப்படுத்திப் பலப்படுதுகின்ற அளவிற்கு அவன் ஆறுதலும், அமைதியும், ஒய்வும், பெறுகின்றான். கூச்சலைச் சக்தியென்று பொருள் கொள்வது பெரும் மயக்கமாகும். அதட்டி வெருட்டும் புகழேங்கியான பெரிய குழந்தையை யாருமே இயக்க வியலாது. உடலைப் பொறுத்த அளவிலேயே அவன் மனிதன்; ஆனால், மனத்தைப் பொறுத்த அளவில் அவன் ஒரு கைக் குழந்தையேயாகும் ; எதையும் செய்ய வலிமையில்லாத நிலையிலும், பிறர்க்குக் காட்ட வேலைப்பாடு இல்லாத நிலையிலும், தான் சாதித்தது என்ன, தான் சாதிக்கக் கூடியது என்ன என்பதை இரைந்து பறைசாற்றுவதன் மூலம் அதை ஈடுசெய்ய முற்படுகின்றான்.

"அசைவற்ற நீர்த்தேக்கம் ஆழமாகவே இருக்கின்றது"; பெரும் உலகின் ஆற்றல் செவிப் புலனாகாதவையாகவே இருக்கின்றன. அமைதி எங்குளதோ அங்கே மிகப் பெரிய ஆற்றலுமுள்ளது. வலிமையான, நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஆறுதலாக ஒழுங்குபடுத்தப்பட்ட மனத்தின் திண்ணமான குறியீடு அமைதியேயாகும். அமைதியான மனிதனுக்கு அவனுடைய தொழில் முறை தெரியும் என உறுதியாக நம்பலாம். அவன் பேசுகின்ற சொற்கள் சிலவே, ஆயினும் அவை பல கூறும். அவனுடைய வழிவகைகள் நன்கு திட்டஞ்செய்யப்பட்டவை;

அவை நன்கு சமனாக்கப்பட்ட இயந்திரம் போன்று இயங்குதல் உண்மையேயாகும். முன்னோடும் நெடுந் தூரத்தை அவன் காணுகின்றான்; நேராகத் தன் குறிக்கோள் நோக்கிச் செல்லுகின்றான். இடர்ப்பாடு எனும் பகைவனை அவன் நண்பனாக மாற்றிவிடுகின்றான்; "எதிரி தன் வழித்துணையாகும் போது அவனுடன் ஒத்திணங்க" இவன் நன்கு கற்றுக் கொண்டுவிட்டதால் நலஞ் சேரும் வகையில் அவனைப் பயன்படுத்திக் கொள்கின்றான். கூரறிவு படைத்தளபதியைப் போன்று ஏற்பட விருக்கும் நெருக்கடிகள் அனைத்தையும் அவன் முன்னறிந்து கொண்டவனாகின்றான். அவனுடைய சிந்தனைகளில் தீர்ப்பின் அறிவுரைகளில் அவன் காரணங்களைக் கலந்தாராய்ந்து தற்செயல் நிகழ்ச்சிகள் அனைத்திலுமுள்ள சிறப்பைக் கண்டறிகின்றான். அவன் என்றுமே வியப்பிற்கு ஆளாவதில்லை; என்றுமே பரபரப் படைவதில்லை; தனது சொந்த உறுதிப்பாட்டைப் பாதுகாப்புடன் கொண்டு செலுத்துவதோடு, தனது ஆதரவைப் பொறுத்து உறுதியுடனும் இருக்கின்றான்.

களைப்பினால் செத்துச் செயலற்று நிற்கும் நிலையிலிருந்து வேறுபட்டது அமைதி. அது ஒருமுகப்படுத்தப்பட்ட ஆற்றலின் உச்சியாம். அதன் அடித்தளத்தில் குவிமையப் படுத்தப்பட்ட மனநிலை அமைந்திருக்கின்றது. கலக்கத்திலும், கிளர்ச்சியிலும் மனநிலை சிதறிவிடுகின்றது. அது பொறுப்பிழந்து ஆற்றலோ, சிறப்போ இல்லாதாகிவிடுகின்றது. குழப்பமுற்றவனாகவும், சிடுசிடுப்பாகவும் சீற்ற முற்றனாகவும் இருக்கும் மனிதனுக்குச் செல்வாக்கு இருப்பதில்லை. அவன் கடிந்து விலக்குகிறானே அன்றிக்

கவருவதில்லை. மெத்தனப் போக்குடைய அண்டை வீட்டுக்காரன் வெற்றியடைவதும், அவனைப் பிறர் நாடிச் செல்வதும், அதேபோது எப்போதுமே பரபரப்பும், கவலையும், தொந்தரவையும் கொண்டுள்ள தான் தோல்வியடைவதும், தன்னைப் பிறர் தவிர்த்து கடப்பதுவும் ஏன் என்று அவன் வியப்புறுகின்றான். அண்டை வீட்டுக்காரன் அமைதியான மனிதனாக இருப்பதாலும் ஆழ்ந்தாய்ந்து செயலாற்று பவனாக இருக்கின்றான்; மிகுதியான வேலைகளை விரைந்து முடிப்பதன்றி அதை மிகத் திறமையோடும் செய்து முடிக்கின்றான்; மேலும், மிகுந்த தன்னடக்கமும், ஆண்மையும் உடையவனாக இருக்கின்றான். இதுவே அவனுடைய வெற்றிக்கும் செல்வாக்கிற்கும் காரணமாகும். அவனுடைய ஆற்றல் அடக்கியாளப்பட்டுப் பயன் படுத்தப்படுகின்றது. அதேபோது அடுத்த மனிதனின் ஆற்றல் சிதறிச் சின்னாபின்ன மடைகின்றது.

ஆக்கமெனும் ஆலயத்தின் முதல் அடிநிலை ஆற்றலேயாகும்; முதன்மையானதும், சிறப்பானதுமான இந்த ஆற்றலின்றி ஆக்கம் இருக்கவே முடியாது. ஆற்றலில்லையெனின் திறமையில்லை என்றுதான் பொருள்படும். உழைப்பிற்கான இயற்கை விருப்பு அங்கில்லை யாதலால் ஆண்மை மிக்க தன்மதிப்பும், தன்னுரிமையும் இருப்பதில்லை. வேலையில்லாதோரில் பலர் உழைப்பிற்குரிய முதல் இன்றியமையாத ஆற்றல் இல்லாத காரணத்தால் மட்டுமே வேலைக்கு அமர்த்தப்பட முடியாதவர்களாக இருப்பதைக் காணலாம். உடல் கொழுத்தும், மனம் மந்தமாகவும் இருக்கும் மனிதன் இருக்கின்ற தனது போக்கை ஒவ்வொரு நாளும்

மிகுதியாக்கி, உழைப்பிற்குத் தன்னை மேலும் தகுதியற்றவனாக்கி, அதன்மூலம் வாழ்க்கைக்கே தகுதியற்றவனாகி விடுகின்றான்.

ஆற்றலுடைய மனிதன் வேலையில்லாததும், இடர்ப்பாடுடையதுமான சிறுசிறு காலங்களைக் கடக்க நேரிடலாம். ஆனால், நிலையாக வேலையற்றிருப்போரில் ஒருவனாகிவிடுதல் அவனுக்கே இயலாத காரியமாகும். அவன் வேலையைத் தேடிக் கண்டுபிடித்து விடுவான்; அல்லது உண்டுபண்ணிக் கொள்வான், ஏனெனின், அவனுக்கு உழைப்பின்மை துன்பந் தரும். உழைப்பு களிப்பூட்டும்; உழைப்பில் களிப்பைக் காணுபவன் நெடுநாள் வேலையற்றிருப்பதில்லை.

சோம்புதலுடையவன் வேலையில் அமர்த்தப்பட விரும்புவதில்லை. அவன் எதுவுஞ் செய்யாது வாளாவிருத்தலின் போதே தன்னியல்புடன் இருப்பவனாகின்றான். முயற்சியைத் தவிர்ப்பது எவ்வாறு என்பதே அவனுடைய முதற் கல்வி, திமிர்ப்புகளில் தழைத்து வளருவதே இன்பத்தைக் குறித்த அவனுடைய கருத்து. அவன் தகுதியற்றவன், வேலைக்கமர்த்தப்படக் கூடாதவன். வேலையின்மை அனைத்தும் செல்வரின் செயல்விளைவே எனக் கூறுகின்ற சமூகப் பொதுவுடைமைக் கொள்கையாளருங் கூடி சோம்பலான, அசட்டையான ஆதாயமற்ற ஊழியராகவே பணிபுரிவதன் மூலம் வேலையில்லாப் படைக்குப் பணிபவரின் எண்ணிக்கையைக் கூட்டுபவரே ஆவர். ஏனெனின், சுறுசுறுப்பான, நேர்மையான உள்ளம் படைத்த மக்கள் அனைவருக்கும் வெறுப்பூட்டுகின்ற சோம்புதல் கீழ்த்தரமான பழிச் செயல்களில் ஒன்றாகும்.

ஆற்றல் ஒரு கலவை உயிர்ப்பாகும். அது தனித்து நிற்பதில்லை. உரம் வாய்ந்த குணவியல்பை உருவாக்கும். ஆக்கத்தை விளைவிக்கும் பண்புகள் இதன் கண் அடங்கியிருக்கின்றன. முதன்மையாகக் கீழ்க்காணும் நான்கு பண்பியல்புக் கூறுகளிலேயே அவை உள்ளடங்கி யிருக்கின்றன :

1. முந்தார்வம் 3. விடாமுயற்சி

2. விழிப்புணர்ச்சி 4. அக்கறை

எனவே, ஆற்றலெனும் அடிப்படை இந்த நான்கு உறுதியான மூலக் கூறுகளடங்கிய கட்டிடமாகும். அவை உறுதியானவை, நீடித்து நிலைபெறுபவை, துன்பத்தின் கொடிய காலநிலையைத் தாங்கும் வண்ணம் திட்டஞ் செய்யப்பட்டவை. அவையனைத்தும் வாழ்விற்கும் ஆற்றலுக்கும் திறமைக்கும் முன்னேற்றத்திற்கும் வழிகோலுபவை.

முந்தார்வம் விலையுயர்ந்த சொத்தாகும். அது நம்பிக்கையைப் படைக்கின்றது. சுறுசுறுப்புடை யோராகவும், முந்தார்வமுடையோராகவும், காலம் தப்பாமையைக் கடைப்பிடிப்போராகவும் இருக்கின்ற மக்கள் நம்பிக்கைக்கு உரியவராகின்றனர். அவர்கள் தம் கடமையை ஊக்கத்துடனும், ஒழுங்காகவும் செய்து முடிப்பர் என நம்பலாம். விரைந்து செயலாற்றும் பணிமுதல்வர்கள் தம் பணியாளர்களுக்கொரு வலிமையூட்டும் மருந்தாவர். கடமை தவிர்க்குங் கருத்துடையோர்க்கு ஒரு கசையடியாரவர். தம்மைத் தாம் நெறிப்படுத்திக்

கொள்ளாதவர்க்கு அவர்கள் நற்பயன் விளைக்கும் ஒழுங்கு முறைக்கான ஒரு கருவியுமாவர். எனவே, தமது பயனுடைமையையும், வெற்றியையும் கையாற்றும் அதே வேளையில் பிறருடைய பயனுடைமைக்கும் வெற்றிக்கும் அவர்கள் உதவுகின்றனர்.

எப்போதும் காலங் கடத்துபவராகவும், எப்போதும் நேரந் தவறுபவராகவும் இருக்கின்ற அசட்டையான தொழிலாளி தனக்கில்லையெனினும் பிறர்க்கு ஒரு தொந்தரவாகி விடுகின்றான். அவனுடைய பணிகளுக்கு ஆக்க மதிப்பு சிறிதளவே இருப்பதாகக் கருதப்படுகின்றது. முந்தார்வத்தின் ஏவல் பெண்களாகிய தீர சிந்தனையும், தீவிர விரையும் ஆக்கம் அடைவதற்கான பயன்மிக்க கருவிகளாகும். பொது வாணிபப் போக்குகளில் சுறுசுறுப்பு ஒரு செட்டான ஆற்றலாகும். முந்தார்வம் ஆக்கம் விளைவிக்கின்றது. சோம்பேறி எனப் பெயர் பெற்றோர் வாணிபத்தில் என்றேனும் வெற்றியடைந்துள்ளனரா என்பது ஐயப்பாட்டிற் குரியதாகும்.

மனத்தின் செயுல் திறன்கள், ஆற்றல் அனைத் திற்கும் விழிப்புணர்ச்சியே காவலனாம். கொடியதும், அழிவு விளைப்பதுமான கூறுகள் எதுவும் உட்புகாமல் தடுக்கும் ஒற்றன் அதுவே. வெற்றி, விடுதலை, ஒளிமை அனைத்திற்கும் நெருங்கிய கூட்டாளியும், காவலாளியும் அதுவே. மனத்தின் இந்த எச்சரிக்கையான நோக்கு இல்லாத நிலையில் மனிதன் மூடனாகி விடுகின்றான். மூடனுக்கு ஆக்கம் வருவதில்லை. தன்னைத் தொந்தரை செய்யுவருகின்ற இழிந்த கருத்துகளும், கொடிய இச்சைகளும் தன் மனத்தின் ஆழ்சிந்தனை, அமைதி,

தீர்ப்பு ஆகியவற்றை அடியோடு கொள்ளையிட மூடன் இடந் தந்து விடுகின்றான். அவன் என்றுமே பாதுகாப்புடன் இருப்பதில்லை. அழையாது நுழையும் ஒவ்வொரு கயமைத் தன்மைக்கும் தன் மனக் கதவுகளைத் திறந்து வைத்து விடுகின்றான். தன்னை விரட்டிப் பிடிக்கின்ற ஒவ்வோர் உணர்ச்சி வேகமும் தனது சமநிலையைத் துடைத்து அழித்துவிடும் அளவிற்கு அவன் அத்துணை வலுவற்றவனாகவும், உறுதியற்றவனாகவும் இருக்கின்றான. பிறர் எவ்வாறிருத்தல் கூடாது என்பதற்கு அவன் ஓர் எடுத்துக் காட்டாகும். அவன் எப்போதும் தோல்வியுறுபவனாகவே இருக்கின்றான். ஏனெனின், மூடனாக இருப்பவன் மனிதர் அனைவருக்குமே ஒரு பொல்லாப்பு; அவனை மதிப்புடன் வரவேற்கும் சமுதாயமே இல்லை. வலிமையின் முகடாக ஒளிமை இருத்தல் போன்று வலிமையின்மையின் அடுத்த கோடி மடமை.

சிந்தனையற்ற தன்மையிலும், வாழ்வின் சாதாரண நுணுக்கங்களிலுள்ள பொதுப்படையான தளர்ச்சியிலும் விழிப்புணர்ச்சியின்மை வெளிப்பட்டு விடுகின்றது. மடமையின் மற்றொரு பெயரே சிந்தனையின்மை. பெருவாரியனர் தோல்வி, துன்பம் ஆகியவற்றின் மூல காரணத்திலே அது அமைந்து கிடக்கின்றது. எந்த வகையான பயனுடைமையையும், ஆக்கத்தையும் குறிக்கொள்கின்ற எவனும் தன் செயல்களைக் குறித்தோ, அச் செயல்களால் பிறர்க்கு ஏற்படும் விளைவுகளையும், அவற்றின் எதிர்விளைவாகத் தனக்கே ஏற்படுவன வற்றையும் குறித்தோ கருதாது கண்மூடியாக இருக்க இயலாது. அவன் தனது வாழ்க்கைப் போக்கின்

தொடக்கத்திலேயே தற்சார்புப் பொறுப்பென்னும் உணர்ச்சி பெற்று விழிப்புற்றாக வேண்டும். வீட்டிலே, நீதிமன்றத்திலோ, கோயிலின் சொற்பொழிவு மண்டபத்திலோ, மாளிகையிலோ, பள்ளிக் கூட அறையிலேயோ பணப்பெட்டியருகிலோ கூட்டாகவோ தனியாகவோ, உழைப்பில் ஈடுபட்டிருக்கும் போதோ விளையாடும் போதோ, அவன் எங்கெங்கிருப்பினும் அவனுடைய ஒழுகலாறு நன்மைக்கோ தீமைக்கோ அவனுடைய வாழ்க்கை நெறியைப் பாதிக்கும் என்பதை அவன் அறிந்து கொள்ள வேண்டும். ஏனெனில், நடத்தையில் ஒரு நுட்பமான வசியம் இருக்கின்றது. அது தொடுகின்ற ஒவ்வோர் ஆண், பெண், குழந்தையிடத்தும் ஒரு முத்திரையைப் பொறித்துச் செல்கின்றது. அம் முத்திரையே மனிதர் ஒருவர் மீதொருவர், கொண்டிருக் கின்ற மனப்போக்கை வரையறுக்கும் கூறாகவும் இருக்கின்றது.

இக் காரணம் பற்றியே ஒன்றுபட்ட சமுதாயம் அனைத்திலும் நற்பழக்க வழக்கங்களைப் பேணி வளர்த்தல் அத்துணை இன்றியமையாமை வாய்ந்ததாக இருக்கக் காண்கின்றோம். உலைவு படுத்துவதும், உடன்பாடற்ற துமான மனக்குறைபாட்டை நாம் நம்முடனே கொண்டு செல்வதாயிருப்பின், நம் காரியங்களில் அது நச்சூட்டும் என்பதைப் பெயரிட்டு அறிமுகப்படுத்த வேண்டியதில்லை. ஆற்றல் வாய்ந்த திராவகம் நேர்த்தியான உருக்குக் கம்பியை அரித்துத்தின்று அதனுருவத்தைச் சிதைத்து விடுதல் போன்று. நமது முயற்சிகள் அனைத்தையும் மனக்குறைபாடு அழித்து நமது மகிழ்ச்சியையும், ஆக்கத்தையும் சின்னா பின்னமாக்கி விடுகின்றது.

மாறாக, உறுதிப்படுத்தும், ஒழுங்குபடுத்தும் மனத்தின் மேம்பாட்டை நாம் நம்முடனே கொண்டு செல்வதாயிருப்பின், நம்மைச் சூழ்ந்திருப்போர் அதைப் புரிந்து கொள்வதோடு கவர்ச்சியும் அடைகின்றனர். அவர்கள் ஏனென்று அறிந்து கொள்ளாமலே நன்னோக்குடன் நம்மை அணுகி வருவர்; நண்பர்களையும், நல வாய்ப்புகளையும் கொணர்ந்து, நம் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி காணப் பேருதவியாகவுமிருப்பர், நம் காரியங்கள் அனைத்திலும் ஆற்றல் வாய்ந்த விளையாட்டாகவும் விளங்குவது அந்த நற்பண்பே ஆகும். அது நம் தவறுகளைக் கூட நேர்படுத்திவிடும்; திறமைக் குறைவுகளின் தீய விளைவுகளை, எண்ணிறந்த குறைபாடுகளை மூடி மறைத்துப் பெரிதும் மட்டுப் பத்திவிடும்.

எனவே, நாம் கொடுக்கின்ற அளவைப் பொறுத்தே உலகத்தின் கைகளிலிருந்து நாமும் பெறுகின்றோம். தீமைக்குத் தீமை; நம்மைக்கு நன்மை. மாசு படிந்த ஒழுக்கத்திற்கு மட்டான செல்வாக்கும், நிறைவற்ற வெற்றியுமே. மேம்பட்ட ஒழுக்கத்திற்கு நிலைபெறும் ஆற்றலும், நிறைவுற்ற வெற்றியுமாம். மூட மனிதன் தோல்வியுறுகின்றபோது பிறரைத் தூற்றுகின்றான். தன் மீது தவறேதும் காணுவதில்லை; ஆனால் அறிவுடைய மனிதன் தன்னைத்தான் கண்காணித்துத் திருத்திக் கொள்கின்றான். அதனால் அவனுக்கு வெற்றி உறுதியாகி விடுகின்றது.

விழிப்புணர்ச்சியும், சுறுசுறுப்புமுடைய மனம் கொண்ட மனிதன், அதன் பயனாகத் தன்னுடைய

குறிக்கோள்களை அடையும் விலையுயர்ந்த கருவியைக் கொண்டவனாகிறான். அவன் நிகழ்ச்சிகள் அனைத்திலும், குணவியல்பின் கேடுபயக்கும் தவறுகளுக்கு எதிராக முழு விழிப்புணர்ச்சியுடன் இருப்பான் எனின், எந்த நிகழ்ச்சி, எந்தச் சூழ்நிலை, எந்தப் பகைவன் அவனைப் பின்னொதுக்கிப் போரிட முடியும்? அவன் முறைப்படியான பயனைப் பெறுவதை எவைதாம் தடுத்துவிட முடியும்?

விடாமுயற்சி களிப்பையும், செழிப்பையும் தருகின்றது. ஊக்கஞ் செறிந்த ஆள்வினையுடையாராய மக்களே சமூகத்தின் மகிழ்ச்சியுடைய உறுப்பினராவர். தேவைக்கு மிகுந்த பணம் படைத்திருத்தலையே செல்வமெனக் கொண்டால் அவர்கள் எப்போதுமே செல்வராயிருப்பதில்லை. ஆனால், அவர்கள் எப்போதும் சிறிதும் கவலையற்றவராய், களிப்புடையராய் இருக் கின்றார். தாம் செய்வதிலும் தம்மிடம் இருப்பதிலும் மிகுந்த மனநிறைவு காணுகின்றனர். எனவே, பெருமளவில் அருளுடையராய் இருப்பவரையே செல்வரெனப் பொருள் கொண்டால் அவர்களே செல்வராவர்.

மிகுதியாகப் பயன்படுத்தப் படுகின்ற பொருள்களே மெருகேற்றப் பட்டதாயிருக்கின்றன. மிகுதியாக உழைப்பில் ஈடுபடுகின்ற மக்கள் தம் மெருகையும், மதிப்பாற்றலையும் நன்னிலையில் கொண்டிருக்கின்றனர். பயன் படுத்தப்படாத பொருள்கள் விரைந்து கறைபடுகின்றன; காலம் கொல்வோன், களைப்பாலும் பதனிழந்த பகற்கனவாலும் அழிக்கப் படுகின்றான். ஏனெனில், அறிவு, பயனுடை எனும் வண்மைகள் பெருகிய உலகில், தன் கையாட்சியில் குறுகிய வாழ்வைக் கொண்ட

எவரே மிகுதியான நேரம் கொண்டிருக்கக் கூடும்? தீர்க்கமான தலைகளும், நல்ல நெஞ்சங்களும் கொண்ட மனிதர் ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு கணத்தையும் பயனுடனும், களிப்புடனும் செலவிடுகின்றனர்;

இன்னலத்தையும், நன்னிலையையும் ஆள்வினை பெருக்குகின்றது. சுறுசுறுப்புள்ள மனிதன் ஒவ்வோரிரவும் தளர்ச்சியுடன் படுக்கச் செல்கின்றான். அவன் உளைவுபடாது, இனிமையான உறக்கம் கொள்கின்றான். அவன், மகிழ்ச்சியூட்டும் மற்றொரு நாளைய உழைப்பிற்காகப் பொலிவுடனும், வலிவுடனும் மறுநாள் விடிகாலையில் துயிலெழுந்து விடுகின்றான். அவனுக்கு நல்ல பசியும், செரிமானமும் ஏற்படுகின்றன. அவன் பொழுது போக்கில் ஒரு சிறந்த சுவைச் சத்தையும், உழைப்பில் ஒரு நல்ல ஏற்றத்தையும் காணுகின்றான். அத்தகைய மனிதன் மந்தம், சோர்வு இவற்றுடன் என்ன தோழமையைக் கொள்ள முடியும்? சிறிதளவு உழைத்துப் பெருமளவில் உண்ணுபவரையே அத்தகைய பதனிழந்த உணர்ச்சிகள் சுற்றி வளைக்கின்றன. சமூகத்திற்குப் பயன் படுபவர்களாகத் தம்மை ஆக்கிக் கொள்ளும் மக்கள் சமூகத்திலிருந்து தங்கள் முழுப் பங்கான நலம், மகிழ்ச்சி, ஆக்கம் ஆகியவற்றைத் திரும்பப் பெறுகின்றனர். அவர்கள் அன்றாடக் கடமையை மகிழ்வுடையதாக்கி உலகம் முன்னேறும் வகை செய்கின்றனர். அவர்கள் நாட்டின் பொற் சுரங்கம்; மண்ணின் இனிய சாறம்.

"அக்கறை அழியாமையைப் பெறும் வழியாகும். அக்கறையுடையோர் இறந்துபடுவதில்லை. அக்கறை இல்லாதோர் ஏற்கனவே இறந்துபட்டவர்களுக்

கொப்பாவர்'' என ஒரு பேராசரியர் கூறியுள்ளார். மனம் முழுவதையும் அதன் கடமைக்கென உரிமையாக்குவதே அக்கறையாகும்.

நாம் என்ன செயல்படுத்துகின்றோம் என்பதைப் பொறுத்தே நாம் வாழுகின்றோம். தாம் செயல்படுத்துவது எதுவாயினும் அதில் உயர்ந்த மேம்பாடன்றி எவ்விதக் குறைபாடு ஏற்படினும் அக்கறை மிக்க மக்கள் மனநிறைவின்மை அடைகின்றனர். அவர்கள் எப்போதும் மேம்பாட்டை அடைந்து விடுகின்றனர். குறைபாடுடைய வினைமுறையில் திருப்தி காணுகின்ற கவனமற்றோரும் அரைமனம் கொண்டோரும் எத்துணையோ பேர் உள்ளனர். அக்கறையுடையோர் தமக்கே உரிய மேம்பாட்டுடன் தனித்துப் புகழொளி வீசுகின்றனர். பயனுடைமை, தொண்டு ஆகிய வரிசைகளில் அக்கறையுடைய மக்களுக்கு எப்போதும் மிகுதியான "வெற்றிடங்கள்" இருக்கின்றன. ஆழ்ந்த அக்கறை கொண்ட ஓர் ஆண்மகனோ பெண்மணியோ ஏதேனும் பொருத்தமான கடமையை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் என்றுமே இருந்ததுமில்லை, இருக்கப் போவதுமில்லை. அத்தகைய மக்கள் அதிநுட்பமுடன் செயல் படுபவர் மனச் சான்றிற்குக் கட்டுப்படுபவர், வருந்தி உழைப்பவர், சிறந்தோர்க்குச் சீர் வழங்க உலகம் எப்போதும் காத்திருக்கின்றது. பருப்பொருள் சார்ந்தனவோ, அறிவாற்றல் சார்ந்தனவோ, ஆன்மீகஞ் சார்ந்தனவோ ஆகிய செயல்கள் எவற்றிலாயினும் சரியே, ஒப்பற்ற மேம்பாடுடைய ஒன்றிற்குரிய முழு விலையை, பொருளாகவோ, புகழாகவோ, நண்பர்களாகவோ,

செல்வாக்காகவோ, மகிழ்ச்சியாகவோ, வாய்ப்பாகவோ வாழ்வாகவோ தந்து விட வையகம் எப்போதும் ஆயத்தமாக நிற்கின்றது. நாம் எந் நிலையுடையரேனும் சரியே, எவ்வித ஐயமோ நம்பிக்கைக் கேடோ இன்றி மிகச் சிறந்தவற்றை உலகிற்கு அச்சமிற்றி வழங்கலாம் நமது அக்கறையின் அழிக்க முடியாத முத்திரை ஒரு முறை நம் சரக்குகளின் மீதோ மற்றொருமுறை நம் சொற்களின் மீதோ பொறிக்கப் படுமேயாயின், நமது வாணிபம் தழைத்துச் செழிக்கும், அல்லது நம் வாய்மொழிகள் நிலைத்து வாழும்.

அக்கறையுடைய மக்கள் தமது உழைப்பு, குணவியல்பு ஆகிய இரண்டிலும் நல் விளைவான முன்னேற்றம் காணுகின்றனர். எனவே, அவர்கள் வாழுகின்றனர், தடைப்பட்டுத் தேங்கி நிற்றலே இறப்பு இடையறாத முன்னேற்றமும், என்றும் மேலோங்கும் மேன்மையும் எங்குளவோ அங்கு முயற்சியும், வாழ்வும் தேக்கத்தையும், இறப்பையும் விழுங்கிவிடுகின்றன.

எனவே, முதல் அடிப்படையின் அமைப்பும், வேலைப்பாடும் விளக்கப்பட்டுவிட்டன. அதை நன்கு கட்டி முடித்து உறுதியாகவும், நேராகவும் நிலைப்படுத்துபவன் தனது வாழ்வெனும் வாணிபத்தில் வலிமை வாய்ந்ததும், நிலைபெறுவதுமான அடிப்படை கொண்டவனாவான்.

# சிக்கனம்

இயற்கை அன்னை வெறுமையை அறியமாட்டாள். விரயமும் அவள் அறியமாட்டாள். இயற்கையின் சிக்கனத்தில் ஒவ்வொன்றும் பேணிக் காக்கப்பட்டு நற்பணிக்காகத் திருப்பப்படுகின்றது. உடலின் கழிவுப் பொருள்கள் கூட வேதியமுறையில் உருமாற்றப் பெற்றுப் புது உருவங்களைக் கட்டுதற்காகப் பயன்படுத்தப் படுகின்றன. இயற்கை ஒவ்வொரு கழிவையும் அழிப்பதென்பது அதை ஒழித்துவிடுவதன்று. ஆனால், உருமாற்றுகையின் மூலமே அதைச் செய்கின்றது. அதாவது, அதைப் பண்படுத்தித் தூய்மைப்படுத்தி அழகுள்ள, பயனுள்ள, நன்மையுள்ள செயலுக்குப் பயன்படும் வண்ணமே அதைச் செய்கின்றது.

இயற்கையில் உலகியல் முறையாக இருக்கின்ற அதே சிக்கனம், மனிதனிடத்தில் ஒழுக்கநெறிப் பண்பாக இருக்கின்றது; அவன் அப் பண்பைக் கொண்டே தன்னுடைய ஆற்றல்களைப் பாதுகாத்துச் செயல்களின் அமைப்பின் மூலம் ஓர் இயக்க உறுப்பாக தன்னைக் கொள்கின்றான்.

செல்வநிலைச் சிக்கனம் வாழ்க்கை முறையின் ஒரு சிறு பகுதியேயாகும். முழுக்கவும் மனஞ் சார்ந்ததாகவும், அதன் உருமாற்றங்கள் உயிரியல் சார்ந்ததாகவும்

இருக்கின்ற மெய்யான சிக்கனத்தின் சடப்பொருள் சார்ந்த ஓர் அடையாளமெனலாம். செல்வநிலைச் சிக்கனக்காரன் செம்பிற்கு வெள்ளியும், வெள்ளிக்குப் பொன்னும், பொன்னிற்குப் பணத்தாள்களுமாகப் பரிமாற்றம் செய்து பணத்தாள்களை வங்கிக் கணக்கில் எண்களாக மாற்றி விடுகின்றான். பணத்தை இவ்வாறு மிகவும் விரைவாகக் கை மாற்றத்தக்க உருவங்களில் மாற்றிக் கொள்வதால் தன் காரியங்களின் பொருளாதார நிருவாகத்தில் அவன் பயனடைகிறான்.

பருப்பொருளியலிலே மனவியலிலோ காரியங்கள் அனைத்திலும் பாழ்படுதல், பயனின்றிக் குவித்துவைத்தல் இவைகளுக்கிடையேயுள்ள நடுத்தரமான பாதையே உண்மையான சிக்கனமாகும். பணமாயினுஞ் சரி, மனவாற்றலாயினுஞ் சரி வீணாக்கப்படுகின்ற ஒன்று ஆற்றலற்றதாக ஆக்கப்பட்டு விடுகின்றது. செல்வ நிலையிலோ மன நிலையிலோ ஆற்றலைப் பெற வேண்டுமெனின் அது தொகுக்கப்படத்தான் வேண்டும்; ஆனால் முறையாகப் பயன் படுத்துவதும் சேகரிப்பைப் பின்தொடர வேண்டும். பணத்தையோ ஆற்றலையோ சேகரிப்பது கருவியே; பயன்படுத்துவதே செயலின் வெற்றி. மேலும், பயன்படுத்துதலே ஆற்றலை உண்டு பண்ணுகின்றது.

கீழ்க்காணும் ஏழு செயல்களிலும் நடுநிலையான பாதையைக் கண்டு பிடிப்பதிலேயே பல்வகையான சிக்கனமும் அடங்கியிருக்கின்றது. அவை பணம், உணவு, உடை, பொழுதுபோக்கு, ஓய்வு, காலம், ஆற்றல்.

பண்டமாற்றின் அடையாளம் பணம்; அது கொள்முதல் ஆற்றலை காட்டுகின்றது. செல்வச் செழிப்பினைப் பெறவேண்டுமென்று துடிப்பவனும், அதே போன்று கடன் இல்லாதிருக்க வேண்டுமென்று விரும்புபவனும், எப்போதும் அதிகரித்துக் கொண்டேயிருக்கும் நடைமுறை முதலுக்குச் சிறு பகுதியை விட்டுவைக்கும் வகையிலோ எந்த நெருக்கடி வரினும் கையில் தயாராகச் சிறு சேமிப்பைக் கொண்டிருக்கும் வகையிலோ, தனது வருவாய்க்கேற்பச் செலவினைப் பங்கிடுதல் எவ்வாறு என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

சிந்தனையற்ற செலவினத்தில், பயனற்ற மகிழ்ச்சிகளிலோ கேடு தரும் சொகுசுகளிலோ செலவிடப்படுகின்ற பணம் பாழ்படுகின்றது. ஆற்றல் சிதைவுறுகின்றது. மேலும், நமது அன்றாட வாழ்வின் விளக்கங்களைப் பெரிதும் மேற்கொள்ளுகின்ற ஆற்றலுமாகும். ஊதாரி ஒருபோதும் செல்வவானாக இயலாது. ஆனால், அவனைச் செல்வங்கள் வந்தடையினும் அவன் விரைவில் ஏழையாகிவிடுவான். கஞ்சன் எத்துணைதான் பொன்னைப் பதுக்கி வைத்திருப்பினும், அவனைச் செல்வன் என்று கூறிவிட முடியாது. ஏனெனின், அவன் மேலும் மேலும் விரும்புகின்றான். பயன்படாது கிடக்கும் அவனுடைய பொன் கொள்முதல் சக்தியை இழந்துவிடுகின்றது. செட்டானவரும், முன்மதியுடையோருமே செல்வங்களைப் பெறுகின்ற வழியில் செல்வராகின்றனர். ஏனெனின், செட்டாகச் செலவிடும் அவர்கள் கவனமாகச் சேமித்து

வளர்ந்து வரும் தங்களுடைய தகுதிக்கேற்பத் தங்களது செல்வச் செழிப்பையும் சிறுகச் சிறுகப் பெருக்கிக் கொள்கின்றனர்.

செல்வனாக வேண்டிய வறிய மனிதன் கீழ்ப் படியிலிருந்து தொடங்க வேண்டுமேயன்றித் தனது தகுதியை மிகவும் மிஞ்சிய ஏதோவொன்றைப் பெற முயற்சி செய்வதன் மூலம் செல்வச் செழிப்புள்ள தோற்றம் கொள்ள வேண்டுமென்று விரும்பவோ, முயலவோ கூடாது. கீழ்ப்படியில் எப்போதும் மிகுதியான வாய்ப்பு இருப்பதுடன் அது தொடங்குவதற்கு மிகவும் பாதுகாப்பான இடமுமாகும். ஏனெனின், அதைவிடக் கீழ்ப்பட்டது அங்கு எதுவுமில்லை. ஒவ்வொன்றும் மேற்பட்டதுவே. வாணிபத்துறையில் ஈடுபடும் பல வாலிபர்கள் வெற்றிக்கு இன்றியமையாதது எனத் தாம் மடமையாகக் கருதுகின்ற வீறாப்புப் பேச்சாலும், பகட்டாலும் விரைவில் கவலையடைகின்றனர். ஆனால், அது பிறரை அன்றி அவனையே ஏமாற்றி விரைவில் அழிவுக்கு வழிகாட்டுகின்றது. எத்துறையாயினும் சரியே ஒருவனுடைய தகுதியையும், குறித்து மிகைப் படுத்துப்பட்ட விளம்பரத்தைக் காட்டிலும் அடக்கமானதும், உண்மையானதுமான தொடக்கமே வெற்றியை உறுதியாக்குகின்றது. முதலீடு சிறு அளவினதாக இருப்பின், தொழிற்படும் எல்லையும் சிறு அளவினதாகவே இருக்க வேண்டும். முதலீடும், வாய்ப்பும், கையும், கையுரையுமாகும். அவை பொருந்த வேண்டும். நமது முதலீட்டை அதன் நடைமுறைச் ஆற்றலெனும் வட்டத்திற்குள் நாம் ஒருமுகப்படுத்தினால் போதுமானது. அந்த வட்டம் எத்துணை தான் எல்லை கட்டப்பட்டிருப்பினும், வளர்ந்து வரும் ஆற்றலின்

இயக்கவிசை வெளிப்பட முனையும்போது வட்டம் தொடர்ச்சியாகப் பரந்து விரிந்து கொண்டுதானிருக்கும்.

உணவு, உயிர்க்களை, உயிர் ஆற்றல், உடல், மனம் இரண்டினுடையவும் வலிமை இவற்றைக் காட்டுகின்றது. பிற அனைத்தையும் போலவே உண்பதிலும், குடிப்பதிலும் கூட ஒரு நடுத்தரமான பாதையிருக்கின்றது. ஆக்கந் தேடவேண்டிய மனிதன் நன்கு பேணி ஊட்டப்பட வேண்டியதுதான்; ஆனால், அளவை மிஞ்சி ஊட்டப்படுதல் கூடாது. கஞ்சத்தனத்தாலோ துறவு பூண்பதாலோ தன்னுடலைப் பட்டினி போடுபவன் தன் மனவாற்றலைக் குறைத்துக் கொள்பவனாகின்றான். அதோடு, தன்னுடலை எந்த வலிமையான பேறும் பெறுதற்கான கருவியாகாத நிலையில் மிகவும் தோல்விக்கே ஏற்ற நிலையான நோயுற்ற மனநிலையை நாடுகின்றான்.

பெருந்தீனிக்காரன் மிகைப்பட உண்பதிலேயே தன்னை அழித்துக் கொள்கின்றான். முரட்டுத்தனம் ஊட்டப் பெற்ற அவனுடைய உடல், நோயையும் தீய தன்மையையும் ஈர்க்கின்ற நச்சுகள் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்ற களஞ்சியமாகின்றது. மேலும், மேலும் விலங்குத் தன்மையுடையதாகவும், குழப்ப முற்றதாகவும் மாறித் திராணி அற்றதாகவும் ஆகி விடுகின்றது. மிகையூண் ஆவல் கீழ்த்தரமானதும் விலங்கினப்பாங்கும் உடையது.

ஊணிலும், குடியிலும் நடுநிலைப் போக்குடையோரே சிறந்த உழைப்பாளர்களும், மிகவும் வெற்றியுறும் மக்களுமாவர். மிகைப்படாமல் போதுமான அளவு ஊட்டம்

எடுத்துக் கொள்வதால் அவர்கள் உச்ச நிலையான உடல், மனத் தகுதி பெறுகின்றனர். இவ்வாறு நடுநிலைப் போக்கை மேற்கொள்வதால் அவர்கள் வாழ்க்கைப் போரை ஊக்கத்துடனும், களிப்புடனும் போரிடும் ஆற்றலைப் பெறுபவராகின்றனர்.

உடை, உடலுக்கான உறையும், பாதுகாப்புமாகும். ஆனால் இந்தச் செட்டான குறிக்கோளினின்றும் அது அடிக்கடி பின்னிழுக்கப்பட்டுப் பயனற்ற பகட்டிற்கான கருவியாக்கப்படுகின்றது. இங்குத் தவிர்க்கப்பட வேண்டிய ஆரவார ஆடை மெத்தனமும், பகட்டுமாகும். வழக்கத்தைப் புறக்கணிக்கவியலாது. புறக்கணிக்கப்பட வேண்டியது மில்லை. சிறப்பு அனைத்தும் துப்புரவிற்கேயாகும். அழுக்குடை அணிந்து, தலைமுடியும் வாரிக் கொள்ளாத ஆணோ பெண்ணோ தோல்வியையும், தனிமையையும் விரும்பி அழைப்பவரே ஆகின்றனர். ஒரு மனிதனின் ஆடை அவன் வாழ்வில் வகித்து வருகின்ற நிலைமையுடன் இசைவு படுவதாக இருக்கவேண்டும். அது நல்ல தரத்தில் ஆக்கப் பெற்றதாயிருக்க வேண்டும். நன்கு தைக்கப் பெற்றதாகவும், பொருத்தமுடையதாகவும் இருக்க வேண்டும். ஒத்துப் பார்க்கையில் புதிதாகவே இருக்கின்ற உடையைக் களைந்து எறிந்துவிடுதல் கூடாது; அதை நன்கு அணிந்து பயன்படுத்த வேண்டும். ஒரு மனிதன் ஏழையாகவிருந்து நைந்துபோன உடையணிந்திருப்பினும் அது தூய்மையாகவும், அவனுடைய உடல் முழுவதும் தூய்மையாகவும் இருக்குமெனின், அவன் தன் மதிப்பையோ பிறர் காட்டும் மதிப்பையோ இழந்து விடுவதில்லை. ஆனால், உடையில் அளவுகடந்த

சொகுசிற்கு வழிகாட்டுகின்ற பகட்டு ஒரு பழிச்செயலாகும். அறநெறி கொண்ட மக்கள் அக்கறையுடன் அதைத் தவிர்க்க வேண்டும். குவித்து வைப்பதில் பணத்தை விரயம் செய்கின்ற செல்வர் ஏழ்மையை நாடு பவராகின்றனர்; ஏனெனின், அது விரயமாகும்; விரயம், இன்மைக்கு வழிகாட்டி விடுகின்றது. இவ்வாறு கருத்தின்றிச் செலவிடப்படுகின்ற பணத்தை நன்முறையில் பயன்படுத்தலாம். ஏனெனின் ஈகை மிகவுயர்ந்தது.

பகட்டாகத் தேவையின்றி ஆடையணிவதைக் காட்டிலும் அவர்கள் கல்வியும், முன்னேற்றமும் அதிகச் சிறப்பு வாய்ந்ததாகக் கொள்வர். அதன் காரணமாக இலக்கியம், கலை, விஞ்ஞானம் இவை ஊக்குவிக்கப் படுகின்றன. உண்மையான பண்புநயம் மனத்திலும், நடத்தையிலுமே இருக்கின்றது. அறத்தாலும், அறிவுக் கூர்மையாலும் அணிசெய்யப்பட்ட மனம், புறப்பகட்டாக உடலை அணிசெய்து கொள்வதால் தனது கவர்ச்சியை அதிகரித்துக் கொள்ள முடிவதில்லை. உடனடிப் பயனற்ற வகையில் அணிசெய்வதில் செலவிடப்படுகின்ற பொழுதை அதைவிடப் பயன் தரும் வகையில் செலவிடலாம். பிற காரியங்களில் உள்ளதைப் போன்றே உடையிலும் எளிமையே சிறந்தது. பயனுடைமை, வசதி, உடலழகு இவற்றைப் பொறுத்த அளவில் எளிமை மேம்பாட்டின் உச்சநிலையை அடைந்து விடுகின்றது. அதோடு உண்மையான சுவையையும், பண்படுத்தப் பட்ட நடத்தை நயத்தையும் காட்டுகின்றது.

பொழுது போக்கு, வாழ்வின் இன்றியமையாத காரியங்களில் ஒன்றாகும். ஒவ்வோர் ஆண்மகனும்

பெண்மணியும், குறிப்பிடத்தக்க அளவு பொழுதை ஒதுக்கி வைக்கின்ற ஏதேனும் திட்டமான பணியை வாழ்வின் முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்.

மதிக்கப்பட்ட குறிப்பட்ட காலங்களில்தான் பொழுது போக்குக்காகவும், ஓய்வுக்காகவும் அவன் அதனின்றும் திரும்ப வேண்டும். ஒருவனின் கருத்தூன்றிய பணியில் ஆற்றல் மீதுர, உடல், மனம் இரண்டிலும் பெருமளவு கிளர்ச்சியைப் பெறுதலே பொழுதுபோக்கின் நோக்கமாகும். எனவே, அது ஒரு கருவியே அன்றிச் செயலாற்றலாகாது. இதை எப் பொழுதும் கருத்தில் கொள்ள வேண்டும். வாழ்வில் நோக்கம் எதுவுமின்றி வாழ்வை விளையாட்டுகள், மகிழ்ச்சிகள் இவற்றின் தொடர்ச்சியான வரிசையாக ஆக்கிவிடுதல், உயிர்வாழும் மக்களை அப்படியே தலைகீழாகத் திருப்புவதாகும்; அது சலிப்பையும், நலிவையும் உண்டு பண்ணுகின்றது. அதைச் செய்யும் மக்களே மாந்தர்களில் மிகவும் மகிழ்ச்சியற்றவராவர். அவர்கள் சோர்வு, அலுப்பு, முன்கோபம் இவற்றால் துன்புறுகின்றனர். சுவைச்சத்துச் செரிப்புக்கு உதவுமேயன்றி உணவாகக் கொண்டால் நோயுண்டு பண்ணும். அதே போன்று உழைப்பின் நடுநடுவே உற்சாக மூட்டிக் கொள்ளப் பொழுது போக்கேயன்றி, வாழ்வின் பணியாகவே 'அதைக் கொண்டுவிட்டால் துன்பத்திற்கு அது வழிகாட்டிவிடும். ஒரு மனிதன் தனது அன்றாடக் கடமையை முடித்து விடுவானேயாயின், அவனுடைய உழைப்பு, மகிழ்ச்சி இரண்டும் களிப்பிற்கான ஒரு கருவியாகிவிடும்.

ஒருவனின் நேரம் முழுவதையும் உழைப்பிற்கோ பொழுது போக்கிற்கோ ஒதுக்கிவிடாது, அவை ஒவ்வொன்றிற்கும் நேரத்தையும், இடத்தையும் பகிர்ந்து பல்லாண்டு பயனுடன் வாழ்தற்கு வேண்டிய இன்றியமையாத மாறுதல்களால் வாழ்வை நிரப்பிக் கொள்வதே உண்மையான சிக்கனமாகும்.

உழைப்பிற்குப் பின்பு வலிமையைத் திரும்பப் பெறுதற்காகவே ஓய்வு. தன் மதிப்புள்ள ஒவ்வொரு மனிதனும் தனது உறக்கத்தை ஓய்வு நிறைந்ததாகவும், இனிமையானதாகவும் ஆக்கவும், துயிலெழுவதைப் புத்துணர்ச்சியுடையதாகவும், மகிழ்ச்சியுடையதாகவும் ஆக்கவும் ஒவ்வொரு நாளும் போதுமான அளவு உழைக்கவேண்டும்.

போதுமான அளவு உறக்கங்கொள்ள வேண்டியதுதான்; மிகுதியான அளவு கூடாது. ஒரு புறம் அளவிற்கு அதிகமாக நுகர்வதோ மற்றொருபுறம் இழந்து விடுவதோ இரண்டும் கேடு பயப்பனவே. ஒருவனுக்கு எத்துணையளவு உறக்கம் தேவைப்படுகின்றது என்பதை அறிந்து கொள்ளுதல் எளிதான காரியமேயாகும். முன்னேரம் படுக்கச் சென்று முன்னேரம் எழுவதால் அவனோ அவளோ முழு வலிமையைத் திரும்பப் பெறுதற்கு எத்துணை மணிநேரம் தேவைப்படுகின்றது என்பதை விரைவில் நுட்பமாக அறிந்து ஒழுங்குசெய்து கொள்ளலாம். உறக்கங் கொள்கின்ற மணி நேரங்களைக் குறைத்துக் கொண்டால் தூக்கம் மிகமிக ஆழ்ந்ததும், இனிமை உடையதாகவும் துயிலெழுதல் மிகமிகச் சுறு சுறுப்பும், மகிழ்ச்சியுடையதாகவும் இருப்பதைக் காணலாம். தமது

பணியில் செழித்துக் கொழிக்க வேண்டியவர்கள் பழிக்கத் தக்க தளர்ச்சிக்கும், அளவிற்கதிகமான உறக்கத்திற்கும் இடங்கொடுக்கலாகாது.

வாழ்வின் உண்மையான குறிக்கோள் பயனுடைய உழைப்பேயன்றி, இளைப்பாறுதலாகாது. உழைப்பின் பயன்களை எய்துதற்குச் சார்பான உதவியளிப்பது வரையில்தான் இளைப்பாறுதல் நன்மை தருவதாக விருக்கும். சோம்பலும் ஆக்கமும் என்றுமே கூட்டாளிகளாக முடியாது. ஒன்றுக் கொன்று என்றுமே உறவு கொள்ள முடியாது. சோம்பேறி என்றுமே வெற்றியை ஒடிப்பிடிக்கவியலாது. ஆனால், தோல்வி அவனை விரைவில் ஒடிப்பிடித்து அவனைத் தோற்கடித்துவிடும். பெருமளவு உழைப்பிற்கு நம்மைத் தகுதியுடையவராக்கிக் கொள்வதற்கு ஓய்வே அன்றி, சோம்பலூட்டி நம்மைக் கெடுத்துக் கொள்வதற்காகவன்று. உடல் வலிமையைத் திரும்பப் பெற்றுவிடுகின்ற மாத்திரத்திலேயே ஓய்வின் பயன் நிறைவேறி விடுகின்றது. உழைப்பிற்கும், ஓய்விற்குமிடையே நிறைவான சமநிலையைக் கொண்டிருத்தலே நலன், மகிழ்ச்சி, ஆக்கம் இவற்றைப் பெறக் குறிப்பிடத்தக்க உதவி செய்வதாய் அமையும்.

காலம் என்பது நாம் அனைவரும் சமமான அளவில் கொண்டிருக்கும் ஒன்றாகும். எந்த மனிதனுக்கும் தனிப்படையாக நாட்பொழுது நீடிக்கப் படுவதில்லை. எனவே, அதன் விலையுயர்ந்த நிமியங்களைப் பயனற்ற பாழ்காரியங்களில் வீணே கழித்து விடாது நாம் கவனித்துக் கொள்ள வேண்டும். தன்னல நுகர்ச்சியிலும்,

இனிமை நாட்டத்திலும் காலத்தைக் கழிப்பவன், விரைவில் முதுமைப் பருவத்தை எய்தி விடுகின்றான். அவன் எதையும் சாதித்து நிறைவேற்றுவதில்லை. வந்து போகின்ற நிமியங்களைப் பயனுடைய நாட்டங்களால் நிறைவாக நிரப்புபவன் புகழிலும், அறிவிலும் முதுமையடைகின்றான். ஆக்கம் அவனிடம் நிலைப்பேறு கொள்கின்றது. பாழ்படுத்தப் பட்ட பணத்தை திரும்பப் பெற்றுவிடலாம்; ஆனால் பாழ்படுத்தப்பட்ட காலத்தை என்றுமே திரும்பப் பெறமுடியாது.

"காலம் பொன்னாகும்" என்பது ஒரு முதுமொழி. அதேபோன்று, அதனைப் பயன்படுத்துகின்ற வகையைப் பொறுத்து அது நலம், வலிமை, திறமை, சான்றாண்மை, அறிவு முதலியவையுமாகின்றது. அதைச் சரிவரப் பயன்படுத்த வேண்டிடுமெனின் வருகின்ற நொடிகளை நன்கு பயன் படுத்திக் கொள்ள வேண்டும்; ஏனெனில், ஒரு முறை அவை கடந்து சென்றுவிடின், என்றுமே அவற்றைத் திரும்ப வரவழைத்துக் கொள்ள முடியாது. நாள் பொழுதைப் பகுதிகளாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். உழைப்பு, ஓய்வு, உணவு, பொழுதுபோக்கு ஒவ்வொன்றையும் குறித்த பொழுதில் செய்தாக வேண்டும். ஆயத்தம் செய்வதற்கான பொழுதைத் தவிர்க்கவோ புறக்கணிக்கவோ கூடாது. தனது பணிக்குத் தனது மனத்தை ஆயத்தம் செய்து கொள்வதற்காக நாட்பொழுதின் ஏதேனும் சிறுபகுதியைப் பயன் படுத்துவதின் மூலம் ஒரு மனிதன் எதைச் செய்வதெனினும் சரியே; அதை நன்முறையிலும், மிக வெற்றிகரமாகவும் செய்து முடிப்பான்.

காலையில் கடைசி நொடி வரையில் படுக்கையிலேயே புரண்டுவிட்டுக் காலையுணவைத் தொடங்கும் நேரத்திற்குக் கண்விழிக்கும் மனிதனைக் காட்டிலும், சீர்தூக்கி ஆராய்ந்து வருமுன்னறியும் பொருட்டுச் சிந்திக்கவும், திட்டமிடவும் அதிகாலையில் துயிலெழும் மனிதனிடம், அவனது குறிப்பிட்ட முயற்சியில், மிக்க திறமையும், வெற்றியும் காணக் கிடக்கும். காலையுணவிற்கு முன்பு இவ்வகையில் செலவிடப் படுகின்ற ஒரு மணி நேரம், ஒருவனுடைய முயற்சிகளைப் பயனுடையதாக்குவதில் மிகுந்த உதவியாயிருக்கும்.

மனத்தை அமைதியாக தெளிவுடையதாக்கி ஒருவனின் ஆற்றல்களை மிகுந்த சக்தியும், பயனும் உடையனவாக்குதற்கு இது ஒரு கருவியாகும். காலையில் எட்டுமணிக்கு முன்பு பெறுகின்ற வெற்றியே சிறந்ததும், மிகுந்த நிலைபேறுடையதுமாகும். பிற சூழ்நிலைகள் அனைத்தும் சமமாயிருக்கின்ற நிலையில் ஆறு மணிக்குத் தனது உழைப்பில் ஈடுபடுகின்றவன் எட்டு மணிவரை படுக்கையிலே இருக்கின்ற மனிதனை விட எப்போதும் நீண்ட தூரம் முன்னேறிவிடுவான். படுக்கை விரும்பி வாழ்வுப் பந்தயத்தில் தனக்குத் தான் பெரும் முட்டுக்கட்டை போட்டுக் கொள்பவனாகி விடுகின்றான். அதிகாலையில் துயிலெழுகின்ற போட்டியாளன் ஒவ்வொரு நாளும் இரண்டு அல்லது மூன்றுமணி நேரங்கள் முன்னரே உழைப்பைத் தொடங்குவதற்கு இடந் தந்துவிடுகின்றான். தனது பொழுதைப் பொறுத்துத் தனக்குத் தானே விதித்துக் கொண்ட அத்தகைய இடர்ப்பாட்டை வைத்துக் கொண்டு எவ்வாறு அவன் வெற்றியடைந்துவிடலாம் என

நம்ப முடியும்? ஒவ்வொரு நாளும் இரண்டு அல்லது மூன்றுமணி நேரங்கள் முன்னரே தொடங்கியதன் பயன் ஓராண்டு முடிவில் படிப்படியாகச் சேகரிக்கப்பட்ட விளைவுகளின் தொகுப்பாகிய வெற்றியின்பால் காணக் கிடைக்கும்.

படுக்கைப் பிரியனுங் கூடக் கண் விழித்தெழுந்த பின்பு இழந்த பொழுதை ஈடு செய்தற் பொருட்டு எப்போதும் பரபரப்படைகின்றான். அது மேலும் பொழுதை இழக்கும் நிலையிலேயே முடிகின்றது. ஏனெனின், பரபரப்பு எப்போதும் தான் குறிக்கொண்டதையே தோற்கடித்து விடும். அதிகாலை துயிலெழுவதனால் தனது பொழுதைச் சிக்கனப் படுத்திக் கொள்பவன் பரபரப்படைய வேண்டிய தேவையேயில்லை. ஏனெனில், எப்போதும் அவன் குறித்த நேரத்திற்கு முன்பே ஆயத்தமாகி விடுகின்றான். எப்போதும் அவன் தன் வேலையை நன்கு செய்து முடிக்கின்றான்; அவன் கைக் கொண்ட பணி எதுவாயினும் அதை அமைதியுடன் ஆழ்ந்து எண்ணி, கவனமுடன் நன் முறையில் செய்யவியலும். அவனுடைய நற் பழக்கம் நாள் முடிவில் மகிழ்ச்சி நிரம்பிய மனமெனுந் தோற்றத்திலும், திறமையுடன் வெற்றிகரமாகவும் செய்து முடிக்கப்பட்ட உழைப்பின் உருவமெனும் பெரும் விளைவுகளிலும் தன்னை வெளிப்படுத்திவிடும்.

காலத்தைச் சிக்கனப் படுத்துவதிலுங்கூட ஒரு மனிதன் தன் வாழ்வினின்றும் நீக்க வேண்டிய காரியங்கள் பல இருக்கும். அவன் ஆசை கொண்டு தான் கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகின்ற சில காரியங்களையும், நாட்டங்களையும் கூட வாழ்வின் சிறப்புக்

குறிக்கோளிற்காகத் தியாகம் செய்தாக வேண்டும். ஒருவனின் அன்றாட வாழ்வினின்றும் சிறப்பற்றவற்றை உற்றறிந்து ஒதுக்குதல் பெரும் ஆக்கங்கள் அனைத்தினிடத்தும் உயிர்நிலையான கூறாகும். மேன்மையான மனிதர் அனைவரும் சிக்கனத்தின் இப் பிரிவில் திறமைசாலிகளாக இருக்கின்றனர். அவர்களது மேன்மையைப் பெருக்குவதில் இது முக்கிய பங்கு கொள்கின்றது. மேலும், உள்ளம், உரை, செயல் ஆகியவற்றுள்ளும் புகுந்து அவற்றினின்றும் தேவையற்றவை, தடைவிதிப்பவை, குறிக்கொண்ட முடிவை எய்த உடனிருந்து உதவாதவை இவற்றை நீக்குவது ஒருவகைச் சிக்கனமாகும்.

உண்மையான செட்டுக்காரனின் மனம், வாழ்வெனும் வாணிபத்திற்குப் பயன்படுவன தவிர, பிற ஒவ்வொன்றும் நழுவிச் செல்ல விட்டுவிடுகின்ற சல்லடையாகும். மேலும், தேய்வையும், ஆற்றல் பாழ்படுதலையும் வெகுவாகக் குறைக்கும் வண்ணம் அவன் தேவையான சொற்களை மட்டுமே கையாளு கின்றான். தேவையான செயல்களை மட்டுமே செய்கின்றான்.

பொழுதோடு படுக்கச் சென்று பொழுதோடு விழித்தெழுந்து உழைக்கும் ஒவ்வொரு நிமிடத்தையும் பயன் நிறைந்த எண்ணத்தாலும், செயல் முற்றிய செயலாலும் நிரப்புவது, இதுவே நேரத்தைப் பொறுத்த உண்மையான சிக்கனம்.

நற்பழக்கங்களை மேற்கொள்வதால் ஆற்றல்

சிக்கனப் படுத்தப் படுகின்றது. பழிச்செயல்கள் அனைத்தும் ஆற்றலைக் கவனமின்றிச் செலவிடுவதே யாகும். பேணிக் காத்துச் சரியான திசைகளில் பயன்படுத்தினால் மனிதர் மாபெரும் வெற்றியைப் பெறுவதை இயலுவதாக்கப் போதுமான ஆற்றல் சிந்னையின்றித் தீய பழக்கங்களில் பாழ்படுத்தப் படுகின்றது. ஏற்கனவே எடுத்துக் காட்டப்பட்ட ஆறு முக்கிய காரியங்களில் சிக்கனம் கடைப்பிடிக்கப் பெற்றால், ஒருவனின் ஆற்றலைப் பேணிக் காப்பதில் பெருமளவு வேலை முடிந்துவிடும்; ஆனால், மனிதன் பின்னும் முன்னேற வேண்டும்; தீயநெறி வகைகள் அனைத்தையும் தவிர்ப்பதின் மூலம் தனது உயிர்ப்பாற்றலைக் கவனமுடன் செட்டாக நடத்த வேண்டும்; இங்குத் தீயநெறி என்பது உடல் சார்ந்த இன்ப நுகர்ச்சிகள், தூய்மையின்மைகள் இவற்றின் வகைகள் அனைத்தையும் மட்டுமே குறிப்பதாகாது ஆனால் மனத்தை வெறுமையாக்கி, அதை எந்தச் சிறப்பான பணிக்கோ பாராட்டத் தக்க செயலாக்கத்துக்கோ தகுதியற்றதாக்கிவிடுகின்ற பரபரப்பு, கவலை, கிளர்ச்சி, சோர்வு, சினம், குறைகூறல், பொறாமை ஆகிய மனத் தீயநெறிகள் அனைத்தையுங் கூடக் குறிப்பதாகும். அவை மனச் சிதறலின் சாதாரணத் தோற்றங்களாகும். சிறப்புள்ள மனத்தின் அவற்றைத் தவிர்த்து வெற்றி காணுவது எவ்வாறு என்பதைக் கற்றுணர வேண்டும்.

இழிவான மனநிலை அடிக்கடி வந்துற்று வெளிகொள்வதால் பாழ்படுத்தப்படுகின்ற ஆற்றலை அடக்கியாண்டு நேர்பட இயக்கினால், அது மனிதனுக்கு

மனவலிமையும், குணவியல்புத் திட்பமும், சாதனைக்கான பெரும் ஆற்றலைத் தரும். சினமிக்க மனிதன் தனது மனவாற்றல் சிதறியதால் வலுவிழந்தவனாக்கப்பட்ட வலிமையுடைய மனிதனேயாவான். தனது வலிமையை வெளிக்காட்ட அவனுக்குத் தன்னடக்கம் தேவைப் படுகின்றது. வாழ்வின் எத் துறையிலாயினும் சரி, அமைதியான மனிதன் அவனைவிட எப்போதும் மேம்பட்டவனேயாவான். வெற்றி, பிறரைக் குறித்த மதிப்பீடு இரண்டிலும் அவன் எப்போதும் முன்னவனை மிஞ்சிவிடுவான். எம் மனிதனாயினும் சரி, மனத்தின் தீய பழக்கங்களையும், தீய இயல்புகளையும் ஊட்டி வளர்க்கத் தன் ஆற்றல்களைச் சிதறடிக்க இடங் கொடுப்பவனாக இருக்கவியலாது.

கேடுதரும் இன்ப நுகர்வு ஒவ்வொன்றும் ஏதேனும் ஒருவகைத் துன்பமாகவோ குறைபாடாகவோ அவனிடமே திரும்பி வந்துவிடும். கலவரப்படவோ கீழ்த்தரச் சார்புகளுக்குப் பரிந்து உதவவோ செய்கின்ற ஒவ்வொரு கணப்பொழுதும் அவனுடைய முன்னேற்றத்தை மேலும் கடினப் பாடுடையதாக்கி விடும்; அவன் அடையவேண்டுமென்று விரும்பிய உயர்ந்த வானுலகை எய்துவதினின்றும் அவனைப் பின்னிழுத்துப் பிடித்துக் கொள்ளும்; நேர்மாறாக, தனது ஆற்றல்களை ஒழுங்குறுத்தித் தன் வாழ்வின் சிறப்புக் கடமையை நோக்கி அவற்றைத் திருப்பிவிடுபவன் விரைவான முன்னேற்ற மடைவான்; அவன் வெற்றியெனும் பொன்னகரத்தை அடைவதிலிருந்து அவனை எதுவும் தடுத்து நிறுத்த இயலாது.

சிக்கனம் என்பது வெறும் பணச் சேமிப்பு மட்டுமின்றி ஆழ்ந்த கருத்துடையதும் நெடுந் தொலைவு எட்டக் கூடியதுமான ஒன்றாகும் என்பதை நாம் காணலாம். நமது இயல்பின் ஒவ்வொரு பருவத்தையும் அது தொடுகின்றது. "சிறு நாணயங்களைக் கவனித்துக் கொண்டால் போதும், பெரு நாணயங்கள் தம்மைத்தான் கவனித்துக் கொள்ளும்" என்னும் முதுமொழியை ஒரு நீதிக் கதையாகக் கொள்ளலாம்; ஏனெனின், மனிதரின் கீழ்த்தர இச்சைகளை இயற்கை அன்று என்று கருதினால், அவை தம்மளவில் தீயனவன்று; அந்த ஆற்றலைத் தவறாகப் பயன்படுத்துவதே தீயதாகும்; ஆனால், இச்சைப் போக்கான இந்த ஆற்றலைக் கவனித்துச் சேகரித்து உருமாற்றிவிட்டால் அது குணயியல்பின் ஆற்றலாகத் திரும்பத் தோன்றிவிடும். ஆனால் நன்முறையில் பயன்படுத்துவதற்காக அதைக் கவனித்துக் கொள்வதென்பது இச்சைகளென்னும் சிறு நாணயத்தைச் சேகரித்து வைத்து நன்மையெனும் தங்கப் பெரு நாணயங்களைப் பெறுவதற்கேயாகும். எனவே, கீழ்நிலை ஆற்றல்களைக் கவனித்துக் கொண்டால் போதுமானது. மிக உயர்ந்த பேறுகள் தம்மைத் தாமே கவனித்துக் கொள்ளும்.

சிக்கனம் எனும் தூண் உறுதியகாகக் கட்டப் பெற்றிருப்பின், அது பெருமளவும் இந்த நான்கு பண்புகளைக் கொண்டிருப்பதைக் காணலாம்.

1. மட்டு
2. திறப்பாடு
3. வளப்பம்
4. உற்பவம்

மட்டு சிக்கனத்தின் வலுமிக்க உட்கருவாகும். அது செயல்கள் அனைத்திலும் மையப் பாதையைக் கண்டு கொள்வதன் மூலம் புறக் கோடிகளைத் தவிர்த்து விடுகின்றது. தேவையற்றதிலும், கேடு பயப்பதிலுமிருந்து விலகி நிற்பதிலும் அதனியல்பு அமைந்து கிடக்கின்றது. தீயனவாய் இருப்பவற்றில் அளவு என்ற ஒரு காரியம் இருக்கவே முடியாது. ஏனெனில், அது மட்டு மீறியதாகவே இருக்கும். உண்மையான மிதம் தீயவையினின்றும் விலகி நிற்கின்றது. நம் கைகளை நெருப்பினுள் காட்டுவது நெருப்பை நாம் மட்டாகப் பயன் படுத்துவதாகாது. பாதுகாப்பான தொலைவிற்கு அப்பாலிருந்து கொண்டு சூடேற்றிக் கொள்வதே அதை மட்டாகப் பயன்படுத்து வதாகும். மனிதன் அதைத் தொடுவதாயிருப்பினும் தீமை அவனை எரித்துவிடக் கூடிய ஒரு தீயே ஆகும்.

புகை பிடித்தல், பொடிபோடுதல், மதுவருந்தல், சூதாடல் போன்ற தீயநெறிகள் ஆயிரக் கணக்கான வர்களை நலக்குறைவு, துன்பம், தோல்வி இவற்றிற்கு இழுத்துக் தள்ளியிருப்பினும், நலம், இன்பம், வெற்றி இவற்றை அடைய எவருக்கும் என்றும் உதவி செய்ததில்லை. திறமைகளும் வாய்ப்புகளும் சமமாயிருக்கின்ற இருவரிடையே, அவற்றைத் தவிர்த்து நடக்கும் மனிதன் அவற்றை நாடியோடும் மனிதனை விட எப்போதும் முன்னேறியே இருப்பான். நலமுடன் மகிழ்ச்சியோடு பல்லாண்டு வாழ்ந்த மக்கள் தம் பழக்கங்களில் எப்போதும் மட்டாகவும், செட்டாகவுமே இருந்து வந்துள்ளனர். வாழ்வு ஆற்றல்கள் மட்டால் பாதுகாக்கப்படுகின்றன; மிதமிஞ்சுதலால் அவை

அழிக்கப்படுகின்றன. மட்டு மீறியவர்கள் தம் மடமையால் தம்மைத் தாமே அழித்துக் கொள்கின்றனர். அவர்கள் தம் ஆற்றல்களை வலுவிழக்கச் செய்து, தம் திறமைகளைக் குன்றச் செய்துவிடுகின்றனர். நிலைபேறு கொள்ளும் வெற்றியைப் பெறுதற்கு மாற்றாகக் கூடிய அளவில் நிலைபேறற்ற, உறுதியற்ற ஆக்கத்தையே அடைகின்றனர்.

ஒருவனின் வலிமைகளையும், ஆற்றல்களையும் சரிவரப் பேணிக் காப்பதினின்றுமே திறமைப்பாடு தோன்றுகின்றது. திறமை அனைத்தும் ஒருமுகப்படுத்தப் பட்ட ஆற்றலைப் பயன் படுத்துவதேயாகும். சிறப்புத் திறமையாகவும், தனித் திறமையாகவும் இருக்கின்ற மேம்பட்ட திறமை ஒருமுகப்படுத்திய வலிமையின் உயர்ந்த நிலையாகும். மனிதர் தாம் நாட்டங் கொள்கின்ற ஒன்றினிடம் எப்போதும் திறமை உடையவராகவே இருக்கின்றனர்; ஏனெனில், மனம் ஏறத்தாழ இடையறாது அதைச் சுற்றிய வண்ணமாகவே இருக்கின்றது. எண்ணத்தைப் புதுப்புனைவாகவும், செயலாகவும் உருமாற்றுகின்ற அந்த மனச்சிக்கனத்தின் விளைவே, திறமைப்பாடாகும். திறமைப்பாடின்றி ஆக்கம் இருக்கவே முடியாது.

ஒருவனின் ஆக்கம் அவனுடைய திறமையின் அளவைப் பொறுத்தே அமைந்திருக்கும். திறமைப் பாடில்லாதோர், இயற்கையான தேர்வு முறையின் மூலம், குறைந்த ஊதியம் பெறுவோர் அன்றி வேலையற்றோர் இவர்களின் வரிசையில் தமக்கொத்த இடங்களில் அமைவுற்று விடுகின்றனர். ஏனெனின், தன்னுடைய

வேலையைச் சரிவரச் செய்யவியலாத – செய்யத் தலைப்படாத ஒரு மனிதனை யார் வேலைக்கமர்த்துவர்? அத்தகு மனிதனை இரக்கச் சிந்தையால் எவரேனும் பணிமுதல்வர் சிற்சில சமயங்களில் வைத்துக் கொள்ளலாம். ஆனால், இது மிகவும் அரிதானது. ஏனெனின், வாணிப நிலையங்கள், அலுவலகங்கள், குடும்பங்கள் ஒழுங்கமைந்த செயல்முறையுடைய இடங்கள் ஆகிய அனைத்தும் ஈகைக்கான நிலையங்களல்ல. ஆனால், அவற்றின் தனித்தனி உறுப்பினர்களின் தகுதி, திறப்பாடு இவற்றால் நிலைத்து நிற்கவோ மடியவோ செய்கின்ற தொழில் நிறுவனங்களாகும்.

ஒருவன் தன் கூட்டாளிகளின் இடையில் வகிக்கின்ற இடத்தைத் திறமைப்பாடே பெரிதும் முடிவு செய்கின்றது; மிகுதியான ஆற்றல்கள் வளர வளர, அதுவே அவனைப் படிப்படியாக உயர்ந்த நிலைகளை எய்த வழி காட்டுகின்றது. நல்ல தொழிலாளி தன் கருவிகளைக் கொண்டு திறமையுடையவனாக இருக்கின்றான்; அதேபோது, நல்ல மனிதன் தன் சிந்தனையைக் கொண்டு திறமையுடையவனாக இருக்கின்றான். நல்லறிவே திறமையின் மேன்மையான வடிவம். உளச்சார்பு தொடக்க நன்மை, மிகச்சிறிய காரியமுட்பட ஒவ்வொரு காரியத்தையும் செய்து முடிக்க ஒரே நேர்வழியும், ஆயிரம் தவறான வழிகளும் உண்டு. இந்த ஒரே நேர் வழியைக் கண்டுபிடித்து அதன் வழி ஒழுகுவதிலேயே திறமை அடங்கியிருக்கின்றது. அந்த ஆயிரம் தவறான வழிகளின் நடுவே திறப்பாடற்றவன் குழப்பமுற்றுக் குளறுபடி செய்வதோடு நேரான வழியைச் சுட்டிக் காட்டியும் கூட

அதைக் கைக்கொண்டொழுகுவதில்லை. சில வேளைகளில் அவர்கள் இவ்வாறு செய்துவிடக் காரணம் என்னவெனில் தமக்கு எல்லாம் தெரியுமென அவர்கள் அறியாமையால் எண்ணுகின்றனர்; அவ்வாறு எண்ணுவதால், ஒரு பலகணியைத் துப்புரவு செய்வதோ தரையைத் துடைப்பதோ எவ்வாறு என்பதைத் தெரிந்து கொள்வதாயினும் கூட அதனை அறிந்து கொள்வது இயலாது போய்விடுகின்ற ஒரு நிலையில் தம்மை வைத்துக் கொள்பவராகின்றனர்.

பொறுமையின்மையும், திறப்பாடின்மையும் மிகவும் பொதுவானதாகும். பொறுமையும், திறப்பாடும் கொண்ட மக்கட்கு உலகில் பெருமளவு வாய்ப்பிருக்கின்றது. சிறந்த வேலைப்பாட்டைப் பெறுவது எத்துணைக் கடினமானது என்பதைத் தொழில் நடத்தும் பணிமுதல்வர்கள் அறிவர். நல்ல தொழிலாளி தன்னுடைய கருவிகளைக் கொண்டோ செயலைக் கொண்டோ தனது திறமையைக் கையாள ஓரிடத்தை எப்போதும் கண்டு பிடித்தே தீருவான்.

வளப்பம் திறப்பாட்டின் விளைவாகும். அது ஆக்கத்தின் ஒரு தன்மை மூலக் கூறாகும்; ஏனெனின், வளப்பமுடைய மனிதன் என்றுமே குழப்பமடைவதில்லை. அவனுக்குப் பல வீழ்ச்சிகள் ஏற்படலாம்; ஆனால், அவன் எப்போதும் வாய்ப்பை ஏற்பவனாகவே இருப்பான். வீழ்ந்த உடனேயே தன் கால்களூன்றி எழுந்து விடுவான். ஆற்றலைப் பேணிக் காப்பதிலேயே வளப்பத்தின் அடியாதாரக் காரணம் அமைந்து கிடக்கின்றது. அது ஆற்றல் உருமாறப் பெற்றதேயாகும். ஒரு மனிதன் தனது ஆற்றலை வெறுமையாக்குகின்ற சில மனத்

தூயநெறிகளையோ உடலின் தீயநெறிகளையோ தவிர்த்து விடுகையில், அவ்வாறு பேணிக் காக்கப்படுகின்ற ஆற்றல் என்னவாகின்றது? அது அழிக்கப்படவுமில்லை, இழக்கப்படவுமில்லை. ஏனெனின், ஆற்றல் அழிக்கப் படுவதுமில்லை அன்றி இழக்கப்படுவதுமில்லை. அது உற்பத்தி ஆற்றலாகவே உருமாறுகின்றது. பயனுடைய சிந்தனை எனும் வடிவத்தில் அது திரும்பத் தோன்றுகின்றது.

அறநெறியுள்ள மனிதன் மறநெறியுள்ள மனிதனைவிட மிகுதியான வெற்றி அடைபவனாகவே இருக்கின்றான். ஏனெனின், அவனிடம் வளப்பங்கள் கிளைத்து நிற்கின்றன. சேகரிக்கப்பட்ட ஆற்றல் செழித்திருக்க அவனுடைய மனப்பாங்கு முழுவதும் உயிர்ப்புடனும் ஊக்கத்துடனும் இருக்கின்றது. தீயநெறி கொண்ட மனிதன் பயனற்ற நுகர்ச்சிகளில் பாழ்படுத்துவதை நன்னெறிகொண்ட மனிதன் பயனுடைய உழைப்பில் செலவிடுகின்றான்.

விலங்கினத் தீயநெறி எனும் பழைய உலகினின்றும் தன்னைத் தனித்துப் பிரித்து விடுகின்ற மனிதனுக்குக் கண்ணைக் கவரும் நாட்டங்கள், தூய்மையான களிப்புகள் அனைத்தும் செழித்திருக்கின்ற ஒரு புதிய வாழ்வும், புதிய உலகமும் திறக்கப்படுகின்றன. அவனிடம் நல்லுருப் பெற்றுவிடுகின்ற வளப்பங்கள் அவனுக்குரிய இடத்தை உறுதியாக்கிவிடும்.

பயனற்ற விதைகள் மண்ணிலேயே மறைந்து விடுகின்றன; இயற்கையின் பயனுடை முறை அமைப்பில்

அதற்கு இடமேயில்லை. பயன்படா மனங்கள் வாழ்வுப் போராட்டத்தில் அமிழ்ந்து விடுகின்றன. மனித சமூகம் நல்லோர்க்கே வாய்ப்பளிக்கின்றது; தீயநெறி தோற்றுவிக்கும் வெறுமைக்கு அங்கு இடமேயில்லை. ஆனால், பயனற்ற மனமும் முடிவின்றி மூழ்கி விடுவதில்லை. அது விருப்பங் கொண்டால் பயனுடை யதாக மாறித் தானிழந்ததைத் திரும்பப் பெற்றுவிடலாம். இயற்கையின் இயல்புப்படி, முன்னேற்றத்தின் நிலையான விதியின்படி, தீயநெறி கொண்ட மனிதன் வீழ்ந்தேயாக வேண்டும்; வீழ்ந்த பின்பு அவன் திரும்ப எழுந்துவிடலாம். அவன் மறநெறியிலிருந்து அறநெறிக்கு மாறித் தன் மதிப்புடனும், தற்பாதுகாப்புடனும் தனது வளப்பங்களின் மீது நிலைபேறு கொள்ளலாம்.

கூர் அறிவுள்ள மனிதர் புதியது புனைகின்றனர், கண்டுபிடிக்கின்றனர், தொடங்கி வைக்கின்றனர். அவர்கள் தோல்வியடைய இயலாது. ஏனெனின், அவர்கள் முன்னேற்ற ஓட்டத்தில் இருக்கின்றனர். அவர்கள் புதுத் திட்டங்கள், புது வழிவகைகள், புது நம்பிக்கைகள் நிரம்பியவர்களாயிருக்கின்றனர்; அதன் காரணமாக அவர்கள் வாழ்வு அத்துணையளவு நிறைவும், செழிப்பும் கொண்டதாயிருக்கின்றது. அவர்கள் எளிதில் வளையும் உள்ளம் படைத்த மனிதர். மனிதன் தன் தொழிலைத் தன் உழைப்பை, தன் வழிவகைகளைச் செம்மையானதாக்கத் தவறிவிடுவானெனின், முன்னேற்றக் கோட்டினின்றும் புறம் வீழ்ந்தவனாகி விடுகின்றான்; தோல்வியைத் தொடங்கிவிடுகின்றான். வயது முதிர்ந்த மனிதனின் உடலைப் போன்று அவனுள்ளம் விறைப்பும், மந்தமும்,

கொண்டதாக மாறிவிடுகின்றது. ஆகவே, வளப்பமுள்ள மனங்களின் கருத்துக்கள, திட்டங்கள் இவற்றுடன் அவன் சமமாக முன்னேறத் தவறிவிடுகின்றான். வளப்பமுள்ள மனம் என்றுமே வற்றாததும், புத்துயிர் தருவதும், வரட்சியான வேளைகளில் புதிய ஊக்கம் ஊட்டுவதுமான நிதியைப் போன்றதாகும். வளப்பம் கொண்ட மனிதர் புதுக் கருத்துகள் கொண்ட மனிதராவர். பிறர் மங்கி மறைந்து போகின்ற வேளையில் புதுக் கருத்துகள் கொண்ட மனிதர் செழிப்படைகின்றனர்.

வளப்பம் பண்பட்டு நிறைவு நிலையடைதலே விளைவு என்ற உற்பவமாகும். உற்பவம் எங்குளதோ அங்கே தனித்திறமையும் இருக்கின்றது. தனித்திறமை படைத்த மனிதரே உலகின் ஒளிகளாவார். மனிதன் எந்த வேலையைச் செய்வதெனினும் சரியே, அவன் தன் சொந்த வளப்பங்களைக் கொண்டே அதைச் செய்ய வேண்டும். தனது வேலையில் உள்ளார்ந்து ஈடுபட்டு அதைப் புதியதாகவும், உற்பவமானதாகவும் ஆக்கிவிடவேண்டும். விளைவினை உண்டாக்கும் மனிதர் உலகினரின் காதினைக் கவர்ந்துவிடுகின்றனர். அவர்கள் முதன் முதலில் புறக்கணிக்கப் படலாம். ஆனால், இறுதியில் அவர்கள் ஒப்புக் கொண்டு மனித இனத்தின் இலக்குகளாகி விடுகின்றனர். மனிதன் உற்பவத் திறமையை ஒரு முறை பெற்றுவிட்டானெனின் தனது குறிப்பிட்ட துறையின் அறிவிலும், திறமையிலும் மக்களிடையே ஒரு தலைவராகத் தன்னிடத்தைப் பெற்றுவிடுகின்றான். ஆனால், உற்பவத்தைப் புகுத்தவியலாது; அதை வளரச் செய்யவே இயலும்;

ஒருவனின் மன ஆற்றல்களை நிறைவாகவும், நேராகவும் பயன் படுத்துவதால் திறமையின் அளவு கோலில் ஏற்றம் பெற்று மேம்பாட்டிலிருந்து மேம்பாட்டிற்குச் செல்லுவதாலேயே அதை வளர்க்க முடியும். மனிதன் தன்னைத் தானே தன் வேலைக்கென ஒப்படைத்துவிடட்டும்; அவ்வாறு ஒப்படைத்த பின்பு அதன்மீது தன் ஆற்றல்கள் அனைத்தையும் ஒப்படைத்துவிடட்டும்; உலகம் தன் வலிமை மிக்க மக்களுள் ஒருவனாக அவனை வாழ்த்தும் நாள் வந்தே தீரும். பல ஆண்டுகள் விடா முயற்சியுடன் உழைத்த பின்பு "நான் ஒரு தனித்திறமை படைத்தவனாகப் போகின்றேன்" என்று விதந்துரைத்த பால்ஸாக் போன்று தானும் உற்பவ மனங்கள் குழுவுடன், அதாவது மனித இனத்தைப் புதிய, உயர்ந்த, மிகுநலஞ்சூழ் வழிகளில் நெறிப்படுத்துகின்ற களிப்போடு கடைசியில் கண்டு கொள்வான்.

# சால்பு

ஆக்கத்தை மலிவாக விலைபேச முடியாது. கூரிய அறிவு கொண்ட உழைப்பினால் மட்டுமே ஒழுக்க ஆற்றலைக் கொண்டே அதை விலைக்கு வாங்கியாக வேண்டும். நீர்க்குமிழி நீடித்து நிலைபெற முடியாதது போன்று, கபடன் செழிக்கவும் முடியாது. பணத்தைப் பெறுவதற்கு ஆர்வத்துடிப்புடன் அவன் பாய்கின்றான், பின்பு படுத்து விடுகின்றான். ஏமாற்றுவதால் என்றுமே எதையும் பெற முடிந்ததில்லை; என்றுமே பெறவும் முடியாது. அவ்வாறு அடையப் பெற்றவை எதுவாயினும், அது மிகுதியான வட்டியுடன் திரும்பத் தரப்பட வேண்டிய நிலையில் குறிப்பிட்ட காலத்திற்குப் பிடித்து வைத்துக் கொள்ளப்படுவதே யாகும். ஆனால், ஏமாற்றுதல் தீவினைக்கு அஞ்சாத எத்தனிடம் மட்டுமே அடைபட்டுக் கிடக்கவில்லை. அவர்கள் அறிந்திருப்பினும் சரி, இல்லையெனினும் சரி, சரிசமமான ஒன்றை மாறாகத் தராமல் பணத்தைப் பெறுவோர் அல்லது பெற முயல்வோர் அனைவரும் ஏமாற்றுவதைக் கையாளுபவரே யாவர்.

பெறுதற்கான உழைப்பை மேற்கொள்ளாது பணத்தைப பெறுவது எவ்வாறு என்று பற்றார்வமுடன் திட்டமிடும் மனிதர் எத்தர்களேயாவர். இவர்கள் மனத்தால் திருடனோடும், ஏமாற்றுக்காரனோடும்

நெருங்கிய நேயம் கொண்டவராகி விடுகின்றனர். உடனேயோ பின்போ இவர்கள் அவர்களின் வயப்பட்டுத் தம் கை முதலை இழக்கும்படி அவர்கள் செய்து விடுகின்றனர். நேர்மையான கைம்மாறு செய்யாது கவர்ந்து கொள்ள வேண்டுமென்ற விருப்பத்தை அதன் எல்லைக்கே எடுத்துச் செல்லுகின்ற மனிதரையன்றி யார் திருடர்? நேர்மையான தொழில் அனைத்திலும் இதுவே பெரிய அடிநிலை முறையாகும். அதே போது ஆன்மீகக் காரியங்களில் இது பிறர் நமக்குச் செய்ய வேண்டுமென்று நாம் எதிர்பார்ப்பதை நாம் பிறர்க்குச் செய்வதாகும்; உலக ஆற்றல்களுடன் பொருத்திப் பார்க்கையில் "செயலும் செயல் விளைவும் சமமேயாகும்" என்னும் வாய்பாடாக அறிவியல் பாங்கில் கூறப்படுகின்றது.

மனித வாழ்வு பரிமாற்றத்திற் குட்படுவதே அன்றிப் பறித்தெடுத்துக் கொள்ளப்படுவதன்று. பிறர் அனைவரையும் தனது முறைப்படியான இரையாகக் கருதுகின்ற மனிதன், தான் ஆக்கப் பாதையினின்றும் மிகவும் அப்பாற்பட்டு அழிவென்னும் பாலை வனத்தில் முடங்கிக் கிடப்பதை விரைவில் கண்டு கொள்வான். மேலும், நாணயமான மனிதருடன் வெற்றிகரமாகக் கொண்டுசெலுத்த முடியாத அளவில் உள்ளது சிறத்தல் முறையில் மிகவும் பின் தங்கி விடுகின்றான். தகுதியுடையோர், சிறந்தோர் எப்போதும் தொடர்ந்து வாழ்கின்றனர். எனவே, இவன் இருப்பதால் தொடர்ந்து நடத்த முடிவதில்லை. இவன் காலத்தால் மாறிக் கொள்ளவில்லையெனின், இவனுடைய முடிவு சிறைச்சாலையாகவோ, அருவருப்பான குடிசையாகவோ ஒதுக்கப்பட்ட போக்கிரிகளின் இடமாகவோ இருக்கும்.

அவனுடைய முயற்சிகள் அழிவுச் சார்புடையன ஆக்கச் சார்புடையனவல்ல; இவன் அதனால் தன்னைத் தான் அழித்துக் கொள்கின்றான்.

கபடன், பொய்யன், ஏமாற்றுக்காரன், நாணயமற்ற மனிதன் எதையும் கட்டவியலாது; ஏனெனின், கட்டுமானத்திற்கு வேண்டிய கருவிகளோ செய்முதற் பொருளோ அவனிடம் கிடையாது. ஒரு சமயத்தைத் தோற்றுவிக்கவோ ஒரு செங்கல் வீட்டைக் கட்டவோ இயலாதவாறு போன்ற ஒரு தொழில், ஒரு குணவியல்பு, ஒரு வாழ்க்கை நெறி, ஒரு வெற்றி எதையுமே அவன் உருவாக்க முடியாது. அவன் உருவாக்க முடிவதில்லை. பிறர் உருவாக்கி இருப்பவனவற்றிற்குத் தீங்கிழைத்து வீழ்த்துவதிலேயே அவனுடைய ஆற்றல்கள் அனைத்தும் திருப்பப்படுகின்றன; ஆனால், அது இயலாதுபோவதால் அவன் தன்னைத்தான் வீழ்ச்சி அடையச் செய்துகொள்கின்றான்.

சால்பின்றேல் ஆற்றலும், சிக்கனமும் இறுதியில் தோல்வியுற்றுவிடும்; ஆனால், சால்பின் சார்பிருப்பின் அவற்றின் வலிமை பெரிதும் பெருகும். ஒழுக்கக் கூறு பங்கெடுத்துக் கொள்ளாத வேளையே வாழ்வில் இல்லை. மிகச் சிறப்பான சால்பு எங்கிருப்பினும் தன்னை உணர்த்தி நிற்பதோடு கொடுக்கல் வாங்கல்கள் அனைத்திலும் தனது முத்திரையைப் பொறித்துவிடும்; வியப்பிற்குரிய அவனுடைய இசைவுச் சீராலும், நிலையமைதியாலும், வெல்ல முடியாத வலிமையாலுமே அது அவ்வாறு செய்கின்றது.

ஏனெனின், சால்புடைய மனிதன் செயல்களின் நிலைபேறுகொண்ட விதிகளின் வழியே நடப்பவனா யிருக்கின்றான். அவ் விதிகளாவன மனித சமூகம் நிலைபேறு கொண்டுள்ள அடிநிலை முறைகள் மட்டுமன்று, இப் பரந்த உலகத்தையே ஒன்றாக இணைத்திருக்கும் விதிகள். இவற்றை யாரே வெறுமையாக்கிவிட முடியும்? அவன் என்றும் ஊற்றுகளால் ஊட்டுவிக்கப்படுகின்ற வேர்களைக் கொண்ட வலிமையான மரத்தைப் போன்றனவாகும்; எந்தச் சூறாவளியும் அதைச் சாய்த்து வீழ்த்திவிட முடியாது.

சால்பு முழுமைநிலை எய்தியதாகவும், வலிமை உடையதாகவும் இருக்க வேண்டுமெனின், அது முழுமனிதனையும் தழுவி நிற்க வேண்டும். அது அவனுடைய வாழ்வின் நுணுக்கங்கள் அனைத்திலும் பரவி நிற்கவேண்டும்; நெறிப் பிறழ்ச்சிக்கு விட்டுக் கொடுக்கத் தூண்டும் ஆர்வ அவா எழுச்சிகள் அனைத்தையும் எதிர்த்துத் தடை செய்யுமளவிற்கு அது அத்துணை ஆழப் பதிந்ததாகவும், நிலையானதாகவும் இருக்க வேண்டும். ஒரு நிகழ்ச்சியில் தோல்வியுறுவது என்பது அனைத்திலும் தோல்வியுற்று விடுவதேயாம். எத்துணை தேவையான தாகவும், மிகச் சிறிய காரியமாகவும் தோற்றமளிப்பினும் நெருக்கடியானபோது பொய்ம்மைக்கு விட்டுக் கொடுக்க ஒப்புக் கொள்வது, சால்பு எனும் கேடயத்தை வீசி எறிந்து விட்டுத் தீமையின் தாக்குதல்களுக்குத் தன்னைத் திறந்து காட்டுவதேயாகும்.

சால்பிலே ஆழ்ந்து வேரூன்றாத மனிதன் தனது நல்வாய்ப்புகளுக்காகவும், ஆக்கத்திற்காகவும் ஒரு

பொய்யைப் பேசுவதோ நேர்மையிலாத ஒரு செயலைச் செய்வதோ தேவையெனத் தோன்றுகின்ற காலமும் வந்துவிடும்; ஆனால், அவ்வாறு அவா ஊட்டப் பெற்றுவிடுகின்ற ஒருவன் உறுதியற்றதும், திகைப்புற்றதுமான வேளையில் தன்னகத்திருந்தே எழுகின்ற பொய்ம்மையின் நுட்பமான சூழ்ச்சித் திறத்தை உதறியெறிந்து விட முடியவேண்டும். நடத்தைப் பிசகில் அமிழ்ந்து விடுவதைக் காட்டிலும் இழந்துவிடவும், இன்னல் படவும் சித்தமாயிருக்கின்ற வகையில் நியதியின் வழியில் உறுதியாக நிற்கவேண்டும். இந்த ஒழுக்க நெறியினைக் குறித்து இவ் வழியில்தான் ஒருவன் அறிவொளி ஊட்டப் பெற்றவனாகவும், சால்பு ஆதாயத்திற்கும், இன்பத்திற்கும் வழிகாட்டுகின்றதே அன்றி இழப்பிற்கும், துன்பத்திற்கும் அன்று எனும் உண்மையைக் கண்டு கொள்ளவும் முடியும். நாணயமும், இழப்பும் காரண காரியத் தொடர்பு கொண்டன அல்ல, கொள்ளவும் முடியாது.

மெய்ம்மைக்கு மாறாக நடப்பதைக் காட்டிலும் ஈ(தியா)கஞ் செய்ய முடிவாயிருப்பதே வாழ்வின் கடமைகள் அனைத்திலும் அறிவொளியூட்டும் வழி காட்டியாகின்றது. ஏதேனும் தன்னல நோக்கை விட்டுக் கொடுப்பதைவிடப் பொய் மொழியவோ ஏமாற்றவோ துணிகின்ற மனிதன் ஒழுக்கநெறி அறிவைப் பெறும் உரிமையைப் பறிகொடுத்தவனாகின்றான். அவன், வஞ்சகப் பக்தர்களின் நடுவே, இரண்டக நிலையான ஏமாற்றங்கள் செய்பவர்களின் நடுவே, குணவியல்பும், நன்மதிப்புமில்லா மனதர்களின் நடுவே கீழ்வரிசையில் இருப்பவனாகிறான்.

கடுமையான போட்டி நிறைந்த இந்த நாள்களில்

நாணயமுடனிருந்து எந்த மனிதனும் செழிப்படைய வியலாது என்று பொய்பேசும் ஒருவர் நம்மிடம் கூறக்கூடும். அத்தகைய மனிதன் என்றுமே நாணத்துடனிருக்க முயன்றதில்லை என்றிருக்கையில் அவன் எவ்வாறு இதையறிந்து கொள்ள முடியும். மேலும், அத்தகைய மனிதனுக்கு நாணத்தைப் பொறுத்த அறிவு எதுவும் கிடையாது. எனவே, அவனுடைய மொழி அறியாமையின் கூற்றேயாகும். தன்னைப்போலவே பிறர் அனைவருமே அறியாமையும், பொய்ம்மையும் நிறைந்தவரே என மூடத்தனமாக எண்ணுகின்ற அளவிற்கு அறியாமையும், பொய்ம்மையும் ஒருவனைக் குருடனாக்கிவிடுகின்றன.

ஏறத்தாழ நாணயமாக இருப்பது என்பது நாணயமின்மையைக் குறிக்கும் பிறிதொரு சொல்லேயாகும். நேரான வழியினின்றும் சிறிது விலகுபவன் மேலும் அதிகமாகவே விலகுவான். நேர்மையெனும் நிலையான நியதி அவனுக்குக் கிடையாது. தனது சொந்த நலனையே எண்ணிக் கொண்டிருக்கின்றான். தனது குறிப்பிட்ட நாணயமின்மை வெளிப்படையானதும், கேடு பயக்காததுமான நிலை என்றும், தனது அண்டை வீட்டானைப்போல் தான் அத்துணைத் தீயவனல்லன் என்று தன்னைத்தான் தேற்றிக் கொள்வது, ஒழுக்க முறைகளைக் குறித்து அறியாமை உண்டுபண்ணுகின்ற பலவகையான மயக்கங்களில் ஒன்றேயாகும்.

வாழ்வில் பல்வேறுபட்ட தொடர்புகளிலும் கொடுக்கல் வாங்கல்களிலும் மனிதனுக்கு மனத்தின் நேர்மையுடன் நடந்துகொள்வதே சால்பின் உள்ளுயிர்.

அது நாணத்தைத் தன்னுள் கொள்வதாகின்றது; எனினும் அது நாணயத்தைவிட மேம்பட்டதாகும். அதுவே மனித சமூகத்தின் முதுகெலும்பு. மனித நிறுவனங்களின் அடிப்படையும் அதுவே. அதன்றி நம்பிக்கையிராது. வாணிப உலகம் வீழ்ச்சியடையும் வகையில் தலைகீழாகக் கவிழ்ந்துவிடும்.

பொய்யன், மனிதன் அனைவரையுமே பொய்யர்கள் என்று எண்ணி அவர்களை அவ்வாறே நடத்துவது போன்று சால்புடைய மனிதன் பிற மனிதர் அனைவரையுமே நம்பிக்கையுடன் நடத்துகின்றான். இவன் அவர்களை நம்புகின்றான்; அவர்கள் இவனை நம்புகின்றனர். இவனுடைய தெளிவான கண்ணும், திறந்த கைகளும் திருட்டுத்தனமாகச் செல்லும் எத்தன் அவனுடைய எத்துமானத்தைத் தன்னிடம் கையாள முடியாதபடி அவனை அவமானப் படுத்திவிடுகின்றன. எமர்சன் வெகு அழகாகக் கூறியிருக்கின்றார்; "மனிதர்களை நம்பு, அவர்கள் தம் வாணிப விதிகள் அனைத்திலிருந்தும் உன் சார்பாக ஒரு விதி விலக்கைச் செய்வதாயினும், உன்னிடம் உண்மையுடனிருப்பர்".

வியப்பு, ஊக்கம் இரண்டையும் உண்டு பண்ணுகின்ற தன்னை உணராத சிறப்பைச் சால்புடைய மனிதன் தன்னிடத்தே கொண்டிருக்கின்றான். சிறியவை, இழிந்தவை, தவறானவை இவற்றிற்கு மேம்படத் தன்னை உயர்த்திக் கொண்டபின்பு இக் கோழைமையான நேர்மைக் கேடுகள் அவன் முன்னிலையில் குழப்பத்தால் பதுங்கிச் செல்கின்றன. மிகவுயர்ந்த இந்த ஒழுக்கச் சிறப்புடன் உயர்ந்த ஆய் பண்புத் திறமும் ஒப்புக் காட்ட முடியாது.

தனித் திறமை வாய்ந்த மனிதனைவிடச் சால்புடைய மனிதனே மக்கள் நினைவிலும், உலகத்தின் மதிப்பீட்டிலும் உயர்ந்த இடத்தை வகித்து வருகின்றான். "தன்னுரிமையான சால்பின் ஒழுக்கச் சிறப்பே இயற்கையின் விழுமிய பொருளாகும்" என்று பக்மின்ஸ்டர் கூறுகின்றார். அதுவே வீரர்களை உண்டு பண்ணுகின்ற மனிதப் பண்பு. நெறி திறம்பாத நேர்மையுடைய மனிதன் இயல்பாக எப்போதும் ஒரு வீரனாக விளங்குகின்றான். அந்த வீரப் பான்மையை வெளிக்கொணரத் வாய்ப்பே தேவைப்படுகின்றது. மேலும், அவன் எப்போதும் நிலையான மகிழ்ச்சியுடையவனாகவே இருக்கின்றான். தனித்திறமை வாய்ந்த மனிதன் மிகவும் மகிழ்ச்சி யற்றவனாக இருக்கலாம்; ஆனால் சால்புடைய மனிதன் அவ்வாறில்லை. நேர்மையின் உள்ளார்ந்த பண்பா யிருக்கின்ற நிலையான மன நிறைவை நோயோ பேரிழப்போ அன்றி இறப்போ கவர்ந்துவிட முடியாது.

நேர்மை அடுத்தடுத்த நான்கு படிகளில் அவனை ஆக்கத்திற்கு அழைத்துச் சென்றுவிடுகின்றது. முதன் முதலில் நேர்மையான மனிதன் பிறருடைய நம்பிக்கையைப் பெற்றுவிடுகின்றான்.

இரண்டாவதாக அவர்கள் அவன் மீது நம்பிக்கை கொள்கின்றனர்.

மூன்றாவதாக இந்த நம்பிக்கை என்றுமே மீறாத நிலையில் ஒரு நற்பெயரை உண்டு பண்ணுகின்றது; நான்காவதாக, நற்பெயர் மேலும் மேலும் பரவுகின்றது; எனவே, வெற்றியைக் கொணருகின்றது.

நாணயமின்மை நேர்மாறான விளைவை உடையதாக இருக்கின்றது. பிறருடைய நம்பிக்கையை அழித்துவிடுவதால் அது அவர்களிடையே ஐயப்பாட்டையும், நம்பிக்கைக் கேட்டையும் உண்டு பண்ணுகின்றது; இவை தோல்வியில் முடிவு பெறுகின்ற ஒரு மோசமான பெயரை உண்டு பண்ணுகின்றது.

சால்பென்னுந் தூண் வீறியமுள்ள இந்த நான்கு கூறுகளாலும் ஒருமித்து வைக்கப்படுகின்றது.

1. நாணம் 3. இலக்கு

2. அஞ்சாமை 4. வெல்லக் கூடாமை

நாணயம் வெற்றிக்கான உறுதியான வழியாகும். நாணயமற்ற மனிதன் துன்பத்திலும், துயரத்திலும் கழி விரக்கம் கொள்கின்ற நாள் வந்தே தீருகின்றது. ஆனால். நாணயமுடன் இருந்துவிட்டதற்காக எந்த மனிதனும் என்றுமே கழிவிரக்கம் கொள்ளத் தேவையில்லை. நாணயமுள்ள மனிதன் தோல்வியடைந்து விடினும் கூட, நாணயமற்ற மனிதனுக்கு இருப்பதைப் போன்று அத் தோல்வி அவனுக்குத் துக்கந் தருகின்ற காரியமன்று. ஏனெனின், தன்னைப் போன்றோன் ஒருவனை அவன் என்றுமே வஞ்சித்ததில்லை எனும் உண்மையில் அவன் மகிழ்ச்சியடையலாம். அவனுடைய இருண்ட நேரத்திலும் அவன் தெளிவான மனச்சான்றுடன் இளைப்பாறுதல் பெறுகின்றான்.

நாணயமின்மை ஆக்கத்தைப் பெறும் ஒரு குறுக்கு வழியென அறிவற்ற மனிதர் எண்ணுகின்றனர். இது

காரணமாகவே அவர்கள் அதைக் கையாளுகின்றனர். நாணயமற்ற மனிதன் ஒழுக்க நெறியைப் பொறுத்த அளவில் அணுக்கப் பார்வைக் கோளாறு கொண்டவனேயாவான். இறுதியில் ஏற்படும் இழிவை எண்ணிப் பார்க்காமல் தனது பழக்கத்தின் உடனடி மகிழ்ச்சியைக் காணுகின்ற குடிகாரனைப போன்று, அவன் நாணயமற்ற செய்கையின் "பெருத்த ஆக்கம்" போன்ற உடனடி விளைவைக் காணுகிறானேயன்றி அதன் இறுதி விளைவை எண்ணுவதேயில்லை. அத்தகைய செயல்கள் அதிகரித்துக் கொண்டே போகும் எண்ணிக்கை தனது குணவியல்பைத் தவிர்க்க முடியாத நிலையில் வீழ்த்தி விடுவதோடு, தன் காதுகளில் ஒலிக்கும் வண்ணம் தனது வாணிபம் அழிவினுள் கவிழ்ந்து வீழும் நிலைக்கும் கொணர்ந்துவிடும் என்பதை அவன் காணுவதில்லை.

தன் கீழ்ப் பணியாற்றுபவர்கள் பொய் மொழிந்து வாடிக்கைக்காரர்களிடம் தனது சரக்கைக் குறித்துத் தவறுதலாக எடுத்துக் கூறவேண்டுமென்று ஒரு வணிகன் வேண்டிக் கொள்வது ஐயப்பாடு, நம்பிக்கையின்மை, வெறுப்பு இவை தன்னைச் சுற்றிக் கைகள் கோத்து நிற்குமாறு செய்து கொள்வதாகும். அவனுடைய கட்டளைகளை நிறைவேற்றுகின்ற ஒழுக்க வலிமையற்றோர்கூட அவனது தூய்மையற்ற வேலையால் தம்மைக் கறைப்படுத்திக் கொள்கின்ற அதே வேளையில் அவனை எள்ளி நகையாடுவர். அத்தகைய நச்சுச் சூழ்நிலையில் வெற்றி நிலைத்து நிற்றல் எவ்வாறு கூடும்? அத்தகைய வாணிபத்தில் அழிவின் சாயல் ஏற்கனவே ஏற்பட்டிருக்கின்றது; அதனுடைய வீழ்ச்சியின் நாளும் குறிக்கப்பட்டு விடுகின்றது.

நாணயமான மனிதனும் தோல்வியடயலாம்; ஆனால், அவன் நாணயமாக இருந்து வருவதால் தோல்வி யடையவில்லை; அவனுடைய தோல்வி தகைசான்றதாவே இருக்கும் அவனுடைய குணவியல்புக்கும் புகழுக்கும் ஊறு விளைவிக்காது. குறிப்பிட்ட திசையில் அவனுக்கு திறமையில்லாததன் விளைவாக ஏற்படும் தோல்வியும் கூட, அவனுடைய திறமைகளுக்குப் பொருத்தமான ஏதேனும் ஒன்றிற்கும், அதன் காரணமாக இறுதியான வெற்றிக்கும் வழிகாட்டும் வகையுமாகவே இருக்கும்.

**அஞ்சாமை** – நாணத்தைத் தொடர்ந்தே வருகின்றது. நாணயமுள்ள மனிதன் தெளிவான கண்ணும், மனவுறுதியுடன் நிற்கும் பார்வையும் கொண்டிருக்கின்றான். அவன் தன் கூட்டாளிகளை முகத்திலேயே உற்றுப் பார்ப்பதுடன், அவனுடைய பேச்சு நேரடியானதாகவும், அமைதியுடையதாகவும் இருக்கும். பொய்யானதாகவும், ஏமாற்றுபவனாகவும் இருப்பவன் தனது தலையைத் தொங்கவிடுகின்றான்; அவனுடைய கண்கள் குழம்பிக் கலக்க முற்றுப் பார்வைக் கோணலுடன் இருக்கின்றன. அவன் பிறிதொரு மனிதனைக் கண்ணில் ஏறிட்டுப் பார்க்க முடிவதில்லை. உறுதியற்றதாகவும், நிறைவற்றதாகவும் இருப்பதால் அவனுடைய பேச்சு அவநம்பிக்கையையே உண்டு பண்ணுகின்றது.

நாணயமற்ற மனிதர் எப்போதும் அச்சத்துடனேயே இருக்கின்றனர். அவர்கள் கடன் பட்டதற்காக அஞ்சுவதே யில்லை. ஆனால், தம் கடன்களைச் செலுத்த வேண்டுமே என்பதற்காகவே அஞ்சுகின்றனர். அவர் தம் கூட்டாளிகளைக் கண்டு அஞ்சுகின்றனர். அதிகாரிகளைக்

கண்டு அஞ்சுகின்றனர். தம் செயல்களால் விளையும் விளைவுகளுக்காக அஞ்சுகின்றனர். மேலும் தம் குற்றச் செயல்கள் வெளிப்பட்டு விடக் கூடாதே என்பதற்காகவும், எந்த விநாடியிலும் தம்மைச் சூழ்ந்துவிடக்கூடிய அவற்றின் விளைவுகளுக்காகவும் இடைவிடாது அச்சம் கொண்டிருக்கின்றனர்.

நாணயமுள்ள மனிதன் அச்சத்தின் இச் சுமையனைத்தும் களைந்தவனாக இருக்கின்றான். அவன் கவலையற்றுத் தன் கூட்டாளிகளிடையே நிமிர்ந்து நடப்பவனாகவும் இருக்கின்றான்; எந்தக் குணத்தையும் பாவனை செய்து கொள்ளாதவனாகக் கடமையில் தவறாதவனாகக் கெஞ்சுதல் இல்லாதவனாகத் தன்னியல்போடு இருப்பவனும், கணக்குக் கண் காண்பவனுமாக இருக்கின்றான். எவ்வித வஞ்சனையோ ஊறு விளைத்தலையோ செய்யாத நிலையில் அஞ்ச வேண்டியவர்யாருமிலர்; அவனுக் கெதிராகக் கூறப்படுவது எதுவாயினும் அது அவன் நற்பயனுக்காகவே சேர்ந்துதவும்.

நெருக்கடிகள் அனைத்தின்போதும் உதவி புரிந்து, இடர்ப்பாடுகளை ஆண்மையுடன் பொருது வெல்ல உதவி செய்து, முடிவில் அவனிடமிருந்து கவரப்பட முடியாத மேன்மையையும் அஞ்சாமையே மனித வாழ்விற்கு ஒரு வலிமையான அரணாகும்.

**இலக்கு** : சால்பு ஊட்டி வளர்க்கின்ற குணவியல்பு வலிமையின் நேரடியான விளைவேயாகும். சால்புடைய மனிதன் நேரடியான குறிக்கோள்களும், வலிமையும் அறிவுக் கூர்மையுள்ள உட்கோள்களும் கொண்ட

மனிதனாவான். அவன் ஊகிப்பதுமில்லை, இருளில் உழைப்பதுமில்லை. அவனுடைய திட்டங்கள் அனைத்தும் அவனுடைய குணவியல்பு வார்த்தெடுக்கப் பட்டிருக்கின்ற குணவியல்புத் திறத்தில் சிறிதளவைக் கொண்டதாகவே இருக்கும்.

எந்தச் சூழ்நிலையைப் பொறுத்தும் மிகவும் பரந்த நோக்கத்தைக் கொண்டிருக்கின்ற அதே வேளையில் நுணுக்கங்களையும் அவற்றுள்ளடங்கிய நியதிகளையும் விரிபொருள் அகங்கொள்ளும் வகையில் புரிந்து கொள்ளும் நிலை அவனுக்கு அளிக்கின்ற உயர்ந்த ஆற்றலையும் கையாளுகின்றான். ஒழுக்க நெறி எப்போதும் வேளைக்கேற்ற பொருத்தமெனும் அனுகூலத்தை உடையதாயிருக்கின்றது. அதனுடைய உட்கோள்கள் எப்போதும் மேற்பரப்பினின்றும் மிகுந்த ஆழத்தை யடைந்து விடுகின்றது; எனவே, அது மிகுந்த உறுதிப்பாடும், மிகுந்த வலிமையும், நீடித்த நிலைபேறும் கொண்டதாயிருக்கின்றது. சால்பைப் பொறுத்த வரை அதில் ஓர் இயற்கையான நேர்முகப் பாங்கும் இருக்கின்றது; இது, மனிதன் செய்வது எதுவாயினும் அவன் நேராக இலக்கை நோக்கிச் செல்ல உதவியளிப்பதுடன், தோல்வியை ஏறத்தாழ இயலாத தாக்கிவிடுகின்றது.

வலிமைமிக்க மனிதர் வலிமைமிக்க இலக்குகளைக் கொண்டிருக்கின்றனர். வலிமைமிக்க இலக்குகள் வலிமைமிக்க பேறுகளுக்கு வழிகாட்டுகின்றன. சால்புடைய மனிதன் பிற மனிதர் அனைவரையும் விட உயர்ந்த வலிமையுடையவனாக இருக்கின்றான்; தனது வாழ்வெனும் வாணிபத்தை அவன் நடத்துகின்ற

தீர்க்கத்தின் கண் அவனுடைய வலிமை காணக்கிடக்கின்றது; மதிப்பு, பாராட்டு, வெற்றி இவற்றைப் பணிக்கின்ற தீர்க்கமாகும் அது.

**வெல்லக் கூடாமை :** ஒரு மேம்பட்ட பாதுகாப்பாகும்; ஆனால், நிறைவான தூய்மையும், அழிக்க முடியாத சால்புமுடைய மனிதனையே அது காக்கின்றது. மிகமிகச் சிறு திறமான நுட்பத்திலும் கூடச் சால்பின் நியதியை என்றுமே மீறாதிருத்தலாவது, மறைமுகக் குத்தல் பேச்சு, அவதூறு, பொய்யான விளக்கம் இவற்றின் தாக்குதல்கள் அனைத்தும் தன்னை வெல்லக் கூடாத நிலையிலிருப்பதாகும். இவற்றில் ஒரு பகுதியிலே யாயினும் தோல்வியுற்று விடுகின்ற மனிதன், ஊறுபடத் தக்கவனேயாவான்; கண்ணனின் குதிகாலில் பாய்ந்த அம்பைப் போன்று தீமையெனும் அம்பு அப்பகுதியில் புகுந்து அவனைக் கீழே வீழ்த்திவிடும். தூய்மையானதும், நிறைவானதுமான சால்பு, தாக்குதல், ஊறு அனைத்திற்கும் எதிரான சான்றாகும்; அதனைக் கொண்டிருப்போர் எதிர்ப்பு, கொடுமை அனைத்தையும் அச்சமில்லாத் தீரமுடனும், விழுமிய உள்ளச் சமநிலையுடனும் பெற வகை செய்கின்றது.

உன்னதனமான ஒழுக்க விதிகளை மெய்யறிவுடன் ஏற்றுக் கைக்கொண்டொழுகுவதினின்றும் பிறக்கின்ற உள்ள ஆற்றலையும், மன அமைதியையும், எத்துணையளவு திறமையும், அறிவாற்றலும் அல்லது வாணிப மதிக் கூர்மையும் தர இயலாது. ஒழுக்க ஆற்றலே உயர்ந்த ஆற்றலாகும். உண்மையான ஆக்கத்தை நாடுபவன் இவ் ஆற்றலை கண்டறியட்டும்; தன் மனத்திலும், தன்

செயல்களிலும் அவன் அதை ஊட்டி வளர்க்கட்டும்; அவன் வெற்றியுறுகிறபோது வையகத்தின் வலிமைமிக்க தலைவர்களின் வரிசையில் தானும் இடம் பெற்றுவிடுவான்.

சால்பெனும் தூண் அத்துணை வலிமையும் திண்மையும் கொண்டதாகும். தனது வாழ்வெனும் கோயிலுள் அதன் நடுநிலை பிறழாத வேலைப்பாட்டைக் கட்டி முடிப்பவனே மனிதர் அனைவரையும் விட மேலான அருளும் ஆக்கமும் பெற்றவனாவான்.

# முறைப்பாடு

குழப்பத்திற்கு இடமின்றிச் செய்துவிடுகின்ற ஒழுங்கமைப்பு என்னும் அறமே முறைப்பாடு. இயற்கையான உலக ஒழுங்கமைப்பின்கண் ஒவ்வொன்றும் அதனதன் இடத்திலேயே அமையப் பெற்றிருக்கின்றது; எனவே, மிகவும் சரி நுட்பமான இயந்திரத்தைவிடக் கூடுதலான சரி நுட்பத்துடன் உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. விண்ணில் ஏற்படும் ஒழுக்கக் கேடு உலக அழிவையே குறிக்கும்; மனிதன் செய்யும் காரியங்களில் ஒழுக்கக்கேடு அவனுடைய வேலைப் பாட்டையும், ஆக்கத்தையும் அழிக்கின்றது.

பல கலப்பான நிறுவனங்கள் அனைத்தும் முறைப் பாடு மூலமே உருவாக்கப்பட்டிருக்கின்றன. முறைப் பாடின்றி எந்த வாணிபமும் அன்றிச் சமூகமும் பெரிய உருவளவைகளுக்கு வளர்ச்சியடைய இயலாது; வணிகர், நிறுவனங்களை ஒழுங்கமைப்பவர், இவர்க்கு இந்த அறமுறையே முதன்மையான கருவியாகும்.

ஒழுங்கமைப்பில் கருத்தூன்றுங்கால் அது வெற்றியைப் பெருக்கும் என்பது ஒருபுறமிருக்க, ஒழுங்கமைப்பில்லா மனிதனும் வெற்றியடைந்து விடக் கூடிய பல துறைகளும் உள்ளன. ஆனால், முறைப்பாடுள்ள

ஒரு மேலாளரின் கைகளில் தனது வாணிபத்தை முழுமையாக ஒப்படைக்க வில்லையெனின் வாணிபத்தில் அவன் வெற்றி காண இயலாது. அதன் மூலம் அவன் தன் சொந்தக் குறைபாட்டிற்கும் கழுவாய் கண்டு கொள்பவனாகின்றான்.

பெரிய தொழில் வாணிப நிறுவனங்கள் அனைத்தும் திட்பமுடன் வரையப்பெற்ற முறைப்பாட்டு நெறிகளின் போக்கிலேயே படி வளர்ச்சி பெற்றிருக்கின்றன. அதில் எதையேனும் மீறுதல் வாணிபத்தின் திறமைக்கும், சேமத்திற்கும் அழிவினை உண்டாக்கிவிடும். இயற்கையிலுள்ள பல கலவைப் பிழம்புகளைப் போலவே, நுணுக்கங்களில் அதிநுட்பக் கருத்துச் செலுத்துவதன் மூலமே, சிக்கலான தொழிலோ பிற நிறுவனங்களோ கட்டமைக்கப் பெறுகின்றன. சிறப்பான குறிக்கோளைத் தவிர பிற ஒவ்வொன்றைப் பொறுத்தும் அக்கறை யற்றிருக்கலாம் என ஒழுங்கில்லா மனிதன் எண்ணு கின்றான். ஆனால், வழிவகைகளைப் புறக்கணிப்பதன் காரணமாக அவன் குறிக்கோளையே முறிக்கின்றான். நுணுக்கங்கள் சீர் கெடுக்கப்படுவதால் அங்கக் கட்டுப்பாடு அழிகின்றது; நுணுக்கங்களைக் கருத்தூன்றிக் கவனியாது புறக்கணிப்பதால் எந்தப் பணியும், அல்லது நிறுவனத்தின் வளர்ச்சியும் தடைபடுகின்றது.

ஒழுங்கில்லா மக்கள் மிகப்பெரிய அளவில் நேரத்தையும், ஆற்றலையும் பாழ்படுத்துகின்றனர். பொருள்களைத் தேடுவதில் சிதறடிக்கப்பட்ட நேரம் ஒழுங்கமைவுடன் பேணிக் காக்கப்பட்டிருப்பின் எவ்வகை வெற்றியையும் பெறுதற்கு அவர்களுக்கு உதவி புரியப்

போதுமானதாகும். ஏனெனின், எதைப் பெறுவதாயினும் சோம்பலுடைய மக்கட்கு என்றுமே இடமிருப்பதில்லை. அவர்களுக்குத் தேவைப்படுகின்ற எப் பொருளாயினும் அவர்கள் தேடியே ஆகவேண்டும், அதுவும் வழக்கமாக நெடுநேரம் தேடியாக வேண்டும். ஒரு பெரும் தொழிலை நிறுவுவதற்கோ சாதனையின் உச்சிகளை அறிந்து காணுவதற்கோ தேவைப்படுகின்ற அத்துணையளவு ஆற்றல், பொருள்களை நாடும் தேட்டம் உண்டு பண்ணுகின்ற எரிச்சல், இழிவான உள்ளநிலை, ஏமாற்றம் இவற்றில் வீணாக்கப்படுகின்றது.

ஒழுக்கமுடைய மக்கள் தம் நேரம், ஆற்றல் இரண்டையுமே பேணிக் காக்கின்றனர். அவர்கள் எதையுமே இழப்பதில்லை. எனவே, எதையுமே தேடிக் கண்டுபிடிக்கத் தேவையுமில்லை. ஒவ்வொன்றும் அதற்குரிய இடத்திலேயே இருக்கின்றது. இருளிலாயினும், அதன் மீது உடனேயே கையை வைத்துவிடலாம். அவர்கள் அமைதி உடையோராகவும், ஆழ்ந்து ஆராய்பவராகவும் இருக்க நன்கு தகுதி பெற்றவரேயாவர். எனவே, எரிச்சல், மோசமான உள்ளநிலை, தம் சொந்த ஒழுங்கமைவு இன்மைக்காகப் பிறரைத் தூற்றுதல் ஆகியவற்றைக் காட்டிலும் மிகுந்த நலனுடைய எதிலேனும் தம் மனத்தின் ஆற்றல்களைப் பயன்படுத்தலாம்.

ஒரு துறவியின் புனிதமான போக்குகளைப் போன்று வாணிப உலகத்தின் துறைகள் அனைத்திலும் முறைப் பாட்டின் தேவைகள் அத்துணை கண்டிப்பானதும், துல்லியமானதுமாகும். ஒருவனின் செல்வச் செழிப்பு

களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் மிகச் சிறிய தனிப்பட்ட காரியத்திலும் அவற்றை மீற இயலாது. செல்வ மெனும் உலகில் ஒழுங்கமைப்பு விதி ஓர் இரும்புக்கைத் தேவையாகும். அதைத் தவறாது கடைப்பிடிப்பவன் நேரம், மனநலம், பணம் இவற்றைச் சேமிப்பவன் ஆகின்றான்.

மனித சமூகத்தில் நிலைபேறு கொண்டுள்ள ஒவ்வொரு சாதனையும் முறைப்பாடென்னும் அடிப் படையிலேயே அமைவு பெற்றிருக்கின்றது. எனவே, முறைப்பாடு பின்னிழுக்கப்படின் முன்னேற்றம் முடிவுற்று விடும் என்பது உண்மையே. சான்றாக இலக்கியத்தின் பெருஞ்சாதனைகளை எண்ணிப் பார்க்கலாம்; புகழ் சான்ற ஆசிரியர்கள், மேதகு மேதைகளின் நூல்கள், மாபெரும் கவிதைகள், எண்ணிலடங்கா உரைநடை நூல்கள், பெரும்புகழ் கொண்ட வரலாறுகள், உள்ளுயிர் தூண்டும் சொற் பொழிவுகள், மனித இனத்தின் சமூகத் தொடர்புகள், அதன் சமயங்கள், சட்டஞ் சார்ந்த அதன் கட்டளைகள், நூலறிவெனும் பரந்த சேமவளம் இவற்றையெல்லாம் எண்ணிப் பாருங்கள். மொழியின் வியப்பிற்குரிய இந்த வளப்பங்கள், ஆக்கங்கள் அனைத்தையும் எண்ணிப் பாருங்கள். பின்பு, இவை அனைத்தும் தமது தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும், தொடர்ச்சிக்கும் இருபத்தாறு எழுத்துகளின் முறைப்பாடான பாகுபாட்டுத் திட்டங்களையே சார்ந்திருப்பதை ஆழ்ந்து நினைத்துப் பாருங்கள். சில நிலையான விதிகளின் கண்டிப்பான எல்லைக்குள் இருப்பதால் இப் பாகுபாட்டுத் திட்டம் அழிவில்லாத, அளவில்லாத பயன்களை உடைய தாயிருக்கின்றது.

மேலும், கணிதத்தின் வியப்பிற்குரிய செயற்பாடுகள் அனைத்தும் பத்து எண்களின் முறைப்பாடான பாகுபாட்டுத் திட்டத்திலிருந்தே தோன்றியுள்ளன. அதேபோன்று, திட்டஞ் செய்யப்பட்டுள்ள குறிக்கோளைச் சாதித்துவிடுகின்ற வகையில் ஆயிரக் கணக்கான உறுப்புகளும் ஒன்று சேர்ந்து இதமாகவும், ஏறத்தாழ ஓசையின்றியும் இயங்குகின்ற மிகவும் சிக்கலான இயத்திரப் பொறி, பொறியியல் விதிகள் சிலவற்றை முறைப்பாடாகக் கடைப்பிடிப்பதினின்றும் கண்டு பிடிக்கப்பட்டதாகும்.

சிக்கல் மிகுந்த ஒன்றை முறைப்பாடு எவ்வாறு சிக்கலறுக்கின்றது, கடினமானதை அது எவ்வாறு எளிதாக்குகின்றது. எல்லையில்லாத் தரத்தவான நுணுக்கங்களை அது எவ்வாறு ஓர் ஒழுங்கமைதியின் மையவிதியுடன் தொடர்புபடுத்தி, முழுமையான சீர்மையுடனும், குளறுபாடு ஒரு சிறிதும் இல்லாது நிலையிலும் கையாண்டு காரணங் காட்ட வழிவகுக் கின்றது என்பதையும் நாம் இங்குக் காணலாம்.

முறைப்பாடு, முன்னேற்றத்திற்கும், உலகிலுள்ள கோடிக்கணக்கான மக்களில் ஒவ்வொருவரும் தமக்கெனவோர் இடத்தை நாடி மாறுபட்ட குறிக்கோள்களும், விருப்பங்களும் கொண்டு போட்டியிடுகின்ற அதே வேளையில் அவர்களை நிறைவான ஒரே முழுமையில் ஒருசேரப் பிணைப்பதற்கும் அடியாதாரமாக இருக்கின்ற முறைகளில் ஒன்றாகும் என்பது உண்மையே.

முறைப்பாடு எவ்வாறு மேம்பாட்டுடன் உறவு கொண்டுள்ளது என்பதை நாம் காணலாம். ஏனெனின், வாணிபம், சட்டம், சமயம், அறிவில் அரசியல், ஏன் மனித முயற்சியின் ஒவ்வொரு துறையிலும் நிலைபேறு கொண்டதும், மீறக் கூடாததுமான விதிகளை நிறுவுவதில் உடன்டியானதும், தப்பமுடியாததுமான இன்றியமை யாமையை உணருகின்ற ஒருசிலரின் ஒழுங்கமைப்பு ஆற்றலால் முறைப்பாடென்னும் ஒழுங்கில் பயிற்று விக்கப்படாத பல தனித்தனியான ஆள்கள் அவரவர் இடத்திலேயே அமர்த்தப்பட்டு விடுகின்றனர். ஏனெனின், இரு மனிதர்கள் கூடிய நேரத்திலேயே குழப்பத்தைத் தவித்தற் பொருட்டு இருவரும் ஒத்துணருகின்ற ஏதேனும் பொது அடிப்படை தேவைப்படுகின்றது. ஒரே சொல்லில் கூறுவதெனின் அவர்களுடைய செயல்களை ஒழுங்கு படுத்த ஏதேனும் முறைப்பாடு தேவைப்படுகின்றது.

குழப்பத்திற்கு இடங்கொடுக்க இயலாதபடி வாழ்க்கை மிகவும் குறுகியதாகும். தடையையும், தாழ்வையும் நீக்குகின்ற முறைப்பாடென்னும் சாலையின் வழியே அறிவுவளர, முன்னேற்றம் முன் செல்கின்றது; எனவே, தனது அறிவையோ வாணிபத்தையோ முறைப்படுத்துடன், தன் பின் மரபினர் தான் விட்டுச் சென்ற இடத்திலிருந்து திறந்த மனத்துடன் அதைத் தொடங்க உதவும் வகையில் அதைச் சிக்கலறுத்து மேன்மையுடையதாக்கித் தருபவனாகிறான்.

ஒழுங்கு முறைக்கும், கட்டுப்பாட்டிற்குமான ஓர் உள்ளார்ந்த விருப்பும், அத்தகைய ஒழுங்கு முறையினின்றும் தோன்றுகின்ற மன அமைதியும்,

திறப்பாடும் கொண்டு பொருத்தமின்மையைத் தவிர்க்காத நிலையில் எவ்விதமான குறிப்பிடத்தக்க வெற்றியும் இருக்க வியலாது. ஒழுங்கு முறையை வெறுப்போர், கட்டுப்பாடற்றுக் குழப்பமுற்றதாய் இருக்கின்ற மனமுடையோர், தமது சிந்தனை பழக்க வழக்கங்கள், தம் காரியங்களை நிறுவகித்துக் கொள்ளுதல் இவற்றில் கவனமின்றியும், ஒழுங்கின்றியும் இருப்போரான மக்கள் மிகுந்த வெற்றி கொள்ளவோ, ஆக்கம் பெருக்கவோ இயலாது. தமது வாழ்வைத் தொந்தரைகள், துன்பங்கள், இடர்ப்பாடுகள், சிறிய நச்சரிப்புகள், இவற்றால் நிரப்பிக் கொள்கின்றனர். ஏற்புடைப் போக்கில் வாழ்வை ஒழுங்கு படுத்துங்கால் இவை அனைத்தும் அழிந்துபடும்.

முறைப்பாடற்ற மனம் பயிற்சியற்ற மனமே. உடற்பயிற்சிப் போட்டிகளில் பயிற்சி செய்யாத போட்டியாளர் கவனமுடன் பயிற்சி செய்துள்ள எதிராளியுடன் வெற்றியுறப் போட்டியிட முடியாதவாறு போல, பயிற்சியற்ற மனம் வாழ்வெனும் போட்டியில் நன்கு ஒழுங்குபட்ட மனங்களுடன் ஈடுசெலுத்தவியலாது. எதுவாயினும் சரியே என்றெண்ணுகின்ற ஒழுங்குறுத்தப்படாத மனம் நன்கு ஒழுங்குறுத்தப்பட்ட மனங்களின் பின்னொதுங்க விரைந்து வீழ்ச்சியடைகின்றது.

பொருள் சார்ந்ததோ, மனஞ்சார்ந்ததோ ஒழுக்கநெறி சார்ந்ததோவான வெகுமதிகளாயினும், வாழ்வின் வெகுமதிகளைப் பெறும் கடுமையான போட்டியில் மிகச் சிறந்தனவே, அதற்குத் தகுதியுடையன என்பதை ஒழுங்குறுத்தப்பட்ட மனங் கொண்டோரே நன்கறிவர்.

ஒரு மனிதன் தன்னுடைய வேலையைச் செய்யவருங்காலையில் தன் கருவிகளைக் காண முடியாமலோ தனது கணக்கில் இலக்கங்களைச் சமநிலைப்படுத்த முடியாமலோ தனது மேசையின் திறவுகோலைக் காணமுடியாமலோ தன் சிந்தனைகளுக்கு விடைகாண முடியாமலோ போய்விடின் அவன் தானே உண்டுபண்ணிக் கொண்ட துன்பங்களில் தத்தளிப்பவ னாவான். அதே போது, ஒழுங்குமுறையான போக்குடைய அண்டை வீட்டுக்காரன் தன்னுரிமையுடனும், களிப்புடனும் வெற்றிகரமான சாதனையின் ஊக்கமூட்டும் உச்ச நிலைகளை அளந்து கொண்டிருப்பான்.

கவனமற்றதோ சிக்கலானதோ திறமை வாய்ந்த மனங்களின் மிகவும் அண்மைக் காலத்திய வளர்ச்சிகளுக்குப் பின் தங்கி நிற்பதோவான வழி முறையைக் கொண்டுள்ள வணிகனுடைய நல் வாய்ப்புகள் நலிவுற்றதாக இருப்பின், அவன் தன்னைத் தானே குறை கூறிக்கொள்ள வேண்டியதுதான். அதனோடு, மிகவும் உயரிய தனிப் பயிற்சியுடையதும், பயனிறுதியுடையதான வழிமுறைகளைத் தனது நிறுவனத்தில் கையாள வேண்டிய தேவையையும் அவன் அறிந்துகொள்ள வேண்டும். காலத்தையும் உழைப்பையும் குறைத்து முழுநிறைவு, முதிர் சிந்தனை காரிய வரைவு இவற்றைப் பெருக்க உதவுகின்ற ஒவ்வொன்றையும் ஒவ்வொரு புதுமையையும் கருத்தையும் கைக்கொள்ள வேண்டும்.

உயிரினம், வாணிபம், குணவியல்பு, நாடு, பேரரசு ஆகிய ஒவ்வொன்றும் கட்டமைக்கப்பட்டிருக்கின்ற சட்டம் முறைப்பாடேயாகும். உயிரணுவிற்கு உயிரணு, துறைக்குத்

துறை, கருத்துக்குக் கருத்து, சட்டத்திற்குச் சட்டம், குடியினத்திற்குக் குடியினம் ஓர் ஒழுங்கான வரிசையிலும், தரவாரியாகவும் ஒன்று சேர்க்கப் படுவதாலேயே தொழில் நிலையங்கள், நிறுவனங்கள் அனைத்தும் பெருமளவில் பெருகி வளர்ந்து முழுநிறைவு நிலை எய்துகின்றன. தனது வழிமுறைகளைத் தொடர்ச்சியாகச் சீர்ப்படுத்திக் கொண்டிருக்கின்ற மனிதன் ஆற்றலைப் பெருக்குவதில் பயனடைபவனாகின்றான்; எனவே, வணிகன் தன் வழிமுறைகளைப் பயன்படுத்துவதில் வளப்பமுடைய வனாகவும், புதியது புனைபவனாகவும் இருக்க இந்நிலை அவனைத் தகுதியுடையவனாக்குகின்றது.

ஏனெனில், கோயில்களையோ குணவியல்பு களையோ, வாணிபங்களையோ சமயங்களையோ கட்டமைப்போர் புவியில் தீரர்களாயிருக்கின்றனர். அவர்களே மனித இனத்தின் காவலர்களாயும், முன்னோடிகளாகவும் இருக்கின்றனர். முறைப்பாட்டுடன் கட்டமைப்பவன் ஒரு படைப்பாளியும், பாதுகாவலனும் ஆவான். அதே போது, ஒழுங்கற்ற மனிதன் சிதைத்துச் சின்னாபின்னப் படுத்திவிடுகின்றான். ஒருவன் கட்டுப்பாடு எனும் ஒழுங்குமுறையைக் கைக்கொண்டு, பாதுகாத்து, ஒவ்வொரு நுணுக்கத்தையும் அதற்குரிய இடத்தில் வைத்து, ஒவ்வொரு துறையையும் அதன் குறிப்பிட்ட கடமையில் ஈடுபடுத்தித் தனது குறிப்பிட்ட பணியை ஒட்டிய மிக எளிய விளக்கத்தையும் எக் கணத்திலும் ஆய்வுக்காகவோ தேவையைப் பொறுத்தோ கொண்டுவருதல் இயலுவதாக இருக்கும் நிலையில் அத்துணைத் திறப்பாட்டுடனும் நிவைுடனும் வரிசையும்,

வகையும் படுத்திக் கொள்வானேயாயின், அம் மனிதனுடைய ஆற்றல்களின் வளர்ச்சிக்கோ, குணவியல்பின் நிறைவுக்கோ, அவனுடைய நிறுவனத்தின் செல்வாக்கிற்கோ அவனுடைய வாணிபத்தின் செழிப்பிற்கோ எல்லை கட்டவே இயலாது.

தாம் கூறுவதைக் காட்டிலும் தாம் செயல்படுவதில் நுட்பமுடனிருக்கப் பல மக்கள் முயற்சி மேற் கொள்கின்றனர்; ஆனால், இங்குக் கூடப் பலரைத் திறப்பாடற்றவராகவும், தகுதியற்றவராகவும் ஆக்கி, விடாமுயற்சியும் தாங்குகையும் வேண்டப்படுகின்ற எந்த உழைப்பிற்கும் அவர்களைத் தகுதியற்ற வராக்கி விடுகின்ற நுட்பப் பிழை சாதாரணமேயாகும். தன்னுடையவோ தன் பணி முதல்வருடையவோ நேரத்தின் ஒரு பகுதியைத் தன் தவறுகளைத் திருத்தும் முயற்சியில் வழக்கமாகச் செலவிடுகின்ற மனிதனோ தன் தவறுகளைத் திருத்தும் பொருட்டுப் பிறிதொருவன் பணிக்கமர்த்தப் படவேண்டிய நிலையிலுள்ளவனோ நடைமுறை உலகில் எப் பதவியையும் வகிக்கத் தக்கவனன்று. அவர்கள் ஆக்கம் படைத்தோரின் வரிசைகளின் நடுவே ஓரிடத்தைப் பெறுகின்ற வாய்ப்பு அதனினும் குறைவு.

தனது குறிப்பிட்ட வெற்றியை நோக்கிச் செல்லும் வழியில் சில தவறுகளேனும் செய்யாத மனிதன் என்றுமே வாழ்ந்ததில்லை. ஆனால், தன் தவறுகளைக் கண்டறிந்து அவற்றை விரைந்து நீக்கி, அவை சுட்டிக் காட்டப் படுகிறபோது மகிழ்ச்சியடைபவனே திறமை வாய்ந்தவன். நேர்மனச் சார்புடைய மனிதன். வழக்கமான, நிலையாக நீடிக்கும் நுட்பமின்மையே மறம். தன் தவறுகளைக்

கண்டறியாமலோ ஒப்புக் கொள்ளமலோ இருப்பவனும், அவை சுட்டிக்காட்டப்படுகின்றபோது பொல்லாங்கு கொள்பவனும் திறமை அற்றவனும், தவறான மனச் சார்புடைய மனிதனாவான்.

முன்னேற்ற நோக்குடைய மனிதன் தன் தவறுகளைக் கொண்டும், பிறருடைய தவறுகளைக் கொண்டும் திருந்தி விடுகின்றான். நல்ல அறிவுரையை நடைமுறைப் படுத்திச் சோதனை செய்ய அவன் எப்போதுமே ஆயத்தமாக இருக்கின்றான்; தன் வழிமுறைகளில் என்றென்றும் பெருகுவதான நுட்பத்தைக் குறியாகக் கொள்கின்றான். அது மேன்மைக்கும் மேன்மையான நிறைவு நிலையினையே குறிக்கும். ஏனெனின், நுட்பம் நிறைவு நிலையாகும். ஒரு மனிதனின் தனித் தன்மையுடையவும், நிறைவு நிலையுடைவும் அளவே அவனுடைய நுட்பத்தின் அளவுமாகும்.

பயனோ பயனுடைமையோ ஒருவன் உழைப்பி லுள்ள வழிமுறையின் நேரடி விளைவாகும். முறையாகப் பின்பற்றப் படுகின்றபோது தன் உழைப்புப் பயனுடையதும், ஆதாயமுடையதுமான விளைவுகளுக்கு வந்துறுகின்றது. தோட்டக்காரன் நல்ல விளைச்சலில் வருவாய்த் தேடவேண்டியிருப்பின், சரியான நேரத்தில் விதைக்கவும், நடவும் வேண்டும். எந்த உழைப்பினுடைய விளைவுகள் பயனுடையதாயிருக்க வேண்டுமாயின், அது பருவத்திற் கேற்பச் செய்யப்பட வேண்டும். ஒரு காரியத்தைச் செய்து முடிக்கின்ற வாய்ப்பினைக் கடந்து போக விடுதல் கூடாது.

நடைமுறைப் பயன் கருதா மக்கள், பயனற்றதும்,

ஒத்துக் கூடாததுமான கோட்பாடுகளால் தம் மனங்களில் சுமையேற்றிக் கொள்கின்றனர். தத்தம் இயல்பின் காரணமாகவே நடைமுறையில் செயற்படுத்த முடியாத கோட்பாட்டுகளைக் கைக் கொண்டு தோல்வியை நாடுகின்றனர். வெறும் பேச்சிலும், தருக்கத்திலுமின்றித் தாம் செய்து முடிப்பதிலேயே தம் ஆற்றல்களை வெளிக் கொணரவல்ல மனிதர் புரட்டல்களையும், இக்கட்டு நிலைகளையும் தவிர்த்து, ஏதேனும் நன்மையான, பயனுடைய விளைவை நிறைவேற்றத் தம்மைச் செயல் படுத்துகின்றனர்.

நடைமுறைக்கு வர முடியாத ஒன்று மனத்திற்கு ஊறு செய்ய இடந் தருதல் கூடாது. அது வீசி எறியப்பட வேண்டும். கைவிடப்பட வேண்டும்; புறக்கணிக்கப்பட வேண்டும். தன் கோட்பாடு எவ்வகைப் பயன் விளைவையும் கொண்டதன்று என்பதை மெய்பித்துக் காட்ட வேண்டுமெனின், அஃது ஓர் அழகான கோட்பாடு எனும் பிடியை அவன் நிலையாகக் கொண்டிருக்க வேண்டும் என்று அண்மையில் ஒருவர் கூறினார். வாழ்வில் எவ்விதப் பயனும், மெய்ம்மையில் எவ் வகைத் திண்ணமான அடிப்படையும் இல்லாதனவாய் மெய்ப் பிக்கப்பட்டுவிட்டனவும், பெயரளவில் "அழகானவை" யாக இருக்கின்ற கோட்பாடுகளைப் பற்றிக்கொண்டிருக்க ஒருவன் விரும்புவானாயின் அவன் உலகியல் சார்ந்த தன் முயற்சிகளில் தோல்வியடைந்தால் வியப்படைதற்கில்லை. ஏனெனில், அவன் நடைமுறைப் பயன் கருதா மனிதனாவான்.

மனிதனின் ஆக்கம் அவன் சமூகத்திற்குப்

பயனுடையவனாய் இருப்பதைப் பொறுத்தே அளவிடப் படுகின்றது. செயற்படுவதைப் பொறுத்தே மனிதன் பயனுடையவனாகின்றான்; அவன் விரும்பிக் கடைப்பிடிக்கின்ற கோட்பாடுகளைக் கொண்டன்று.

தச்சன் நாற்காலியைப் படைக்கின்றான். கொத்தன் வீட்டைக் கட்டுகின்றான். கம்மியன் இயந்திரத்தைக் கண்டு பிடிக்கின்றான். அறிவுடையவன் குணவியல்பை உருவாக்குகின்றான். உழைப்பாளிகள், உருவாக்கு பவர்கள், செயற்படுபவர்கள், இவர்களே புவியின் உரம் ஆவர்; சமயவாதிகளோ, கோட்பாட்டாளர்களோ, தருக்க வாதிகளோ அல்லர்.

அறிவாற்றல் கோட்பாடாகிய கானல் நீரினின்றும் மனிதன் திரும்பி எதையேனும் செயலாற்றத் தொடங் கட்டும். அதுவும் தன் வலிமை அனைத்தையும் கொண்டு செயலாற்றட்டும்; அதன் காரணமாக அவன் ஒரு தனிப்பட்ட அறிவைப் பெறுகின்றான். ஒரு தனிப்பட்ட ஆற்றல் கைவரப் பெறுகின்றான். தன் தோழர்களின் நடுவே தனக்கெனத் தனிப்பட்ட நிலையையும், ஆக்கத்தையும் அடைந்து விடுகின்றான்.

தொடர்புள்ள விளக்கங்கள் பலவற்றைப் புழங்கவும், அவற்றை இயக்கி ஒன்றாகப் பிணைக்கின்ற தனித்த நியதியுடன் சேர்த்து முழுமையாகப் புரிந்து கொள்ளவும் உதவுகின்ற மனப்பண்பே கவியாற்றலாகும். இது, உருவாக்கவும், கட்டிக்காகவும் ஆற்றலைத் தருகின்ற ஓர் ஆண்மைப் பண்பாகும். ஒரு பெரிய கவிதையினுடையவோ கதையினுடையவோ ஆசிரியர், தமது கதையுறுப்புகளையும்,

நிகழ்ச்சிகளையும் ஒரு மையமான கதைத் திட்டத்துடன் தொடர்புபடுத்தி, பல கலவையானதும், நிலைபெறுவதுமான ஓர் இலக்கியப்பணியை உருவாக்குகின்றார். பகுத்து ணர்வதும், தொகுத்துணர்வதுமான திறமை ஒரே மனிதனிடத்தில் ஒரு சேரப் பொருந்தியிருப்பதே கவியாற்றலாகும். தன் ஆழமான அடிநிலைகளில் விளக்கங்களின் ஓர் அணிவகுப்பையே அவற்றின் சரியான அமைப்பு முறையிலும் உண்மையான இயக்க வரிசையிலும் தன்னகத்தே கொண்டுள்ள மனமே, சிறப்புத் திறமையை அடைந்துவிட வில்லையெனினும் அதை அடுத்துள்ள மனமாகும். ஒவ்வொரு மனிதனும் சிறப்புத் திறமை யுடையவானக் இருக்க முடியாது. அவ்வாறு இருக்க வேண்டுவதுமில்லை. ஆனால், தன் சிந்தனைகளிலும், வாணிபத்திலும் முறை உண்டு பண்ணுவதில் கவனமுடன் கருத்தூன்றுவதால் தனது மனத் திறமையை அவன் சிறுகச் சிறுகப் பெருக்கிக் கொள்ள முடியும். அவனுடைய நுண்ணறிவு ஆழ்ந்து படரும் போது, அவனுடைய ஆற்றல்கள் மிகுதியாவதுடன், ஆக்கமும் சிறப் படைகின்றது.

வாழ்வில் தான் முயலும் உழைப்பு எத்தகைமைத் தாயிருப்பினும் சரியே, ஆற்றல், சிக்கனம், சால்பு, முறை இவற்றில் தன்னை நிறைவுபடுத்திக் கொள்பவன் தன் வாழ்க்கையின் உழைப்பில் நிலை பேறு கொள்ளும் வெற்றியடைவான். முழு ஆற்றலுள்ளவன், தனது நேரத்தையும் பொருளையும் கவனமுடன் சிக்கனப் படுத்துபவன். தன் வலிமையை, நன்னடத் தையில் பெருக்குபவன். திசை மாறாத சால்பைக் கொண்

டொழுகுபவன், முதலில் தன் மனத்தை முறைப் படுத்துவதன் மூலம் தனது உழைப்பையும் முறைப் படுத்துபவன் தோல்வியடைதல் இயலாத காரியமாகும்.

அத்தகைய மனிதனின் முயற்சிகள் நேர்முறையில் செலுத்தப்படுகின்றன; அதுவும், அவை பயனுடையதாக, நன்மை பயப்பதாக இருக்கும் வகையில் ஒருமுகப் படுத்தப்பட்ட ஆற்றலால் செலுத்தப்படுகின்றன. இதற்கும் மேலாகத், தன் முனைப்பின்றியே மதிப்பையும், வெற்றியையும் கொணரும் ஓர் ஆண்மையும், தனித்தன்மை யுடைய மேன்மையும் அவனை வந்தடைகின்றன. வலிவற்றவர்களின் நடுவே அத்தகையோன் வந்து தோன்றுதலே அவர்களுக்கு வலிமை ஊட்டும். "வாணிபத்தில் விடா முயற்சியுடனிருக்கும் மனிதனைப் பாருங்கள். அவன் அரசர்களுக்கெதிரே நிற்பானேயன்றி இழி மக்களின் முன்னிற்பதில்லை" என அத்தகையோன் ஒருவனைக் குறித்து ஸ்கிரிப்சர் கூறுகின்றார். அவன் இரப்பதோ, சுணுங்குவதோ, முறையிடுவதோ, பழிப்பதோ இல்லை. ஆனால், அத்துணைக் கீழ்நிலைக்குத் தன்னைத் தாழ்த்திக் கொள்ளாத வகையில் அத் துணைவலிமை, தூய்மை, நேர்மை உடையவனா யிருக்கின்றான். ஆகவே, தன் குணவியல்பின் மேன்மையிலும், செம்மையிலும் உயர்நிலையில் நின்று உலகிலும், மக்களின் மதிப்பீட்டிலும் ஓர் உயரிய இடத்தை வகிப்பவனாகின்றான். அவனுக்கு வெற்றி உறுதியானது; அவனுடைய ஆக்கம் நிலைபேறு கொள்ளும். "வாழ்கைப் போர்க்களத்தில் அவன் நிமிர்ந்து நிற்பானேயன்றி, வீழ்ச்சியடைவதில்லை".

# இரக்கம்

மீதியுள்ள தூண்கள் ஆக்கமெனும் கோயிலின் நடுப்பகுதித் தூண்களாகம். அவையே அதற்கு மிகுதியான வலிமையும், உறுதியையும் அளிக்கின்றன. அதனோடு அதன் அழகு, பயன் இரண்டையும் பெருக்குகின்றன. அதனின் கவர்ச்சியை அவையே பெரிதும் அதிகரிக்கின்றன. ஏனெனில், அவை உயர்ந்த ஒழுக்க நெறித் துறையைச் சார்ந்தனவாக இருப்பதால் பேரழகையும், குணவியல்பு மேம்பாட்டையும் சார்ந்தன வாகவும் இருக்கின்றன.

விலைவில் அழிந்து விதையோ கனியோ விட்டுச் செல்லாத வேரற்ற ஓர் அழகான மலரையொத்து, எளிதில் கண்ணீர் சிந்துவதும், மேலெழுந்தவாரியாக உள்ள மெய்ப்பாட்டை இரக்கமெனத் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது. நண்பனொருவனைப் பிரியும் போதோ, வெளியிலுள்ள ஏதேனும் துன்பத்தைச் செவியுறுகின்ற போதோ நரம்புத்தளர்ச்சி கொண்டாற்போல் அழுதல் இரக்கமாகாது. பிறருடைய கொடுமைகளுக்கும், நீதி இன்மைகளுக்கும் எதிராகத் தோன்றுகின்ற முரட்டுச் சீற்றமும் இரக்க மனத்தின் எடுத்துக் காட்டாகிவிடாது. ஒருவன் தன் மனைவியைத் துன்புறுத்தவோ தன் குழந்தைகளை அடிக்கவோ தன் பணியாள்களைப்

பழிக்கவோ வெறுத்து ஏளனமாய்ச் சொல்லம்புகளால் தன் அண்டை அயலாரைப் புண்படுத்தவோ செய்பவன், வீட்டில் கொடுமைக்காரனாக இருப்பவன், அல்லல்படும் மக்களிடம் காட்டும் அன்பு எத்துணை வஞ்சகமானதாக விருக்கும்? அவனை அடுத்துள்ள உலகில் காணக்கிடக்கும் நீதியின்மைக்கும் , கல் நெஞ்சத்திற்கம் எதிராகத் தோன்றுகின்ற சீற்றங்கள் எத்துணை ஆழமற்ற மெய்ப்பாட்டை அறிவுறுத்துகின்றன.

அத்தகையோரை எமர்சன் கீழ்க்கண்டவாறு கூறுகின்றார் : "போ. உன் குழந்தையிடம் அன்பு செலுத்து. உன் விறகு வெட்டியிடம் அன்பு செலுத்து. நல்லியல்பு கொண்டவனாக, அடக்க முள்ளவனாக இரு. அந்த மேம்பாட்டைக் கொண்டிரு. உனது கடினமான, ஈவிரக்கப் பேராசையை ஆயிரம் மைல்களுக்கப்பாலுள்ள கருப்பு நிற மக்கள் மீது காட்டுவதான நம்ப முடியாத பரிவால் என்றுமே மெருகு பூசாதே. தொலைவிலுள்ளோர்க்கு நீ காட்டும் அன்பு வீட்டோர்க்குப் பகையாகம்."

ஒருவனின் உரைகல் அவனுடைய உடனடியான செயல்களிலே இருப்பதன்றி அவனுடைய முனைப்பாடான மெய்ப்பாடுகளில் இருப்பதன்று. அச் செயல்கள் இடைவிடாது தன்னலமும், பகைமையும், கொண்டதாகக் கூறப்படின், அதாவது வீட்டிலுள்ளோர் அவனுடைய காலடியோசையைக் கேட்டதும் அஞ்சிக் கலங்கவும், அவன் நீங்கியதும் மகிழ்ச்சி தரும் விட்டாற்றியாகக் கருதவுமான நிலையிருப்பின், துன்பப்படுவோர்க்கும், தாழ்த்தப்படு வோர்க்கும் அவன் கூறும் இரக்கச் சொற்கள் எத்துணை பொய்மையானது!

இரக்கமெனும் கிணறு கண்ணீரெனும் ஊற்றைப் பெருக்கக் கூடுமெனினும், பெரும்பாலும் அவ் ஊற்று தன் தேவையைத் தன்னலமெனும் இருண்ட மடுவிலிருந்தே பெறுகின்றது. ஏனெனில், தன்னலம் தடைப்படும்போது, அது கண்ணீராகத் தன்னைக் கரைத்துவிடுகின்றது.

சிணுக்கத்திலும், தீய தன்மையுடைய ஏளனத்திலும், வெறுப்பான பழிப்பிலும், வசையிலும், வக்கணையிலும், சினத்திலும், கண்டனத்திலும், அதே போன்று, நடைமுறை ஆதாரம் எதுவுமின்றிக் கொள்கை அளவினதான, பாவனை செய்து கொள்ளப்படுவதான மெய்ப்பாட்டிலுமே இரக்கமின்மை காணக்கிடக்கின்றது.

தன்னலத்திலிருந்தே இரக்கமின்மை தோன்றுகின்றது. அன்பிலிருந்து இரக்கம் தோன்றுகின்றது. தன்னலம் அறியாமையில் அமிழ்ந்திருப்பது; அன்பு அறிவுடன் தொடர்புற்றிருப்பது. தமக்கெனத் தாம், தனிப்பட்ட குறிக்கோள்களும் அக்கறைகளும் கொண்டவராகவும், தம்மைத் தம் தோழர்களிடமிருந்து தனிப்பட்டவராகக் கற்பனை செய்து கொள்வதும், அவரவர் பின்பற்றும் வழிகளில் தாம் நேரான போக்குடையவராகவும், பிறர் தவறான போக்குடையவராகவும் இருப்பதாகக் கருதிக் கொள்வதும் மக்களிடையே காணப்படும் பொது நிலையாகும். தனிப்பட்ட, தன் காரியத்தில் ஈடுபாடுடைய இத்தகைய வாழ்வினின்றும் மனிதனை உயர்வடையச் செய்து அவன் தன் கூட்டாளிகளின் உள்ளங்களில் அவர்களுடன் ஒன்றுபட்டு எண்ணவும், உணரவும் இரக்கம் வகை செய்கின்றது.

அவன் தன்னை அவர்களிடத்திலே வைத்து, அப்போதைக்கு அவர்களாகவே ஆகிவிடுகின்றான். "காயமுற்ற மனிதனிடம் அவன் எவ்வாறிருக்கின்றான் என்று நான் கேட்பதில்லை. நானே காயமைடந்தவனாக மாறிவிடுகிறேன்" என்று மருத்துவமனை வீரன் விட்மேன் இந் நிலையினை விளக்குகின்றார்.

துன்பப்படுகின்ற ஒருயிரை வினவுதலே ஒரு வகையான துடுக்குத் தனமாகும். துன்பப்பாடு எதிர் பார்ப்பது உதவியும் இரக்கச் சிந்தையுமேயன்றிக் காரியமறியும் ஆர்வமன்று. இரக்கச் சிந்தையுடைய ஆண்மகனோ பெண்மணியோ துன்பமுணர்ந்து அதைத் தணிவுறுத்தும் வகையில் தொண்டு புரிகின்றனர்.

இரக்கம் தற்புகழ்ச்சி கொள்ளாது. தற் புகழ்ச்சி எங்கெங்கு உள் நுழைகின்றதோ, அங்கிருந்து இரக்கம் வெளியேறி விடுகின்றது. ஒருவன் அன்பு ததும்பும் தன் செயல்கள் பலவற்றைக் குறிப்பிட்டு விட்டு அதற்கு மாறாகத் தனக்குக் கிடைத்த விருந்தை குறை கூறுவானாயின், அவன் அன்பு ததும்பும் செயல்களைச் செய்தவனாக மாட்டான். இரக்கத்தின் இனிமையாகிய தன்னை மறந்த பணியை அவன் இனித்தான் அடைய வேண்டும்.

இரக்கத்தை அதன், ஆழ்ந்த பொருள் கொண்டு பார்கையில் அது பிறருடைய முயற்சிகளிலும், துன்பங்களிலும் அவர்களுடன் ஒன்றிவிடுவதாகும். அவ் வகையில்தான் இரக்கம் கொண்ட மனிதன் ஒரு கலவைப் படைப்பாகின்றான்; அவன் பல மனிதர்களுள் ஒருவன்.

ஒரு காரியத்தை அவன் பல மாறுபட்ட கோணங்களி லிருந்து நோக்குவானேயன்றி ஒரே ஒரு கோணத்திலிருந்து மட்டும் நோக்குவதில்லை. அதுவும் தன் குறிப்பிட்ட கோணத்திலிந்து மட்டும் நோக்குவதோடு அமைவதில்லை. அவன் பிறரின் கண்களைக் கொண்டு நோக்குகின்றான்; அவர்களின் காதுகளைக் கொண்டு கேட்கின்றான்; அவர்களின் மனங்களைக் கொண்டு எண்ணுகின்றான்; அவர்களுடைய உள்ளங்களைக் கொண்டு உணர்ச்சியடைகினறான். எனவே, தன்னிலிருந்து பெரிதும் மாறுபட்ட மனிதரையும் அவன் புரிந்துகொள்ள முடிகின்றது. அவர்களுடைய வாழ்க்கையின் பொருள் அவனுக்குப் புலனாகின்றது. நல்லெண்ணம் என்னும் உணர்ச்சியில் அவன் அவர்களுடன் ஒன்றுபட்டவனாகி விடுகின்றான்.

"எளியோர் என் கவனத்தை ஈர்க்கின்றனர்; அவர்களுடைய பசி என்னுடைய பசி; நான் அவர்களுடைய இல்லங்களில் அவர்களுடனேயே இருக்கின்றேன். அவர்களுடைய வறுமையில் நானும் பங்கு கொள்கின்றேன். இரப்போருடைய கந்தலுடைகள் என் உடல்மீது இருப்பன போலுணர்கின்றேன்; அந்த நேரத்திற்கேனும் நான் ஏழையாகவும், இகழ்ச்சிக்குரிய மனிதனாகவும் ஆகி விடுகின்றேன்" என்று பால்ஸாக் கூறியுள்ளார். துன்பப்படுகின்ற ஒருவனுக்குச் செய்யப்படுகின்ற உதவி இறைவனுக்கே செய்யப்பட்டதாகும் என்று பால்ஸாக்கை விடப் பெரியவராகிய ஒருவர் கூறியிருப்பதை இது நினைவு படுத்துகின்றது.

இரக்கம் எல்லா மனிதர்களின் உள்ளங்களுக்கும்

நம்மை அழைத்துச் சென்றுவிடுகின்றது. எனவே, நாம் அவர்களுடன் உணர்ச்சிப் பிணைப்புடையவர்களாகி விடுகின்றோம். அவர்கள் துன்புறும்போது அந்த நோவை நாமும் உணருகின்றோம். அவர்கள் களிப்புடனிருக்கும் போது அவர்களுடன் நாமும் மகிழ்ச்சி அடைகின்றோம். அவர்கள் ஏளனத்திற்கும், தொல்லைக்கும் உள்ளாகும் போது நாம் உணர்ச்சியளவில் அவர்களுடன் ஆழ்ந்து படிந்து அவர்களுடைய தாழ்வுணர்ச்சிகளையும், துயரங்களையும் நம் இதயங்களில் ஏற்றுக் கொள் கின்றோம். பிணைத்து, ஒருமைப்படுத்துகின்ற இரக்கமெனம் உணர்ச்சியுடைய எவனும் சீறி விழுவதும், பழிப்பதுமான செயல்களுடையவானாக என்றுமே இருக்க மாட்டான். அவன் தன் கூட்டாளிகளைக் குறித்துச் சிந்தனையற்ற, கொடுமையான கருத்துகளை என்றுமே வெளியிடமாட்டான். ஏனெனின் இவனுடைய உள்ளத்தின் மெல்லிய இயல்பு காரணமானக அவர்களுடைய துன்பத்தின்போது இவன் அவர்களுடனேயே இருப்பவனாகின்றான்.

துன்பங்கள் சூழ்ந்த மனிதனாகத் துயருடன் தொடர்பு கொள்ளாத எம் மனிதனும் உண்மையான இரக்கம் கொண்டிருக்கமுடியாது. ஆனால், அத் துன்பமும், துயரமும் மறைந்து போயிருக்கவேண்டும். அஃதாவது நிலையான அன்பாகவும், வழக்கமான அமைதியாகவும் பக்குவப்பட்டிருக்க வேண்டும்.

ஒவ்வொரு வாழ்க்கைப் போக்கிலும் உண்மையான இரக்கச் சிந்தையுடைய மனிதர் இருந்து வருகின்றனர் எனும் உண்மையைக் கண்டு களிப்படைகையில், கடுமை,

கோபம், கொடுமை இவையனைத்தும் மிகவும் மலிந்து கிடப்பதையும் ஒருவன் காணுகின்றான். கடினமான இக் குணங்கள் அவற்றிற்குரிய துன்பங்களையும் கொணருகின்றன. தம் வாணிபத்திலோ குறிப்பிட்ட பணியிலோ, முழுக்க முழுக்கத் தமது கடினமான மனநிலை காரணமாகவே தோல்வியடைபவர் இருந்து வருகின்றனர். சீற்றமும், சினமும் கொண்ட மனிதனோ, தன் நெஞ்சத்தில் கடுமையும், தண்மையும், தன்னலச் சூழ்ச்சியும் கொண்டு இரக்கத்தின் ஊற்றுக் கண்கள் வற்றிவிட்டவனாக இருப்பவனோ, பிற வகையில் திறமை வாய்ந்த மனிதனாக இருப்பினும்கூட, முடிவில் தன் காரியங்களில் அழிவைத் தவிர்ப்பது அரிதாகும். ஒரு நிகழ்ச்சியில் சினந் தோய்ந்த மடமையும், மற்றொன்றில் தண்ணிய கொடுமையும் அவன் காட்டுகின்ற நிலை, அவனுடைய தோழர்களிடமிருந்தும், அவனது தொழிலோடு நெருங்கிய தொடர்புடையோரிடமிருந்தும் அவனைப் படிப் படியாகத் தனித்து ஒதுக்கிவிடும். எனவே, தன்னந் தனியான தோல்வியுடன், ஒருவேளை நம்பிக்கையற்ற மனமுறிவுடன் அவனை விட்டு விட்டு ஆக்கக் கூறுகள் அவன் வாழ்வினின்றும் விட்டொழிந்து விடும்.

எந்த ஒரு வாணிபத் தொடர்புகளில் கூட இரக்கம் ஒரு சிறப்பான ஆக்கக் கூறாகும். ஏனெனில், கடுமையும், தடைகூறும் இயல்பும் கொண்டோரைவிட அன்பும், மகிழ்ச்சியான இயல்பும் கொண்டவருடனேயே, தொடர்வு கொள்ள மக்கள் விரும்பி அவர்களிடம் ஈடுபாடு கொள்கின்றனர். நேரடியாகத் தாமே தொடர்வு கொள்ளும் துறைகள் அனைத்திலும், நடுத்தரமான திறமையுடன்

இரக்கச் சிந்தையும் கொண்ட மனிதன், மிகுதியான திறமையிருப்பினும் இரக்கம் அற்றவனாயிருக்கின்ற மனிதனை முந்திவிடுவான்.

ஒரு மனிதன் ஓர் அமைச்சராக இருப்பினும், ஒரு சமயவாணனாக இருப்பினும் அவரிடமிருந்து வெளிப் படுகின்ற கொடுமையான சிரிப்பும், அன்பில்லா மொழியும் அவனுடைய புகழையும், செல்வாக்கையும் மிகவும் ஊறுபடுத்திவிடும். குறிப்பாக அவனுடைய செல்வாக் கையே பெரிதும் பாதிக்கும். ஏனெனின், அவனுடைய நல்லியல்புகளைப் பாராட்டுவோர்கூட, அவன் அன்பில்லாதிருத்தலைக் கண்டு, தமது சொந்த மதிப்பீட்டில் தம்மை அறியாமலே அவனைக் குறைத்து மதிப்பிடுகின்றனர்.

இரக்கம் விலங்குகளும் உட்பட அனைவரும் இயல்பாகவே புரிந்து போற்றுகின்ற உலகின் இயல்பான பண்பாகும். மனிதர் முதல் உயிரினங்கள் அனைத்தும் துன்பத்திற்குட்படுவனவே., துன்பகரமான பட்டறிவின் ஒருமைப்பாடு இரக்கம் என்னும் உணர்ச்சியை உண்டுபண்ணுகின்றது.

தன்னலம் பிறருடைய பொறுப்பில் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள மனிதரைத் தூண்டுகின்றது. ஆனால், இரக்கம் தன்னல் ஈகத்தால் பிறரைக் காப்பாற்ற அவர்களைத் தூண்டுகின்றது. இத் தன்னலத் ஈகத்தில் உண்மையான, முடிந்த முடியவான இழப்பு எதுவுமே இல்லை. ஏனெனின், தன்னல மகிழ்ச்சிகள் சிறியதும், ஒரு சிலவாகவுமிருக்க, இரக்கத்தின் நன்மைகள், பெரியவும்

பல்வகைப் படுவனவாகவும் இருக்கின்றன.

இரக்கம் என்னும் இப் பெரிய அறத்தை நால்வகைக் குணங்கள் உருவாக்குகின்றன. அவை;

1. அன்பு 3. படிமானம்

2. பெருந்தன்மை 4. நுண்புலம்

**அன்பு** முழு வளர்ச்சியடைகின்ற போது, அது தோன்றி மறையும் உணர்ச்சி வேகமன்று, நிலைபெற்ற குணமேயாகும். பெரும்பாலும் அன்பெனும் பெயரில் அழைக்கப்டுவதாயினும், இடையிடையே தோன்றி மறைவதும், நம்பக்கூடாததுமான உணர்ச்சி அன்பாகாது. புகழுரையைப் பழிப்புரை பின் தொடர்வதாயின் புகழுரையிலே அன்பே இல்லை. இயல்பாயெழுகின்ற கொஞ்சுதலைத் தூண்டுவதாகத் தோன்றுகின்ற அன்பு இயல்பாயெழுகின்ற வெறுப்புடனும் தொடர்பு கொண்டிருபபின் அந்த அன்பு சிறிதளவே கருத்திற் கொள்ளற்பாலதாகும்.

நன்கொடை தருபவன் பின்பு அதன் மதிப்பீடு தனக்குத் திரும்பக் கிடைக்க வேண்டுமென்று விரும்பு வானேயானால், மேம்பட்டதாகத் தோன்றிய பல நன்கொடையும் தன் மதிப்பை இழந்துவிடும். ஒருவன் தனக்கு மகிழ்ச்சியுண்டாக்கும் ஏதேனும் வெளிப்புறத் தூண்டுதல் காரணமாய் மற்ற ஒருவனுக்கு அன்பு செய்தற்பொருட்டுத் தன் உணர்ச்சிகளை எழுச்சியுறச் செய்து சிறிது நேரத்திற்குப் பிறகு அவனுக்கு வெறுப்புண்டு பண்ணுகின்ற ஏதேனுமொரு வெளிப்புற

நிகழ்ச்சி காரணமாக அதே மனிதரிடம் அன்பின் மறு கோடிக்குச் சாய்ந்து விடுவதைக் குணவியல்பின் குறைபாடாகவே கொள்ள வேண்டும். அது ஒரு தன்னலச் சூழ்நிலையேயாகும். ஏனெனின், நமக்கு மகிழ்ச்சியூட்டும் ஒருவனுக்கு மட்டும், அதுவும் அவன் மகிழ்ச்சியூட்டுகின்ற போது மட்டும் அன்புச் செயல் செய்வதென்பது அவன் தன்னலத்தை மட்டும் கருதுவதையே காட்டும்.

உண்மையான அன்பு மாற்றப்பட முடியாதது. அதைச் செயற்படுத்த வெளித் தூண்டுதல் தேவையில்லை. அது வேட்கை கொண்ட உயிர்கள் எப்போதும் அள்ளிப் பருகத் தக்க கேணியாகும். அது என்றுமே வற்றுவதில்லை. அன்பு ஒரு வலிமை வாய்ந்த அறமாகும் போது, நமக்கு மகிழ்ச்சியூட்டுவோர்க்கு மட்டும் வழங்கப்படுவதன்று. ஆனால், நமது விருப்பத்திற்கும், கருத்திற்கும் எதிராகச் செயல்படுவோர்க்கும் வழங்கப்படுவதாகும். அஃது இடைவிடாததும், என்றுமே மாறாததுமான மகிழ்ச்சி ஆர்வத்தின் ஒளியாகும்.

மக்கள் எண்ணி இரக்கப்படுகின்ற சில செயல்கள் உள்ளன; அத்தகையவை அன்பில்லாச் செயல்கள். மக்கள் எண்ணி இரக்கப்படாத பிறசெயல்கள் உள்ளன; அத் தகையவை அன்புச் செயல்கள். மக்கள் தாம் மொழிந்த, செய்த கொடுமையான செயல்களுக்காக வருத்தப் படுகின்ற நாள் வந்து சேருகின்றது; ஆனால் அவர் மொழிந்த, ஆற்றிய அன்பான செயல்களுக்கான மகிழ்ச்சியான நாள் எப்போதும் அவர்களுடனேயே இருக்கின்றது.

அன்பின்மை, மனிதனின் பண்பைக் கெடுத்து விடுகின்றது. காலப்போக்கில் அவனுடைய முகத்தைக் கெடுத்துவிடுகின்றது. அன்பினால் அவன் அடைந் திருக்கக் கூடிய வெற்றியின் நிறைவைக் கெடுத்து விடுகின்றது.

அன்புடைமை பண்பியல்பை அழகு படுத்துகின்றது. ஆண்டுகளின் வளர்ச்சிக்கேற்ப அவனுடைய முகத்தை அழகு படுத்துகின்றது. மனிதனின் நுண்புலத் திறமைகள் அவனுக்கென உரிமைப்படுத்துகின்ற வெற்றியின் நிறைவுடைமை பெற வழி கோலுகின்றது. மனிதன் அன்பு தோய்ந்ததின் பயனாக அவனுடைய ஆக்கம் கனிந்து செழிக்கின்றது.

**பெருந்தன்மை** பரந்த நெஞ்சங்கொண்ட அன்புடைமையோடு பொருந்தியிருக்கின்றது. அன்பு டைமை, பணிவு மிக்க தங்கையானால் பெருந்தன்மை வலிமை மிக்க தமையனாவான். தன் போக்கான, திறந்த நோக்குடைய, தகைமை வாய்ந்த குணவியல்பு எப்போதும் கவர்ச்சியுடையதாகும், செல்வாக்குடையதாகும். கஞ்சத்தனமும், இழிந்த நோக்கும் எப்போதும் எதிரிடையானவை. அவை இருள்படர்ந்தவை; குறுகியவை; கருத்தற்றவை. அன்புடைமையும், பெருந்தன்மையும் எப்போதும் கவர்ச்சியுடையவை. அவை ஒளி படர்ந்தவை; வளர்ச்சி உறுபவை; வெளிப்படையானவை; கருத்து டையவை. தடைபடுத்தும் ஒன்று தனிமைக்கும், தோல்விக்கும் வழிகாட்டுகின்றது. கவர்ச்சியுடைய ஒன்று ஒற்றுமைக்கும் வெற்றிக்கும் வழிகாட்டுகின்றது.

பெறுவதைப் போன்றே வழங்குவதும் அத்துணை சிறப்பான ஒரு கடமையாகும். தன்னால் இயன்ற அளவு பெறக் கூடியவை அனைத்தையும் பெற்றுவிட்டு, வழங்க மறுப்பவன்இறுதியில் பெறமுடியாத நிலையடைந்து விடுவான். ஏனெனின், நாம் பெறக்கூட வில்லையெனின் நாம் வழங்க முடியாதவாறு போல, நாம் வழங்கவில்லை யென்றால் நாம் பெற முடியாது என்பதும் ஓர் ஆன்மீக விதி.

வழங்குவது என்பது மேன்மையானது. இன்றியமையானது. ஒரு கடமை என்றே சமய ஆசிரியர்கள் அனைவராலும் எப்போதும் கற்பிக்கப் பட்டிருக்கின்றது. இதற்குக் காரணம் என்ன? தன்னைப் பொறுத்த வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்குமான தலையாய வழிகளில் ஒன்று வழங்குதலாகும். மேலும், மேலும் மேம்பாடும் தன்னலத் துறவை நாம் அடைதற்கும், தன்னலத்திற்குத் திரும்பவும் வீழ்ச்சியடைந்து விடுவதைத் தடுத்தற்குமான கருவி அதுவே. உடன் வாழும் மக்களுடன் நமக்குள்ள வாழ்வு சார்ந்ததும், சமூகஞ் சார்ந்ததுமான உறவை நாம் உணர்ந்து, பிறருடைய நன்மைக்காகவும், நன்னிலைக்காகவும் நமது தேட்டத்திலிருந்தோ உடைமையிலிருந்தோ ஒரு பகுதியை இழக்கச் சித்தமாயிருக்கின்றோம் என்பதை அது குறிப்பாலுணர்த்துகின்றது. எத்துணை மிகுதியாகப் பெறினும், பின்னும் மிகுதியாக வேண்டுமெனப் பசி கொள்பவனும், கொடுமையான விலங்கொன்று தன் இரையைப் பற்றிக் கொண்டிருத்தல் போன்று, திரண்டு வரும் சேமிப்பின் மீதுள்ள தனது பிடியைத் தளர்த்த

மறப்பவனுமான பேராசை கொண்ட மனிதன் கீழ் மண்டிப் போகின்றவனே ஆவான்.

பேராசை, இழிபோக்கு, பொறாமை, ஐயப்பாடு இவற்றிற்கெதிராக மனிதன் எச்சரிப்புடனிருக்கட்டும். ஏனெனில், இவை வளர இடந் தந்தால், அவனுடைய வாழ்வில் சிறப்புடையனவாக இருப்பவை அனைத்தையும் இவை பறித்துவிடும். பருப்பொருளியலான காரியங்களில் சிறப்படையனவாக இருப்பன அனைத்தையும் அழிக்கும். அதேபோன்று குணவியல்பினும், மகிழ்ச்சியிலும் சிறப்புடையனவாக இருப்பவை அனைத்தையும் கூட இவை பறித்துவிடும்.

அவன் தாராளமான நெஞ்சமும், வாரி வழங்கும் கையும், பெருந்தன்மையும், பிறரை நம்பும் பான்மையும் உடையவனாக, மகிழ்ச்சியுடன் வழங்குவது, அதுவும் பெரும்பாலும் தனது உடைமையிலிருந்தே வழங்குவது மட்டுமன்றி, தனது நண்பர்களுக்கும் தோழர்களுக்கும் கருத்திலும், செயலிலும் தன்னுரிமை வழங்குபவனாகவும் இருக்கட்டும்; அவ்வாறிருப்பின், நண்பரும் விருந்தினரும்போல, புகழும், செழிப்பும், ஆக்கம் 'நுழையட்டுமா' என அவன் கதவைத் தட்டி நிற்கும்.

**பண்புடைமை** தெய்வத் தன்மையுடன் உறவு கொண்டதாகும். கரடுமுரடான, கொடுமை மிகுந்த, தன்னல நோக்குடைய இருப்பவை அனைத்தினின்றும் பண்புடைமையைப் போன்ற வேறு எக் குணமும் அதிகத் தொலைவில் இருக்காது. எனவே, ஒருவன் பண்புடைமையுடையவனாகும்போது அவன் தெய்வீகத்

தன்மையைனாகின்றான். மிகுதியான அனுபவத்தின் மீதும், உயர்ந்த ஒழுக்கத்தின் மூலமுமே அதைப் பெற முடியும். தன்னுடைய விலங்கின இச்சைகளைக் கட்டுப்படுத்தி அவற்றை அடக்கியாளுகின்றபோதுதான் அஃது ஒருவனிதயத்தில் நிலைபேறு கொள்கின்றது. மெல்லோசையுடைய தெளிவான குரல், தனிக்குறிப்புடையதாக, உறுதியுடையதாகயிருப்பினும் அமைதியாக விளக்கிக் கூறும் பாங்கு, குறிப்பாக இக் கட்டான சூழ்நிலைகளில் பரபரப்பு, உணர்ச்சிமேலீடு, சினம் இவற்றிலிருந்து விடுபட்டிருத்தல் ஆகியவையே அதன் வெளிப்புற அடையாளங்களாகும்.

பண்புடைமைய அறிவுடைமையோடு இணைக்கப் பெற்றிருப்பதாகும். அறிவுடைய மனிதன் தன்னிடமுள்ள சினம் அனைத்தையும் வென்றுவிட்டவனாவான். எனவே, பிறரிடம் அதை எவ்வாறு வெற்றிகாண வேண்டும் என்பதை அவன் புரிந்து கொள்கின்றான். கட்டுப்பாடற்ற மனிதர் தம்மைத்தாம் உட்படுத்திக் கொள்கின்ற தடுமாற்றம், தொந்தரைகள் பலவற்றிலிருந்து பண்டைய மனிதன் காப்பாற்றப்பட்டவனாகின்றான். அவர்கள் பயனற்றதும், தேவையற்றதுமான கடுமை தம்மைத் தாம் களைப்புறச் செய்துகொள்ளும் வேளையில், இவன் அமைதியுடனும், தன்னிறைவுடனுமிருக்கின்றான்; வாழ்வுப் போரில் அத்தகைய அமைதியும், தன்னிறையும் வலுவுற்றனவாகும்.

**நுண்புலம்** இரக்கத்தின் இயல்திறனாகும். இரக்கமான மனமே ஆழ்ந்து உணர்ந்தறிகின்ற மனம். நாம் நுகர்வறிவால் புரிந்துகொள்கிறோமே அன்றி,

வாதாடலால் அன்று. நாம் ஒரு பொருளையோ ஒருவனையோ அறிந்துகொள்ளு முன்பு, நமது வாழ்வு அதனுடையவோ அவனுடையவோ வாழ்வுடன் தொடர்புற்றாக வேண்டும். வாதாடல் வெளிப்புறத் தோலையே பகுத்தாராய்கின்றது. ஆனால், இரக்கம் நெஞ்சத்தையே எட்டி விடுகின்றது; பிறரிடம் குறை காண்பவன் உருவையும், உடையையும் பார்த்துவிட்டு, மனிதனைக் கண்டுவிட்டதாக எண்ணுகின்றான். இரக்கச் சித்தமுடையோன் மனிதனைக் காணுகின்றான்; உருவையும், உடையையும் கருத்தில் கொள்வதில்லை.

வெறுப்பின் ஊடே ஒவ்வொருவனும் மற்றொருவனைத் தவறாக மதிப்பிடுகின்ற ஒரு பிரிவினை உள்ளது. அன்பின் அனைத்திலும் ஒவ்வொருவனும் மற்றொருவனைப் புரிந்துகொள்கின்ற ஓர் ஒற்றுமையுள்ளது. இரக்கம் அன்பின் தூய்மையான வடிவமாக இருப்பதால், அது மக்களுடைய, பெருள்களுடைய நெஞ்சத்தையே காணுகின்றது. பரந்த நெஞ்சம் இருப்பதன் காரணமாகவே ஷேக்ஸ்பியர் மிகவுயர்ந்த கவிஞராகத் திகழ்கின்றார். மனித நெஞ்சத்தைக் குறித்தும், உயிருள்ளன உயிரில்லாதன இவற்றின் இயல்பைக் குறித்தும் அத்துணை ஆழ்ந்த அறிவினை, இலக்கியம் அனைத்திலும் வேறு எவருமே, எடுத்துக் காட்டவில்லை. தன்னியல்பான ஷேக்ஸ்பியர் அவருடைய நூல்களில் காணக் கிடைப்பதில்லை; ஏனெனின், இரக்கத்தின் காரணமாக அவர் தம் நாடகமாந்தாகளுக்குள் இரண்டறக் கலந்துவிடுகின்றார். அவர் தற்காலிகமாக மேதை, தத்துவஞானி, கிறுக்கன், மடையன், குடிவெறியன்,

பரத்தை இவர்களாக ஆகியே விட்டார். அவர்கள் எந் நிலையிலிருந்தனரோ அதோ நிலையில் இவரு மிருந்தார். இவர் அவர்களுடைய தனிப்பட்ட பட்டறிவுகளுக்குள் புகுந்து, `அவர்கள் தம்மைத்தாம் அறிந்து கொண்டிருந்ததைவிடச் சிறப்பாக இவர் அவர்களை அறிந்து கொண்டார். ஷேக்ஸ்பியருக்கு ஒருதலைச் சார்போ, ஒறுப்போ கிடையாது; மிகத் தாழ்ந்தவர் முதல் மிக உயர்ந்தவர் வரையில் இவருடைய இரக்கம் அனைவரையும் அரவணைக்கின்றது.

இரக்கத்திற்கும், அறிவிற்கும் பெருந்தடையாக இருப்பது தப்பெண்ணமே. தப்பெண்ணம் கொண் டிருப்பவரை ஒருவன் தானே புரிந்து கொள்ளுதல் இயலாது. அரைகுறையான தீர்ப்புகளை நம் உள்ளங்களினின்றும் அப்புறப்படுத்துகின்றதேபாது தான் மக்களையும், பொருள்களையும் உள்ளவாறே நாம் காண முடியும். நாம் இரக்கமுடையவர்களாக ஆகும் போதோ உண்மை. பார்வையுடையவர்களாகவும் ஆகின்றோம். இரக்கம் அறிவைத் தனது தோழனாக கொண்டிருக்கின்றது.

உணருகின்ற நெஞ்சமும், காணுகின்ற கண்ணும் இணைபிரியாதனவாகும். இரக்கமுள்ள மனிதன் வருவதுரைக்கும் திறமுள்ள அறிவனாவான். நெஞ்சங்கள் அனைத்துடனும் இயைந்து துடிக்கின்ற உள்ள முடையோனுக்கு அவ் உள்ளங்களின் எண்ணங்கள் அனைத்தும் புலனாகின்றன. மேலும், இரக்கமுள்ள மனிதனுக்கு இறந்தகாலமும், எதிர்காலமும் கண்டறிய முடியாத மறை புதிராக ஒருபோதும் இருப்பதில்லை.

அவனுடைய ஒழுக்கநெறி சார்ந்த நுண்புலம் மனித வாழ்வின் நிறை வட்டத்தை உய்த்தறிந்து விடுகின்றது.

இரக்கந் தோய்ந்த நுண்புலம் மனிதனை விடுதலை, களிப்பு ஆற்றல் ஆகியவற்றின் உணர்வு நிலைக்கு உயர்த்தி வடுகின்றது. அவனுடைய மூக்குப் பைகள் காற்றை உட்கொள்வது போன்று அவனுடைய ஆன்மா களிப்பை உட்கொள்ளும். கூட்டாளிகளாலோ, பகைவர்களாலோ அவனுக்கு அச்சங்கள் எப்போதும் உண்டாவதில்லை. தவழ்ந்து வரும் இந்த மாயைகள் மறைந்துவிடுகின்றன. அவனுடைய எழுச்சி ஊட்டப்பெற்ற திருப்பார்வைக்கு எதிரில் பேராற்றலும், மேம்பாடும் கொண்ட ஆட்சி வந்தமைந்து விடுகின்றது.

# இயல்பார்வம்

மனித சமூகம் அதன் இயல்பார்வத்தாலேயே ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருக்கின்றது. ஓர் உலக உண்மைப் பிசகு ஓர் உலக நம்பிக்கையின்மையைப் பிறப்பித்துவிடும். அது அழிவை உண்டு பண்ணா விட்டாலும் ஓர் உலகப் பிளவைக் கொணர்ந்துவிடும்.

நாம் ஒருவர் மீதொருவர் கொண்டிருக்கின்ற ஆழ்ந்து வேரூன்றிய நம்பிக்கையாலேயே வாழ்வு தெளிந்த அறிவுநிலை உடையதாய், நற்பயன் விளைப்பதாய், மகிழ்ச்சியுடையதாக ஆக்கப்படுகின்றது. நாம் மனிதரை நம்பவில்லையெனின் அவர்களுடன் நாம் எவ்வகைத் தொடர்பும் வைத்துக்கொள்ள வியலாது. அவர்களுடன் சேர்ந்து பழகக்கூட இயலாது. தனது மடமையின் காரணமாக மனிதஇன இயல்பார்வத்தின் மீதிருந்த நம்பிக்கை அனைத்தையும் இழந்து விட்ட மனிதனின் இழிநிலையையே ஷேக்ஸ்பியரின் "தைமான்" நாடகம் நமக்கு சித்தரித்துக் காட்டுகின்றது. அவன் மனிதர் அனைவருடைய சேர்க்கையினின்றும் தன்னைத் துண்டித்துக் கொள்கின்றான்; இறுதியில் தற்கொலை செய்து கொள்கின்றான்.

எந்தத் துறையினின்று நம்பிக்கை விடுவிக்கப்

படுமானால் சமுதாயம் வீழச்சியுற்றுச் சிதறிப் போகும் என எமர்சன் குறிப்பிடுகிறார். ஏனெனில் மக்கள் ஒருவரையொருவர் நம்பி வாழவேண்டும் என்பதற்கு இந்த நம்பிக்கை முறையே ஓர் அறிவிப்பாகத் திகழ்கிறது. அனைத்து மோசடியும், வஞ்சனையுமாகும் என்று குறுகிய நோக்குடையோராலும், அறிவிலிகளாலும் பொதுவாகக் கருதப்படுகின்ற வாணிபமும், பிறவும் ஒருபெரும் நம்பிக்கையின் அடிப்படையிலிருந்தே தோன்றுகின்றது. மனிதர் தம் கடமைகளைப் பொறுப் பேற்று நிறைவேற்றி விடுவர் என்னும் நம்பிக்கையே யாகும். பொருள்களைத் தந்து ஒப்படைப்பது வரையில் கட்டணம் கேட்கப் படுவதில்லை. பன்னெடுங் காலங்களாக இந்த முறை நடைமுறையிலிருக்கும் உண்மை. பெரும்பான்மையான மனிதர் தம்முடைய கடன்களைத் திருப்பித்தரவே செய்கின்றனர் என்பதுடன், அவ்வாறு கட்டணம் செலுத்துவதைத் தவிர்க்கும் விருப்பமுமில்லை என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

மனித சமூகம் அதன் குறைபாடுகள் அனைத்திற்கும் அடியில் உண்மையென்னும் வலுவுள்ள அடி நிலையிலேயே நிலைபெற்றிருக்கின்றது. அதன் அடிநிலை இசைவு இயல்பார்வமேயாகும். மிகயுர்ந்த இயர்பார்வம் கொண்ட மக்கள் அனைவரும் அதன் பெருந் தலைகளாவர்; அவர்களின் பெயர்களும், அவர்கள் பெற்ற பேறுகளும் அழிந்துவிட அனுமதிக்கப்படுவதில்லை; இயல்பார்வம் என்னும் அறம் மக்களினம் அனைத்தாலும் பாராட்டப் படுவதற்கு இதுவே சான்று.

ஒவ்வொருவரும் தம்மைப் போன்றவனே என்று கற்பனை செய்துகொள்வதும், "சமூகத்தின் பண்பாட்டை" குறித்து உரையாடுவதும் இயல்பார்வம் இல்லோர்க்கு எளிதே. அழுகிய பொருளொன்று தலைமுறை தலைமுறையாக இருந்து வரக் கூடுமென்ற நிலையில் இருக்கின்றது இது. ஏனெனின், காமாலைக் கண்ணுக்கு காணும் ஒவ்வொன்றும் மஞ்சளாகவே தோன்றுமன்றோ? மனித சமூகக் கட்டமைப்பில் கண நேர நன்மை எதையுமே காணமுடியாத மக்கள் தம்மைத் தாமே பழுதுபார்த்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு இடையூறு இல்லத்தை அடுத்தே இருக்கின்றது. அவர்கள் தீமையை நன்மையென அழைப்பர். நன்மையைக் காணுதல் இயலாது போகும் வரையில் அவர்கள் குற்றங்காணும் குணத்துடனும், சிடுசிடுப்புடனும் தீமையின் கண்ணேயே வதிந்து வந்துள்ளனர். ஒவ்வொன்றும் தீயதர்கவே தோன்றுகின்றது. மக்களும் தீயராகவே தோன்றுகின்றனர்.

முழுக்க முழுக்கத் தன்னலக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகச் சமூகப் பணியில் பங்குகொள்ளும் மனிதன், நீடித்துச் செழிப்புற இயலாமலும், செல்வாக்குடையவன் என்ற முறையில் எந்த இடத்தையும் நிரப்ப இயலாமலும் போய்விடுகிறான். விரைவில் அவனுடைய திரை விலக்கப்பட்டு அவன் அவமதிக்கப் படுகின்றான். குறிப்பிட்ட காலத்திற்கேனும் அத்தகைய மனிதன் மனித ஏமாளித்தனத்தால் தின்று கொழுக்க இயலும் எனும் உண்மை மனிதரின் அறிவின்மையை எடுத்துக் காட்டினும் மனிதரின் நம்பிக்கைப் பான்மையையும் எடுத்துக் காட்டுகின்றது.

கலைத்திறம் வாய்ந்த நடிகன் மேடையில் பாராட்டப் படுகின்றான். ஆனால், வாழ்வெனும் மேடையில் போலி நடிகன் தன்னை இகழ்ச்சிக்கும், ஏளனத்திற்கும் உரியவனாகத் தாழ்த்திக் கொள்கின்றான். தான் இயல்பாக இல்லாத நிலையினில் தோற்றமளிக்க முயற்சி செய்வதில், அவன் தனித்தன்மையில்லாத, குணவியல்பு இல்லாத ஒருவனாகி விடுகின்றான். அவன் செல்வாக்கு அனைத்தும், ஆற்றல் அனைத்தும், வெற்றி அனைத்தும் இழந்தவனாகி விடுகின்றான்.

கணப் பொழுதிற்கு வண்ணப் பூச்சான வாழ்வால் தற்பெருமை கொள்பவர்களோ திறமையாக வீசப்படுகின்ற மோசடியில் மனநிறைவு காணுபவர்களோ செல்வாக்கின் ஏமாற்றத்திலிருந்து தப்ப முடியாது; அவை நெஞ்சத்தை உருக்கி, நிலைபேறுடைய, இறுதியான பயன்களுக்காகத் தீர்ப்பை உருவாக்குகின்றன. அதே வேளையில், திட்டமிடப்பட்ட இந்த ஏமாற்றங்கள் மனத்தின் மேற்பரப்பில் கணநேரச் சிற்றலைகளையே உண்டு பண்ணுகின்றன.

“மெய்யொலி எழுதல்” என்பது பொருள் பொதிந்த சொல்லாகும். நாணயத்தைச் சுண்டிப் பார்க்கும்போது அது தரக் குறைவான உலோகப் பொருளின் கலப்பின்றி முழுவதும் தூய்மையான உலோகப் பொருளால் ஆக்கப்பட்டதென்பதைப் புலப்படுத்தும் ஒலியை, எழுப்புவதையே இது குறிப்பிடுகின்றது. அது உயர்நிலைக்கு வந்துவிடுவதால், எங்கும், எல்லாவிடத்தும் செல்லுபடியாகும்.

மனிதர் நிலையும் அதுவே. அவர்களுடைய

சொற்களும், செயல்களும் அவர்களுக்கே சொந்தமான தனிப்பட்ட செல்வாக்கையே வெளிப்படுத்துகின்றன. பிற மனிதரனைவரும் உள்ளூரச் செவிமடுத்து இயல்புணர் வாகவே கண்டுகொள்கின்ற செவிப் புலனாகாத ஓர் ஒலி அவர்களிடமிருக்கின்றது. மெய்யான ஒலியினின்றும் பொய்யான ஒலியை அவர் பிரித்தறிந்து விடுவர்; எனினும், தாம் அறிந்து கொண்டது எவ்வாறென அவர் அறியமாட்டார். ஒலிகளிலுள்ள மிகமிக நுண்ணிய வேறுபாடுகளைப் புறச்செவி உணர்ந்தறிதல் போன்று, உயிர்களிடையுள்ள நொய்தான வேறுபாடுகளை அகச்செவி உணர்ந்தறியவியலும். ஏமாற்றுபவனைத் தவிர இறுதியில் ஏமாற்றப்படுபவர்கள் யாருமே இலர்.

இயல்பார்வமற்றவர்கள் தமது வெற்றிகரமான பாசாங்குகளைக் குறித்துத் தம்மைத் தாம் தற்புகழ்ச்சி செய்து கொள்வதால் அவர்கள் ஏமாற்றிக் கொள்வது தம்மையே அன்றிப் பிறரையன்று. இது அவர்களுடைய கண்மூடித்தனமான மடமையாகும். அவர்களுடைய செயல்கள் ஒளிப்பு, மறைப்பின்றி அப்படியே எல்லா நெஞ்சங்களின் முன்பும் வைக்கப்படுகின்றன. மனிதனின் நெஞ்சத்துள் ஒரு தீர்ப்புரிமை மன்றமிருக்கின்றது; அதனுடைய தீர்ப்புக்கள் தவறுடையனவாய் ஆவதில்லை. புலன்கள் தவறின்றிக் கண்டுகொள்ளக் கூடுமெனின், ஆன்மா தவறின்றிப் புரிந்து கொள்ளாதோ? இந்த அகத் தவறின்மை மனித இனக் கூட்டுத் தீர்ப்புரையிலே காணக்கிடக்கின்றது. இத் தீர்ப்புரை நிறைவானது. இலக்கியம், கலை, அறிவியல், புனைவு, சமயம் ஆகிய அறிவின் ஒவ்வொரு துறையிலும், தீமையினின்றும்

நன்மையை, தகுதியில்லாதன வற்றினின்றும் தகுதியுள்ளனவற்றை, பொய்ம்மையினின்றும் மெய்ம்மையைப் பகுத்துப் பின்னதை முனைப்பார்வமுடன் காத்துக் காப்பாற்றவும், முன்னதை அழிந்துபட விட்டுவிடவும் செய்கின்ற அளவிற்கு அத்துணை நிறைவானதாகும்.

மேம்பட்ட மனிதரின் பணிகள், சொற்கள், செயல்கள் இவை மனித இன மரபுரிமைகளாகும். மனித இனம் இவற்றின் பயனைக் குறித்துக் கவனமற்றிருப்பதில்லை. ஒரு நூலை ஆயிரம் மனிதர் எழுதுகின்றனர்; ஒன்றே ஒன்றுதான் தோற்றுவாய்த் திறனுடைய படைப்பாக விருக்கின்றது. எனினும், அந்த ஒன்றை மனித இனம் தனியாகப் பொறுக்கி எடுத்துப் போற்றிப் பேணிக் காக்கின்றது. அதே வேளையில் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது சார்பெழுத்தாளர்களை வெறுமை யாக்கி விடுகின்றது. ஒரே வகையான சூழ்நிலையில் பத்தாயிரம் மக்கள் ஒரு தொடரைக் கூறுகின்றனர்; அவற்றில் ஒன்றே ஒன்றுதான் அறிவொளியுடையதாக இருக்கின்றது; எனினும், பின் மரபினருக்கு வழி காட்டுவதற்காக மனித இனம் அந்த ஒன்றைமட்டும் தனியாகப் பொறுக்கி எடுக்கின்றது; அதே போது, பிற தொடர்கள் பின்பு கேட்கப்படுவதே இல்லை.

தூய்மையான நாணயம் மனிதர் அனைவரிடை யேயும் புழங்கி அதன் பெறுமானத்திற்காக மதிக்கப் படுகின்ற வேளையில், போலிநாணயம் கண்டு பிடிக்கப் பட்டு உலோக முருக்கும் பானையில் எறிந்து விடப்படுதல் போன்று, போலியான சொல்லோ, செயலோ குணவியல்போ

உணர்ந்தறியப்பட்டு, உண்மையற்ற, ஆற்றலற்ற, இறந்துபட்ட ஒரு பொருளாக அது தோன்றிய வெறுமையில் வீழ்ந்து மடிய விடப்படுகின்றது.

அரும்பொருள் தொகுதியாயினும் சரி, மனிதரா யினும் சரி, போலிப் பொருள்களுக்கு மதிப்பில்லை. உண்மையான பண்டமாகத் தேர்வுபெற முயலுகின்ற போலிப் பொருள்களைக் கண்டு நாம் வெட்க முறுகின்றோம். போலித்தன்மை இழிவானது. ஏமாற்றித் திரிபவன் ஒரு வஞ்சச்சொல்லுக்கு ஆளாகிவிடுகின்றான். அவன் மற்ற மனிதரைவிட அருகதை குறைந்தவன். அவன் ஒரு நிழல், பொய், முகமூடி. உண்மைப் பான்மை மதிப்பிற்குரியது. நல்லுள்ளம் கொண்ட மனிதன் ஓர் எடுத்துக் காட்டாகிவிடுகின்றான். அவன் ஏனைய மனிதரைவிட அருகதை மிகுந்தவன்; அவன் ஒரு மெய்ம்மை. ஆற்றல், உருவமைப்பு அறம், போலித் தன்மையால் அனைத்தும் அழிந்துவிடுகின்றன. தனித் தன்மை கூடத் தேய்ந்து மறைந்து விடுகின்றது. ஏனெனின், போலித் தன்மை, வெறுமை, உண்மைப் பான்மையால் ஒவ்வொன்றும் பெறப்படுகின்றது. உண்மைப் பான்மை உறுதியானது, நிலையானது, மெய்யானது.

போலித்தனங்களாலும், பொய்த் தோற்றங்களாலும் வெற்றிகரமான வாழ்க்கைப் போக்கை உருவாக்கிவிட முடியுமென எம் மனிதனாகிலும் எண்ணுவானேயாயின், நிழல்கள் என்னும் ஆழ்ந்த குழிக்குள் அவன் அமிழ்ந்து விடுவதற்கு முன் தயக்கங் கொள்ளட்டும். ஏனெனின் இயல்பார்வமின்மையில் வன்மையான நிலத்தளம்

கிடையாது; மூலாதாரம் கிடையாது; மெய்ம்மை கிடையாது. அங்கு எப்பொருளும் நிலைகொள்ள எதுவுமே கிடையாது; ஆனால், அங்குத் தனிமை, ஏழைமை, அவமானம், குழப்பம், அச்சங்கள், ஐயப்பாடுகள், ஏக்கங்கள், பிற அனைத்தையும்விட இழிந்த, இருண்ட, அற்பமான ஒரு நரகம் உண்டெனின், அது இயல்பார்வமின்மை என்னும் நரகமேயாகும்.

இயல்பார்வமுடைய மனிதனின் மனத்தை அழகான நான்கு சிறப்புக் குணங்கள் அணி செய்கின்றன. அவை

1. எளிமை 3. மதி நுட்பம்

2. கவர்ச்சி 4. ஆற்றல்

**எளிமை**யென்பது இயல்தன்மையே, அது, பொய்த் தோற்றமோ அயலான அலங்காரமோ இன்றி வெறுமனே உள்ளவாறிருத்தலேயாகும். இயற்கையின் கண்ணுள்ள பொருள்கள அனைத்தும் அழகுடையன வாயிருப்பதேன்? அவை இயற்கையாயிருப்பவை. அவற்றை நாம் அவையிருக்கின்றபடியே காண்கின்றோ மேயன்றி, அவை விரும்பக்கூடும் வகையில் காண்ப தில்லை. ஏன், உண்மையில் பிற இருப்பதினின்றும் மாறுபட்டுத் தோற்றமளிக்கவேண்டுமென்ற விருப்பம் அவற்றிற்குக் கிடையாது.

மனித இனத்தின் வெளிப்புறத்து இயலுலகில் கபடம் எங்ஙணுமில்லை. கண்கள் அனைத்திற்கும் அத்துணை அழகாகத்தோன்றுகின்ற மலர் பாசாங்கு செய்யக் கூடுமெனின் அது தன் அழகை இழந்துவிடும்.

இயற்கையை நோக்குகின்றபோது நாம் மெய்ம்மையை நோக்குபவர்களாகின்றோம்; அதன் எழிலும் மணமும் நம்மை மகிழ்வித்துத் திகைக்க வைக்கின்றன. எங்குமே ஒரு குறைபாட்டை நாம் காணவியலாது; அதோடு, எப்பொருளையும் செம்மையாக்கக் கூடாத நமது தகுதியின்மையையும் நாம் உணர்ந்திருக்கின்றோம். ஒவ்வொன்றும் அதற்கே உரித்தான தனிப்பட்ட நிறைவைக் கொண்டு தன் எளிமையெனும் எழிலுடன் மிளிர்கின்றது.

"இயற்கைக்கே திரும்புதல்" என்பது தற்போதையச் சமூக முழக்கங்களில் ஒன்றாகும். அது நாட்டுப் புறத்தில் ஒரு குடிசையும், பயிர்வளர்க்கச் சிறு பகுதி வயலும் கொண்டிருத்தலையே குறிப்பதாகப் பொதுவாகப் புரிந்து கொள்ளப்படுகின்றது. நம்முடன் நம் கபடங்களையும் நாம் கொண்டு செல்வதாயிருப்பின் நாட்டுப் புறத்திற்குச் செல்வது சிறிதளவு பயனுடையதாகவே இயிருக்கும்; நம்முடன் பற்றிக் கொண்டிருக்கும் எந்தப் பகட்டையும் நாமிருக்கின்ற இடத்திலேயே முழுக்கிடுதலே சிறப்புடைத்து. சமூக வழக்க முறைகளின் சுமையால் அழுந்துவதாகக் கருதுவோர், நாட்டுப் புறத்திற்குச் சென்று இயற்கையின் அமைதியை நாடவேண்டுமென்பது நன்மையானதே. ஆனால், அதை எளிமைக்கும், மெய்ம்மைக்கும் நம்மை முட்டுத்தருகின்ற உட்புற நல்வழியின் கருவியாகக் கொள்வதன்றி, வேறு எதற்காக இருப்பினும் அது தோல்வியடைந்துவிடும்.

விலங்கினத்தின் இயற்கையான எளிமையினின்றுமே மனித இயல்பு அலைந்து திரிந்திருக்கின்றதெனினும், அது, ஓர் உயர்வான, எளிமையை நோக்கியே

சென்று கொண்டிருக்கின்றது. பெருந் திறமையாளர்களாக இருக்கும் மக்கள் தமது இயற்கையான எளிமையின் காரணமாகவே அத்தகைமையினராய் இருக்கின்றனர். அவர்கள் பாசாங்கு செய்வதில்லை; இயல்பாக இருக்கின்றனர். சிறுமதி மனங்கொண்டோரே நாகரிகம் கற்று நடைமுறைப் படுத்துகின்றனர். உலக மேடையில் கவர்ச்சியுடைய ஓர் ஆளாகத்தோன்ற அவர்கள் விரும்புகின்றனர்; திருநிலை இல்லா அவ் விருப்பத்தால் அவர்கள் மட்டமான நிலைக்கே உந்தித் தள்ளப் படுகின்றனர்.

தன் ஆய்வுப் பண்பும், ஒழுக்க ஆற்றல்களும் தன்னிடம் கொண்டு, எளிமைக்கு மீளுவதிலேயே ஒரு மனிதன் மேன்மையடைகின்றான். மெய்யான எதையுமே அவன் இழப்பதில்லை. குணவியல்பென்னும் தங்கத்தைப் புலப்படுத்தும் வகையில் கள்ளத்தனங்கள் மட்டுமே களைந்தெறியப்படுகின்றன. மெய்யார்வம் எங்குள்ளதோ அங்கு எப்போதும் எளிமையும் இருக்கும். அதாவது, நாம் இயற்கையில் காண்பதுபோன்ற எளிமை, மெய்ம்மையின் எழில் சேரும் எளிமை அங்கிருக்கும்.

***கவர்ச்சி*** எளிமையின் நேரடி விளைவாகும். நாம் குறிப்பிட்டுக் காட்டியுள்ளபடி இயற்கைப் பொருள்கள் அனைத்திலும் கவர்ச்சியைச் செல்வாக்காக வெளிப் படுகின்றது. கவர்ச்சியுடையோராய் கருதப்பட வேண்டு மெனத் துடிப்போர் அவ்வாறு ஆதலும் அரிது.

ஏனெனின், அவருடைய தற்செருக்கே அதற்கொரு தடையாகும். கவர்ச்சியுடையோராய்க் கருதப்பட

வேண்டுமென்ற விருப்பமே ஒரு மோசடி. அது எண்ணிறந்த மோசடிகளைச் செய்ய வழி கோலுகின்றது. மேலும் உண்மையான கவர்ச்சிகளும், குணவியல்புச் சிறப்புகளும் தம்மிடம் இல்லாதிருப்பதைத் தாம் உணருவதால், அதற்குப் பகரமான ஒன்றை நாடுதலையே அந்நிலை உணர்த்து கின்றது. ஆனால், மன அழகிற்கும், குணவியல்பு வலிமைக்கும் பகரமே கிடையாது. திறமையைப் போன்றே கவர்ச்சியும் பற்றுக்கொள் வதாலேயே பறிபோய்விடுகின்றது.

குணவியல்பைப் பொறுத்து மிகுதியான திண்மையும், ஆர்வமும் கொண்டு நாடுவோரே அதைப் பெற்று நுகருகின்றனர். நாம் ஆர்வம், என்றழைக்கின்ற மனநிறைவும், நெஞ்ச முழுமையும், கொண்ட கவர்ச்சி ஆற்றலுக்கு ஒப்புமை கூற மனித இயல்பின்கண் எதுவுமே இல்லை. மெய்யார்வமுடைய ஆண்மகனையோ பெண்ணையோ பொறுத்து என்றென்றும் நிலைக்கின்ற ஒரு கவர்ச்சிக் கூறுள்ளது. அவர்கள் தம்மை மனித இயல்புக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகத் தோற்றுவிக்கின்றனர். மெய்யார்வம் தவிர்ந்த தனிமறைக் கவர்ச்சிக் கூறு வேறதுவுமே இருக்க இயலாது. அறிவு மயக்கம் இருக்கலாம்; இருக்கவே செய்கின்றது. அறிவு மயக்கம் துன்பந் தோய்ந்த மருட்சி நீக்கத்தில் முடிவுறுகின்றது. ஆனால், மெய்யார்வம் கொண்ட உயிர்களிடையே எதுவுமே மறைக்கப் படாததாலும், அவர்கள் மெய்ம்மை என்னும் திண்மையான நிலத் தளத்திலே நிலைபெற்றிருப்பதாலும், மடியச் செய்யப்பட வேண்டிய மருட்சி எதுவுமே கிடையாது.

மனிதரிடையேயுள்ள தலைவர்கள்/தமது மெய்மை ஆற்றலாலேயே பிறரைக் கவருகின்றனர் அவர்களுடைய கவர்ச்சிச் செல்வாக்கின் அளவே அவர்களுடைய மெய்யார்வத்தின் அளவாகும்.

மெய்யார்வமுடைய மக்கள் தம் திறமைக் கூறு, தம் சிறப்பாற்றல், தம் அறப்பாங்கு, தம் அழகு இவற்றைக் குறித்து நினைப்பதேயில்லை. அவர்கள் தம்மைக் குறித்து முனைப்புணர்வு இல்லாதோராயிருப்பதாலேயே, அனை வரையும் கவருவதுடன் அவர்களின் நம்பிக்கை, அன்பு, மதிப்பு இவற்றையும் பெற்றுக் கொள்கின்றனர்.

**மதிநுட்பம்** மெய்யார்வமுடையோர்க்கு உரித்தானது. அவர்கள் முன்னிலையில் பாசாங்குகள் அனைத்தும் வெளிப்பட்டு விடுகின்றன. மெய்யார்வமுடைய மனித னின் ஆய்ந்துணருங் கண்ணிற்குப் பாசாங்குக்காரர்கள் அனைவரும் தெளிவாகப் புலப்பட்டுகிடுகின்றனர்.

மனிதர் இயற்கைப் பொருள்களைக் கண்ணுற்ற வேளையிலேயே, அது பாம்பு, பறவை, குதிரை, மரம், மல்லிகை எனத் தவறின்றிப் பிரித்துணர்தல் போன்று மெய்யார்வமுடைய மனிதன் பல்வகைக் குணவியல்பு களையும் பகுத்துணருகின்றான். ஓர் அசைவில், ஒரு பார்வையில், ஒரு சொல்லில், ஒரு செயலில் மனிதனின் இயல்பை அவன் அறிந்து அதற்குத் தக நடந்து கொள்கின்றான். ஐயப்பாட்டிற்கு இடமின்றி அவன் பாதுகாப்புடன் இருந்து கொள்கின்றான். அவ நம்பிக்கைக்கு ஆளாகாமல் அவன் பாசாங்குக்காரனுக்காக ஆயத்தமாக இருக்கின்றான். மக்கள் அவனிடம் ஒளிவு

மறைவின்றிப் பழகுகின்றனர்; அவன் அவர்களின் மனநிலைகளைக் கற்றறிந்து விடுகின்றான். அவனுடைய நுட்பமான தீர்ப்பு செயல்களின் மையத்திற்கே ஊடுருவிச் சென்று அவை இருக்கின்றவாறே அவற்றுடன் தொடர்பு கொள்ள வழி செய்கின்றது. நேரடியான, தெளிவான அவனுடைய நடத்தை பிறரிடத்து நன்மையை வலுப் படுத்துகின்றது. தீயோரை இழிவு படுத்துகின்றது, நெஞ்சத்திலும் சிந்தனையிலும் அவன் கொண்டிருக்கின்ற நிறைவுடைமையை இன்னும் பெறாதோர்க்கு அவன் வலிமையூட்டும் ஓர் ஊன்று கோலாகவும் இருக்கின்றான்.

ஆற்றல் மதிநுட்பத்தோடு இணைந்தே செல்லு கின்றது. செயல்களின் தன்மையைப் புரிந்து கொள்ளும் நிலையானது, செயல்கள் அனைத்தையும் நேர்மையான சிறப்புடைய வழியில் எதிர்ப்பட்டு ஈடுபாடு கொள்ளும் ஆற்றலுடன் இணைந்தே வருகின்றது. எப்போதும் அறிவே ஆற்றலாகும். ஆனால், செயல்களின் தன்மையைப் பொறுத்து அறிவு தலைசிறந்த ஆற்றலாகும். அதனைக் கொண்டிருப்போன் நெஞ்சங்கள் அனைத்திற்கும் ஓர் ஆற்றலாக விடுவதுடன், அவற்றின் செயல்களை நன்மையான வகையில் திருப்பியும் விடுகின்றான். அவனுடைய உடல் மறைந்த நெடு நாள்களுக்குப் பின்பும், அவன், பின்னும் நன்மைகளை உருவாக்கும் ஆற்றலாக இருந்து வருகின்றான். மக்களின் மனங்களில் நுட்பமாக இயங்கி விழுமிய பயன்களுக்காக அவர்களை உருவாக்கும் மெய்ம்மையாக இருந்து வருகின்றான். முதலில் அவனுடைய ஆற்றல் ஓரிடத்திற் குரியதாயும், வரையறைக்குட்பட்டதாயுமே இருக்கின்றது. ஆனால்,

அவன் முடுக்கிவிட்ட நேர்மையென்னும் சுற்றுவட்டம் உலக முழுமையும் தழுவுகின்றவரையில் தொடர்ச்சியாக விரிவடைந்து கொண்டே இருக்கின்றது. மனிதர் அனைவரும் அதன் வயப்படுகின்றனர்.

உண்மை ஆர்வமுடைய மனிதன் தான் செய்பவை அனைத்திலும், தான் தொடர்பு கொள்ளுகின்ற மக்கள் அனைவரிடமும் தனது குணவியல்பைப் பொறித்து விடுகின்றான். ஒரு காலத்தில் அவன் ஒரு சொல்லைக் கூறுகின்றான். அது எவருடைய மனத்திலேனும் பதிந்து விடுகின்றது. அதன் செல்வாக்கு ஒருவரிடமிருந்து மற்றொருவரிடமாக அறிவிக்கப்படுகின்றது. பத்தாயிரம் கற்களுக்கப்பால் நம்பிக்கை இழந்து நிற்கும் ஒரு மனிதர் இதைக் கேள்வியுற்றுத் தம்மைச் சீர்படுத்திக் கொள்கின்றார். அத்தகைய ஆற்றலே ஓர் ஆக்கமாகும். அதனுடைய பெறுமானம் நாணயத்தால் மதிப்பிடக் கூடாதது. பண்பென்னும் விலைமதிக்க முடியாத மாணிக்கங்களைப் பணத்தால் கொள்முதல் செய்ய வியலாது; ஆனால் நேர்மையான உழைப்பிற்கு அஃது இயலுவதாகும்.

தன்னைத் தானே உண்மை ஆர்வமுடையவனாக ஆக்கிக் கொள்பவன், தன் வாழ்நாள் முழுவதும் ஓர் உரமான நிறைவைப் பெற்றுத், தனிச் சிறப்பு வாய்ந்த வெற்றியும், அரிய ஆற்றலுடைய மனிதனாகி விடுகின்றான். உண்மை ஆர்வமென்னும் வலிமையான தூண் அத் திறத்ததாகும். ஒரு முறை அது முழுமையாக எழுப்பப்பட்டுவிட்டால் ஆக்கமெனும் ஆலயம் நிலைப்பாடு

பெற்று விடுகின்ற அளவிற்கு அதன் ஆதரிப்புச் ஆற்றல் அத்துணை மேம்பட்டதாக இருக்கின்றது. அதன் சுவர்கள் பொடிந்து விழுவதில்லை; அதன் உத்திரங்கள் உரங்கெடு வதில்லை. அதன் கூரை கீழே வீழ்ந்து விடுவதில்லை. மனிதன் வாழுகின்ற போது அது நிலைத்து நிற்கும். அவன் மறைந்த பின்னரும் பல தலைமுறைகள் பிறர்க்குத் தஞ்ச மும், அடைக்கலமும் தொடர்ந்து அளித்துக்கொண்டே வரும்.

# நடுநிலை

தப்பெண்ணம் தவிர்த்திடுதலே ஒரு பெரும் நன்மையாகும். தப்பெண்ணம் மனிதனின் பாதையில், உடல் நலம், வெற்றி, மகிழ்ச்சி, ஆக்கம் இவற்றிற்கு எதிராக இடையூறுகளைக் குவிக்கின்றது. ஆகவே, தன்னுடைய கற்பிதமான பகைவர்களுக்கு எதிராக அவன் தொடர்ந்து போட்டி இடுபவனாகி விடுகின்றான். தப்பெண்ணம் நீக்கப்பட்டுவிடின் அவர்கள் நண்பர்களாகவே தோற்ற மளிக்கின்றனர். தப்பெண்ணமுடைய மனிதனுக்கு வாழ்வு ஒரு விதமான தடை கடப்புப் பந்தயமாகி விடுவது உண்மையே. தடைகளைக் கடந்து செல்ல முடியாததும் குறிக்கோளை அடைய முடியாததுமான ஒரு பந்தயம்; நடுநிலையுடைய மனிதனுக்கு அவன் வாழ்வு, மனத்திற்குகந்த நாட்டினில் நாள் முடிவில் உணவும், ஓய்வும் கிடைக்கக் கூடிய ஒரு நாள் நடையேயாகும்.

மனிதன் நடுநிலை எய்த வேண்டுமெனின், தன் சொந்தப் போக்குப்படியன்றிப் பிற எப்போக்குப் படியும் எதையும் காணுவதைத் தடுக்கின்ற உள் அகந்தையை அவன் அகற்றியாக வேண்டும். அது ஒரு பெரும் பணியென்பது உண்மையே ஆனால் மேம்பாடானது. உடனே செய்து முடிக்கக் கூடாததாயினும் இப்போதே தொடங்கிவிடுதற்கு உரியதாகும். உண்மையால்

“மலைகளையும் அகற்றிவிட” முடியும். தப்பெண்ணம் மனத்தின் மலைத் தொடர்ச்சியாகும்; ஒருதலைச் சார்பானவன் அதற்கு அப்பால் காணுவதோ, அதற்கு அப்பாலும் உண்டு என நம்புவதோ இல்லை. எவ்வாறெனினும், இந்த மலைகள் அகற்றப்பட்டுவிடின், உற்றுநோக்குகின்ற கண்களை மகிழ்விக்கும் வகையில், ஒளியாலும் நிழலாலுமான, நிறத்தாலும் குரலாலுமான மேன்மையான ஓவியமாக மன நிலைகள் முடிவற்ற ஒளிக் காட்சிக்குரியதாய்த் திறந்து வைக்கப்படுகின்றது.

முரண்பாடான தப்பெண்ணத்தைப் பற்றிக் கொண்டிருப்பதால் எத்துணையோ களிப்புகள் இழக்கப்படுகின்றன. பலரின் நட்பை இழக்க வேண்டி யுள்ளது. எத்துணைப் பெரிய மகிழ்ச்சியும் ஊறுபடுத்தப் படுகின்றது. எத்துணை ஆக்கங்கள் அழிக்கப்படுகின்றன. எனினும், தப்பெண்ணத்திலிருந்து விடுபட்டுத் தனித்து நிற்பது அரிய செயலாகும்.

தமக்கு அக்கறையுள்ள காரியங்களைக் குறித்து வாதிடுகையில் தப்பெண்ணம் கொண்ட ஒருதலைச் சார்பினராக இல்லாதோர் ஒரு சிலராகவே இருக்கின்றனர். நிகழ்ச்சி அனைத்தையும் கருத்தில் கொண்டு, காரியத்தில் உண்மையைக் காணும்பொருட்டுச் சான்றுகள் அனைத்தையும் சீர் தூக்கித் தனது செயலைக் குறித்து இரு சார்பிலும் நடுநிலை உணர்வுடன் உரையாடுபவனை ஒருவன் மிக அரிதாகவே காணுகின்றான். ஒருதலைச் சார்பினன் ஒவ்வொருவனும் தனது சொந்த வாதத்தையே நிலைநாட்ட முனைகின்றான். அவன் உண்மையைத் தேடிக் கொண்டிருக்கவில்லை. ஏனெனின், தன் சொந்த

முடிவே உண்மை, பிற அனைத்தும் பொய் என அவன் ஏற்கனவே ஏற்றுக் கொண்டுவிட்டான். ஆனால், அவன் தன் வழக்கையே வாதாடுவதுடன், வெற்றிக்காகவும் பாடுபடுகின்றான். மேலும், அவன் நிகழ்ச்சிகளை அமைதியுடன் வரிசைப்படுத்தித் தான் கூறுவது உண்மை என்பதை விளக்கிக் காட்ட முயற்சி எடுத்துக் கொள்வதுமில்லை. ஆனால், மிகுதியாகவோ குறைவா கவோ கடுப்பும், கலக்கமும் கொண்டு தனது கூற்றையே வாதிடுகின்றான்.

புத்தொளி உள்ளே புகுவது, மிகுதியான அழகைக் கண்ணுறுவது, மேலான இசையைச் செவி மடுப்பது ஆகிய இவற்றிற்கெதிராக மனக்கதவை மூடி விடுவதே தப்பெண்ணமாகும். ஒருதலைச் சார்பினன் தனது சிறிய நிலையற்ற உறுதியற்ற கருத்தை விடாமல் பற்றிக் கொண்டு அதுவே உலகின் மிகப்பெரிய காரியமென எண்ணுகின்றான். தன்னுடைய சொல்லை மனிதர் அனைவரும் சரியென ஒப்புக் கொள்ள வேண்டும் என்று எண்ணும் அளவிற்கு அவன் தன் சொந்தத் தீர்மானத்தின் மீது அத்துணை பற்றுக் கொண்டவனாக இருக்கின்றான். அவன் காணுகின்றபடியே தாமும் காணாத மனிதரை அவன் ஏறத்தாழ அறிவிலிகளாகவே கருதுகின்றான். அதே வேளையில், தன் நோக்கத்தைப் பொறுத்துத் தன்னோடு ஒன்று சேருவோரின் நல்ல தீர்மானத்தை அவன் புகழுகின்றான். அத்தகைய மனிதன் அறிவும் பெறவியலாது. உண்மையும் பெறவியலாது, மெய்ம்மையின் எல்லைக்குட்படாத கருத்தென்னும் கோளத்திற்குள் அடைபட்டவனாக இருக்கின்றான். வாழ்வின் எளிய

உண்மைகளைக் கூட அவன் காணாதவாறு தடுக்கின்ற ஒரு வகையான மயக்கத்தில் நடமாடுபவனாகி விடுகின்றான். அதே வேளையில், வழக்கமாகவே ஏறத்தாழ ஆதாரமற்றதாகவே இருக்கின்ற அவனுடைய சொந்தக் கோட்பாடுகள் அவனுடைய மனத்தில் வலி மீறிய அளவிற்கு இடம் பெறுகின்றன. ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு வழியே உண்டென்றும், தான் கருதுவதே அவ் வழி என்றும் பற்று மிகுதியால் அவன் கருதுகின்றான். ஒவ்வொன்றிற்கும் குறைந்தது இரு வழிகளேனும் உள்ளன. அவ் இரு வழிகளையும் பரபரப்பினின்றும் நீங்கியவனாய், ஒன்றை மற்றொன்று மேலோச்சி நிற்க வேண்டும் என்ற விருப்பமின்றியும் கவனமாக ஆராய்பவனே அச் சங்கதியின் உண்மையைக் காணுபவனாவான்.

உலகின்கண்ணுள்ள வேறுபாடுகளையும், மாறுபட்ட கருத்துகளையும் பொறுத்த அளவில் உலகம் ஒரு வழக்கை எதிர்வாதிடுகின்ற இரு வழக்கறிஞர்களைப் போன்றதாகும். குற்றஞ்சாட்டும் வழக்குரைஞர் தமது பக்கத்தை மெய்யெனக் காட்டுதற்கு வேண்டிய நிகழ்ச்சிகள் அனைத்தையும் முன்னிலைப்படுத்துகின்றார்; அதே வேளையில், எதிர்வாத வழக்குரைஞர் தமது வாதத்திற்கு ஆதாரமாயிருப்பவை அனைத்தையும் முன்னிலைப் படுத்துகின்றார். அவர்களிருவரும் ஒரு வருக்கெதிராக ஒருவர் காட்டிய நிகழ்ச்சிகளைச் சிறுமைப்படுத்தவோ புறக்கணிக்கவோ, காரணங் காட்டி மறுக்கவோ செய்கின்றனர். எவ்வாறெனினும், வழக்கின் நீதிபதி மக்கள் நடுவேயுள்ள ஒரு தலைச்சார்பற்ற சிந்தனை

யாளரைப் போன்றவராகும். அவர் இரு தரப்பிலுமுள்ள சான்றுகள் அனைத்தையும் செவிமடுத்து, நீதி வழங்குதற் பொருட்டு ஒருதலைச் சார்பற்ற ஒரு குறிப்புரையை உருவாக்கும் வகைளில் அவற்றை ஒப்பிட்டு ஆராய்கின்றார்.

நடுநிலையுடைய ஒரு மனிதன் தப்பெண்ணத் திலிருந்தும், விருப்பு, வெறுப்புகளினின்றும் விடுதலை பெற்றுக் கூர்ந்தாராய்கின்றான். சீர்தூக்கி மதிப்பிடு கின்றான்; சிந்திக்கின்றான். அவனுடைய ஒரே விருப்பம் மெய்ம்மையைக் கண்டு பிடித்தலேயாகும். கற்பிதமாக அவன் கொண்டிருந்த எண்ணங்களை அவன் நீக்கி விடுகின்றான். நிகழ்ச்சிகளும், சான்றுகளும் தம் கூற்றை எடுத்துரைக்க விட்டுவிடுகின்றான். அவன் சாதித்துக் காட்ட வேண்டுமென்று தனக்கென வழக்கெதுவும் வைத்திருப்பதில்லை. ஏனெனின், உண்மை மாற்றப்பட வியலாதது, தன் கருத்துகள் அதற்கு வேற்றுமை கற்பிப்பதில்லை, அதைத் துருவித் தேடிக் கண்டுபிடிக்கக் கூடும் என்பதை அவன் அறிவான். அதன் காரணமாகப் பரபரப்பு மிக்க ஒருதலைச் சார்பிற்கு உள்ளாகின்ற பெருமளவு பண்பு முரண்பாடுகளினின்றும், நடுக்கத்தின் இழப்பினின்றும் அவன் தப்பிவிடுகின்றான். இதற்கும் மேலாக அவன் இயற்பொருளை நேருக்கு நேர் நோக்குகின்றான்; ஆகவே, தெளிவும் அமைதியும் உடையவனாகி விடுகின்றான்.

நடுவுநிலைச் சிந்தனையாளன் எங்கிருப்பினும் விலைவிலோ பின்னரோ உலகின் மதிப்பீட்டிலும், அதன்

ஊழை வழிப்படுத்துவதிலும் அவன் மிக மேன்மையான நிலையை வகிக்கப்போவதை உறுதியாகக் கொள்கின்ற அளவிற்குத் தப்பெண்ணத்திலிருந்து விடுபடுதல் அத்துணை அரிதாகும். அந்நிலை உலகியல் சார்ந்த காரியங்களில் ஒரு பதவியைப் பெறுவதாயிருக்க வேண்டுமென்பதில்லை. ஏனெனின், அது நிகழ்தற் கரிதானது. ஆனால், அந் நிலை செல்வாக்கில் ஒரு மேம்பட்ட நிலையைப் பெறுவதேயாகும். இப்போது அத்தகைய ஒருவன் இருக்கலாம். அவன் ஒரு தச்சனாக இருக்கலாம், ஒரு நெசவாளியாக இருக்கலாம், ஒரு கணக்கராக இருக்கலாம், அவன் ஏழையிலிருக்கலாம், பெருஞ் செல்வரின் வீட்டிலே இருக்கலாம்; அவன் குட்டையாகவோ நெட்டையாகவோ இருக்கலாம். எந் நிறமும் உடையவனாக இருக்கலாம்; ஆனால், எந் நிலையிலிருப்பினும், அவன் உலகத்தை இயக்கத் தொடங்கிவிட்டவனாவான். அவன் ஒருநாள் வளர்ச்சியின் ஒரு புது ஆற்றலாகவும், படைப்பு மையமாகவும் உலகம் முழுவதும் ஒப்புக்கொள்ளப்படுவான்.

எல்லையற்ற பரம்பெருள் இக் கோளத்தின்கண் ஒரு சிந்தனையாளனைக் கட்ட விழ்த்து விடுகையில் கவனமாக இருங்கள் என எமர்சன் கூறுகின்றார். தப்பெண்ணத்தால் கட்டுண்ட மனிதன் சிந்தனையாளனல்லன்; அவன் வெறுமனே ஒரு கருத்தை விடாப்பிடியுடன் கொண்டிருப்பவனேயாவான். ஒவ்வோர் எண்ணமும் அவனுடைய குறிப்பிட்ட தப்பெண்ணம் என்னும் வாயிலைக் கடந்து வந்து அதன் நிறத்தைப் பெற்றேயாக வேண்டும். எனவே, உணர்ச்சி வயப்படாத சிந்தனையும்,

நடுநிலையுடைய தீர்ப்பும் இயலாத காரியங்கள் ஆக்கப்பட்டுவிடுகின்றன. அத்தகைய மனிதன் தன் நோக்கத்தின் தொடர்பையோ இருப்பதாகத் தான் கற்பனை செய்கின்ற தொடர்பைக் கொண்டே ஒவ்வொரு காரியத்தையும் காண்கின்றான். அதே வேளையில், சிந்தனையாளன் காரியங்களை அவையுள்ளவாறே காணுகின்றான், இயற்பொருளை நேருக்குநேர் காணத் தகுதியுடையவனாகும் வகையில் தப்பெண்ணத்தினின்றும், தானெனும் அகந்தையின் சிறுமைகளினின்றும் தன் மனத்தைத் தூய்மைப் படுத்திக் கொள்கின்ற மனிதன் ஆற்றலின் உச்சியை அடைந்தவனாகின்றான். அவன் தன் கைகளுக்குள் பெருமளவு செல்வாக்கை வைத்துக் கொண்டிருப்பவனாகின்றான். அவன் அறிந்திருப்பினும் இல்லையெனினும் இந்த ஆற்றலை அவன் கையாண்டே தீருவான். அஃது அவனுடைய வாழ்வினின்றும் பிரிக்கப்பட இயலாததாகிவிடும். மலரினின்றும் மணம் கமழுவது போன்று அஃது அவனிடமிருந்து தோன்றும் அவனுடைய சொற்களில், செயல்களில், உடல் தோற்றங்களில் மன இயக்கங்களில், என் அவனுடைய அமைதியிலும், உடலமைப்பின் அசைவின்மையிலும் அது மிளிரும். அவன் எங்குச் செல்வதாயினும், அவன் பாலைவனத்திற்குப் பறப்பதாயினுங்கூட இந்த மிக உயர்ந்த விதியிலிருந்து அவன் தப்ப இயலாது. எனெனின், பெரிய சிந்தனையாளன் உலகத்தின் மையமாவான். அவனாலேயே மனிதர் அனைவரும் தத்தமது கோள் வழியில் நிறுத்தப்படுகின்றனர்; சிந்தனை அனைத்தும் அவனை நோக்கியே மைய ஈர்ப்புக் கொள்கின்றன.

மனித இனம் அமிழ்ந்து கிடக்கின்ற இச்சை யென்னும் கொந்தளிக்கும் நீர்ச்சுழிக்கு மேலே உண்மையான சிந்தனையாளன் வாழுகின்றான். தனிமுறைச் சார்புடைய நோக்கங்களினால் அவன் தள்ளாட்டம் கொள்வதில்லை. ஏனெனின், தனிச் சார்பற்ற நியதிகளின் சிறப்பை அவன் புரிந்து கொண்டிருக் கின்றான். எனவே, அகந்தையான இச்சைகள் மோதுகின்ற போரில் அவன் ஈடுபடாதவனாய் இருப்பதால், நடுநிலைக்குரிய சாதக நிலையிலிருந்து கருத்தற்ற பார்வையாளராகவும் இருந்து விடாமல், இருபுறமும் சமமாகக் காணுவதோடு, அப் போரின் காரணத்தையும் பொருளையும் உணர்ந்து கொள்ளவும் முடியும்.

உண்மையான சிந்தனையாளனே மனிதரில் மிக மேன்மையானவன். அவனுடைய ஊழே மிகவும் உயர்வுடையது. முற்றிலும் நடுநிலையான மனம் உயர் நிலையை அடைந்துவிட்டதாகும்; அது இயற்பொருளின் முழுமையான ஒளியில் பொலிகின்றது.

நடுநிலையின் பெரும் ஆக்கக் கூறுகள் நான்கு :

1. நீதி 3. அமைதி

2. பொறுமை 4. மெய்யறிவு

சமமான பெறுமதிகளைக் கொடுக்கலும், வாங்கலுமே **நீதி**. "கடினமான கொள்முதல் செய்தல்" என்றழைக்கப்படுவது ஒருவகைத் திருட்டேயாகும். கொள்முதல் செய்வோன் தன் கொள்முதல் பொருளின் ஒரு பகுதிக்கான விலையைக் கொடுத்துவிட்டு மீதத்தைத்

தனியான ஆக்கத்தைத் தனதாக்கிக் கொள்வதையே அது குறிக்கும். பேரத்தை முடித்து விடுவதன் மூலம் விற்போனும் கூட இதற்கு ஊக்க மூட்டுபவனாவான்.

நேர்மையான மனிதன் விழுமம் மிஞ்சிய பலன் அடைய முயற்சி செய்வதில்லை. அவன் பொருள்களின் உண்மையான பெறுமதிகளை ஆராய்ந்து அதற்குப் பொருந்துமாறு தன் கொடுக்கல் வாங்கல்களை உருவாக்கிக் கொள்கின்றான். "எது ஆதாயமாயிருக்கும்" என்ற எண்ணம் "எது நேர்மையானது" என்ற எண்ணத்திற்கு முன்பாகத் தன்னிடத்தே தோன்ற அவன் இடந்தருவதில்லை. ஏனெனின், நேர்மையானதே இறுதியில் ஆதாயமாகவும் இருக்கும் என்பதை அவன் அறிவான். வேறு ஒருவனுக்குப் பாதகம் விளைவிக்கும் வகையில் தன் சொந்த நலனை அவன் நாடுவதில்லை. ஏனெனின், கொடுக்கல் வாங்கலில் தொடர்புற்ற இரு சாரார்க்கும் நேர்மையான செயல் சமமாகவும், முழுமையாகவும் நலந்தருகின்றது என்பதை அறிவான். "ஒரு மனிதனின் இழப்பு, இன்னொரு மனிதனின் ஆதாயமாக இருப்பின்", அந்த வேறுபாடு பின்னர் ஈடு செய்யப்பட்டுவிடும் என்பதே அதன் குறிப்பு. நேர்மையற்ற ஆதாயங்கள் ஆக்கத்திற்கு வழிகாட்டாது.

தொழிலில் பேரம் பேசுகின்ற ஊக்கம், வாணிபத்தின் உண்மையான ஊக்கமன்று. அது ஒன்றுமில்லாததற்கு எதையேனும் பெறவேண்டுமென்ற தன்னலத் திருட்டூக்கமேயாகும். நேர்மையான மனிதன் பேரங்கள் அனைத்தையும் ஒழித்துத் தன்தொழிலைத்

தூய்மைப்படுத்துகின்றான். மிகவும் சீர்மை வாய்ந்த நீதியின் அடிப்படையில் அதை அமைக்கின்றான். "ஒரு நல்ல சரக்கை" அதன் சரியான விலையில் அவன் கொடுக்கின்றான்; அதை மாற்றுவதில்லை. மோசடியால் கறைப்படுத்தப்பட்டுள்ள எந்தத் தொழிலினும் அவன் தன் கைகளைக் கறைப்படுத்திக் கொள்வதில்லை. அவனுடைய சரக்குகள் தூய்மையானவை. அவை தக்கமுறையில் விலையிடப்பட்டுள்ளன.

பிற அனைத்திற்கும் மேலாக மனிதன் கஞ்சத் தனத்தை விட்டு, மேலும் மேலும் முழுமையான நேர்மையுடையவனாக இருக்க முயற்சி செய்யட்டும். ஏனெனின், நேர்மையில்லையெனின், அவன் நாணய முடையவனாகவோ, பெருந்தன்மையுடையவனாகவோ ஆண்மையுடையவனாகவோ இருக்கவியலாது. ஆனால், அவன் தன்னாலியன்றது அனைத்தையும் பெறவும், எத்துணைச் சிறிதளவு இயலுமோ, அத்துணைச் சிறிதளவே திருப்பிக் கொடுக்கவும் முயற்சி செய்கின்ற ஒருவகை மறைமுகத் திருடனாகவே இருக்கின்றான். அவன் பேரங்கள் அனைத்தையும் விட்டொழிக்கட்டும். அதனோடு பேரளவானதும், பாராட்டிற்குரியதுமான வெற்றியை மேம்பட்ட தகுதியுடன் தொழிலை நடத்தும் சிறந்த வழியைப் பேரம் பேசுவோர்க்குக் கற்றுத் தரட்டும்.

நடுநிலையுடைய மனிதனின் குணவியல்பில் **பொறுமையே** ஒளிமிக்க அணியாகும். இஃது, ஒரு சிறுமி தனது பின்னல் வேலையில் கொண்டிருப்பதைப் போன்றதோ, ஒரு சிறுவன் தன் பொம்மை இயந்திரத்தை அமைப்பதில் கொண்டிருப்பதைப் போன்றதோ ஆன

குறிப்பிட்ட காரியத்தில் கொண்டுள்ள குறிப்பிட்ட பொறுமையைக் குறிப்பதாகாது. ஆனால், பிறழ்வின்றிப் பிறர் நலம் காணும் தன்மை, எவ் வேளையிலும், மிகவும் சோதனையான சூழ்நிலைகளின் போதும் இனிமையான செவ்வி, எச் சோதனையும் கெடுத்துவிட முடியாததும், எத் தொல்லையும் முறித்துவிட முடியாததுமான மாறுபடாத, மென்மையான வலிமை ஆகியவற்றையே இது குறிக்கும். இது ஓர் அரிய உடைமை என்பது உண்மையே. மனித இனத் தொகுதியில் ஒருவன் நீண்ட காலம் எதிர்பார்க்கக்கூடாத ஒன்றுமாகும்; ஆனால், படிப்படியாக அடைந்துவிடக் கூடிய அறம் இதுவே. அறைகுறைப் பொறுமைகூட மனிதனின் வாழ்விலும், காரியங்களிலும், வியக்கத்தக்க அருமைகளை உண்டு பண்ணும். ஏனெனின், பொறுமையின்மை அழிவையே உண்டு பண்ணும். முன்கோபி மனிதன் விரைவாக அழிவை நாடுவான். குற்றச்சாட்டு அன்றி நுண்ணாய்வின் ஒரு சிறு சுடர் தன்மீது வீழ்ந்த மாத்திரத்திலேயே வெடிமருந்தைப் போன்று தொடர்ச்சியாக வெடவெடக்கும் மனிதனுடன் எவரே தொடர்பு கொள்ள விரும்புவர்? அவனுடைய நண்பர்கள் கூட ஒருவர் ஒருவராக அவனை விட்டு நீங்கிவிடுவர். ஏனெனின், ஒவ்வொரு சிறிய மாறுபாடும் தப்பெண்ணத்தின் மீதும் பொறுமையற்றதும், அனல் கக்குவதுமான நாக்கால் தன்னை முரட்டுத் தனமாகத் தாக்கும் மனிதனின் நட்பை யார் நாடுவர்?

ஒரு மனிதன் மிகவும் ஆக்கமுடையவனாக, பயனும், ஆற்றல் உடையவனாக இருக்க வேண்டுமெனின், தன்னை அறிவுடன் ஒழுங்குடன் அடக்கியாள வேண்டும்.

பொறுமையின் அழகான படிப்பினைகளைக் கற்றுக் கொள்ளத் தொடங்க வேண்டும். அவன் பிறரைக் குறித்துச் சிந்திக்கவும், தனக்காக மட்டுமன்றி, அவர் களுடைய நன்மைக்காகவும் செயல்படக் கற்றுக் கொள்ளவேண்டும். பிறர்நலம் கருதுவோனாக, பொறுமை யுடையவனாக இருக்க வேண்டும். மிகவும் சிறப்பு வாய்ந்தது என்று தாம் கருதுகின்ற காரியங்களில், தம்மிலிருந்து மாறுபட்ட கருத்துடைய மனிதருடன் அமைதியான நெஞ்சத்தைக் கொண்டிருத்தல் எவ்வாறு என்பதை அவன் கற்குக் கொள்ள வேண்டும். உயிருக்கு இடையூறு விளைவிக்கக் கூடிய நஞ்சைப் பருகுவதை அவன் தவிர்ப்பது போன்று, சண்டையிடுதலையும் அவன் தவிர்க்க வேண்டும். பொறுமையைக் கையாளுவதன் மூலம் வணக்கத்தைக் கொணருதல் எவ்வாறு என்பதையும் அவன் கற்றுக் கொள்ள வேண்டும்.

சச்சரவு சாதாரணமானது. அஃது நெஞ்சத்தைத் துன்புறுத்தி மனத்தைச் சிதறடித்து விடுகின்றது. பொறுமை மிகவும் அரிதானது; அஃது நெஞ்சத்திற்கு வளமூட்டி, மனத்தை அழகு செய்கின்றது. காரடுமுரடான பாறையை மெதுவான நீர்தேய்த்துக் கரைத்து விடுதல் போன்று, எதிர்ப்புகள் அனைத்தையும் பொறுமை வென்றுவிடு கின்றது, அது மனிதர்களின் நெஞ்சங்களை வயப்படுத்து கின்றது. அது வெற்றி காணுகின்றது, அடக்கியாளுகின்றது.

**அமைதி** பொறுமையைப் பின்தொடர்கின்றது, அது மிகப் பெரிய மேம்பட்ட பண்பாகும். இச்சையெனும்

சூறாவளி சூழ்ந்த கடலின்கண் நெடுநாள் அலைந்து திரிந்த பின்னர் அடிமையொழித்த உயிர்கள் சென்றடையும் அமைதியான துறைமுகம் அதுவேயாகும். மிகுதியாகத் துன்புற்று, மிகுதியாகப் பொறுமையுடனிருந்து முடிவில் வெற்றியும் கண்ட மனிதனை அது அடையாளப்படுத்தி வைக்கின்றது.

அமைதி இல்லத மனிதன் நடுநிலையுடைய மனிதனாக இருக்கவியலாது. பரபரப்பு, தப்பெண்ணம், ஒருதலைச் சார்பு ஆகியவை அமைதிகுலைந்த இச்சைகளி னின்றுமே தோன்றுகின்றன.

அமைதி சூழ்ந்த, நடுநிலையுடைய மனிதன் மகிழ்ச்கிரமான மனிதன் மட்டுமன்று; அவன் தன்னுடைய ஆற்றல்கள் அனைத்தையும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பவனுமாவன். அவன் உறுதியானவன், முன்னோக்குடையவன்; செயல் திறமைக்கு உகந்தவன். எளிதில் சினங்கெள்கின்ற மனிதன் தனது கூச்சலின் மூலம் மெதுவாகவும், கடினப் பாட்டுடனும் செய்து முடிப்பதை அவன் விரைவிலும் எளிதாகவும் மௌனமாகச் செய்து முடித்து விடுகின்றான். அவனுடைய மனம் தூய்மைப் படுத்தப் பட்டதாக, சமநிலையுடையதாக, ஒருமுகப் படுத்தப்பட்டதாக விருக்கின்றது. கொடுக்கப் படுகின்ற வேலையைக் குறைபாடில்லா ஆற்றலுடன் செய்து முடிக்கப் பணிக்கும் ஏவலை ஏற்க அவன் எக்கணமும் அணியமாயிருக்கிறான். அமைதியான மனத்தில் இச்சைகள் அனைத்தும் தணிவுறுகின்றன. முரண்பாடுகள் அனைத்தும் இசைவிணக்கம் பெறுகின்றன. எதிர் மறைகள் அனைத்தும் பொருத்தம் பெறுகின்றன. அங்கு

நல் ஒளி வீசும் களிப்பும், என்றும் நிலைக்கும் அமைதியும் இடம் பெறுகின்றன. எமர்சன் கூறுவது போன்று "களிப்பு நிலையானதாகவும் நடைமுறைப் பழக்கத்திற்குரியதாகவும் இருப்பதே அமைதியாகும்."

தன்னடக்கம் செல்வத்திலும் சிறந்தது. அமைதியோ இறுதியிலாப் பேரின்ப நிலையே.

நடுநிலையுடைய நல்ல மனிதனிடமே மெய்யறிவு நிலையாக உறைகின்றது. அத் தாயின் அறிவுரைகளே அவனுக்கு வழிகாட்டுகின்றன. அத் தாயின் சிறகுகளே அவனைப் பாதுகாக்கின்றன. அவள் மகிழ்ச்சிகரமான வழியிலேயே அவனைக் களிப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லுகின்றாள்.

மெய்யறிவு பல்வகையானது. அறிவுடைய மனிதன் பிறருக்கேற்பத் தன்மனத்தை இணக்கப்படுத்திக் கொள்கின்றான். அவர்களுடைய நன்மைக்காக அவன் செயல் படுகின்றான். ஆனால், அதற்காக ஒழுக்க அறங்களையோ நேர்மையான நடத்தையின் நியதிகளையோ அவன் மீறுவதில்லை. மடமையுடைய மனிதன் பிறருக்கேற்பத் தன்னை இணக்கப்படுத்திக் கொள்ளவியலாது. அவன் தனக்காகவே செயல் படுகின்றான். ஒழுக்க அறங்களையும் நேர்மையான நடத்தையின் நியதிகளையும் தொடர்ச்சியாக மீறுகின்றான். நடுநிலையுடைய செயல் ஒவ்வொன்றிலும் ஓரளவு மெய்யறிவு இருக்கின்றது. ஒரு மனிதன் நடுநிலையின் எல்லையை ஒருமுறை தொட்டு அதை அனுபவித்துவிடின், அவன் இறுதியில் அதன்கண்

நிலைபேறு கொள்ளும் வரையில் அவன் திரும்பத் திரும்ப அதை மீட்டுக் கொள்ளலாம்.

மெய்யறிவு ஒவ்வொரு கருத்தும், சொல்லும் செயலும் உலகின்கண் மிக்க பயனை விளைவிக்கின்றது. அது மேம்பாடு செறிந்ததாக விருக்கின்றது. மெய்யறிவு ஓர் அறிவுக் கிணறும், ஆற்றலின் ஊற்றுமாகும். அது ஆழ்ந்த அறிவுடையது, கவியாற்றல் மிக்கது. மிகச் சிறிய நுணுக்கங்களைக் கூட ஆர்வமாக ஏற்றுக் கொள்கின்ற அளவிற்கு அத்துணை நுட்பமானதும், அனைத்தையும் உட்கொள்வதுமாகும். அது தன்னுடைய பரந்த மேன்மையில் சிறியதைப் புறக் கணிப்பதில்லை. மெய்யறிவு செறிந்த மனம் ஞாலத்தைப் போன்றது. பொருள்கள் அனைத்தையும் அவற்றினுடைய சரியான இடத்திலும், ஒழுங்கிலும் அது கொண்டிருக்கின்றது. அதன் காரணமாக அது அழுத்தம் பெறுவதில்லை. உலகத்தைப் போன்றே அதுவும் தன்னுரிமையுடையதாகவும், தடைகள் எதையும் காணாததாகவும் இருந்து வருகின்றது. எனினும், அது என்றுமே நெறி தவறுவதில்லை. என்றுமே பிழைபடுவதில்லை, என்றுமே பழிசூழ்வதாகவோ, எண்ணி இரங்கத் தக்கதாகவோ இருப்பதில்லை. மடமையெனும் அழுங்குழவியாக இருந்ததால் நிலையான வளர்ச்சி பெற்ற உருவமே மெய்யறிவு அது குழந்தைப் பருவ அறியாமையின் வலுவின்மையையும், சார்பு நிலையையும், தவறுகளையும், தண்டனைகளையும் கடந்து வளர்ந்துவிட்டது. அது நிமிர்ந்து சமநிலையுடனும், வலுவுடனும் அமைதியுடனும் இருக்கின்றது.

மெய்யறிவு ஒரு மனிதனை ஒன்றியபோது அவன் உயர்த்தப்பட்டு உருமாற்றப்படுகின்றான். புதிய குறிக்கோள்களும், புதிய ஆற்றல்களும் கொண்ட புதிய உயிருருவாகவே மாறிவிடுகின்றான். புதியதும், மேம் பட்டதுமான ஓர் ஊழை நிறைவேற்றுதற்காக அவன் ஒரு புதிய உலகிலேயே குடியேறி விடுகின்றான்.

ஆக்கமெனும் கோயிலைத் தாங்கி அழகு செய்யத் தனது மிகுதியான வலிமையையும், ஒப்புமை கூற வியலாத நயத்தையும் வழங்குகின்ற நடுநிலையெனும் ஆதாரம் அத்தகையதாம்.

# தன்னம்பிக்கை

தன்னம்பிக்கை பற்றிய எமர்சனின் கட்டுரையை ஒவ்வோர் இளைஞனும் படித்தாக வேண்டும். இதுவரை எழுதப் பெற்றவற்றில் ஆண்மையும் வீரமும் செறிந்த கட்டுரை அதுவேயாகும். அது, வாலிபர்களிடையே காணப்படுகின்ற தன்னைத் தானே குறைவாக மதிப்பிடுதல், தன் இறுமாப்பு என்னும் இருமனப் பிணிகளையும் ஒருங்கே குணப்படுத்துவதற்கெனத் திட்டஞ் செய்யப்பட்டது. நாணமுடையவனுக்கு அவனுடைய தயக்கத்தின் வலுவின்மையையும், பயனின்மையையும் அது எடுத்துக் காட்டுகிறது. தருக்குடையவனுக்கு அவனுடைய செருக்கின் சிறுமை யையும், வெறுமையையும் அது புலப்படுத்துவதாகவே இருக்கும். இது வீறுமிக்க விழுப்பத்தின் புதிய புலப்பாடு, பண்டைய திருப்பார்வையுடையோனுக்கு அருள் பாலித்த புலப்பாடு போன்றது.

தன்னம்பிக்கைத் தற்செருக்கெனத் தவறுதலாகப் புரிந்து கொள்ளக்கூடாது. ஏனெனின், ஒன்று எத்துணை உயர்வானதாகவும், மேம்பாடுடையதாகவும் இருக்கின் றதோ, அத்துணை தாழ்வானதாகவும், பயனற்றதாகவும்

மற்றது இருக்கின்றது. தன்னம்பிக்கையில் இழிவுடையது எதுவுமே இருக்கவியலாது. அதே போன்று தற்செருக்கில் சிறப்புடையது எதுவுமே இருக்காது.

பழமையான ஒன்றை அடிமைத் தளமாகப் பின்பற்றுதற்குப் பதிலாக ஒரு புதிய எடுத்துக் காட்டாக மாறுகின்ற வகையில் தனது சொந்த முயற்சியையே நம்பும்படி வலியுறுத்துகின்ற தன்னம்பிக்கை அவனுக்குத் தேவைப்படுகின்றது. ஏளனத்தைப் பொறுத்தவரை, ஏளனத்தால் மனம் நொந்துபோகின்றவன் மனிதனே அல்லன். தன்னம்பிக்கை மனிதனின் வலிமையான கவசத்தை ஏளனம், பழிப்பு இவற்றின் அம்புகள் ஊடுருவிச் செல்லவியலாது. அவனுடைய நேர்மையான நெஞ்சத்தின் வெல்ல முடியாத அரணைத் துன்புறுத்தவோ அன்றிப் புண்படுத்தவோ அவை நெருங்க வியலாது. பழிச்சொல்லாகிய கூர்மையான அம்புகளை அவன்மீது மழையெனப் பொழியலாம், ஆனால், அவனுடைய வலிமையான மார்புக் கவசத்தால் அவை திசை திருப்பப்பட்டு அவனருகே தீங்கற்று வீழ்கின்றபோது அவன் அவற்றைக் கண்டு சிரிக்கின்றான்.

"உன்னையே நம்புவாயாக" – "இந்த இரும்பு நாணையே ஒவ்வோர் நெஞ்சமும் மீட்டுகின்றது" என்று கூறுகின்றார் எமர்சன். மனிதர் தம் சொந்த இயல்பான எளிமையையும், இயற்கையான பெருந்தன்மையையும் ஆதாரமாகக் கொண்டிருப்பதற்குப் பதிலாகத் தலைமுறை,

தலைமுறைகளாக அவர்கள் இதுவரையில் புறவியலான சூழ்ச்சிகளையே ஆதாரமாகக் கொண்டிருந் திருக்கின்றனர். தற்போதும் அவற்றையே ஆதாரமாகக் கொண்டிருக்கின்றனர். அவ்வாறு தம் இயல்பை ஆதாரமாகக் கொள்ளும் உறுதிப்பாடு கொண்டிருந்த ஒரு சிலரே தனிச்சிறப்புக்கு உரியவர்களாக்கப்பட்டு வீரர்களாக மேன்மைப் படுத்தப்பட்டிருக்கின்றனர். தனது சொந்த இயல்பே முனைந்து வெளிப்பட இடந்தரும் துணிவு டையவனும், தனது சொந்த இயல்பான பெறுமானத்தின் மீது நிலைகொள்ளும் வாய்ப்பினைத் தரும் வலிமையான உலோகம் போன்றவனுமே உண்மையான வீரனாவான்.

அத்தகைய வீரத்தை நாடுபவன் வலியைத் தாங்கியே ஆகவேண்டும். போலி மரபு முறைப் பூச்சாண்டிகளால் அவன் தனது கொள்கைப் பிடியி லிருந்து விலகிவிடக் கூடாது. அவன் தனது நற்பெயருக் காகவோ பதவிக்காகவோ திருச்சபையில் தனது செல்வாக்கிற்காகவோ சமூகத்தில் தனது மதிப்பிற் காகவோ அஞ்சுதல் கூடாது. அவன் நில உலகின் எதிர் முனைகளில் உள்ள நடைமுறை நாகரிகங்களினின்றும் நீங்கித் தன்னுரிமையுடன் நடந்து கொள்வது போன்று, இத் தயக்கங்களினின்றும் நீங்கித் தன்னம்பிக்கையுடன் செயலிலீடுபடவும், வாழவும் அவன் கற்றுக் கொள்ள வேண்டும். அவன் இச் சோதனையைத் தாங்கிய பின்பு அவதூறும், பழியும் அவனைத் தூண்டிவிடவோ, துயர்தரவோ முடியாது தோற்றுவிடுகின்றபோது அவன்

உண்மையில் ஒரு மனிதனாகின்றான். சமூகம் முதலில் அவனிடம் நம்பிக்கை வைத்து முடிவில் அவனுடைய சொந்த குணநலன்களுடனே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒருவனாகிவிடுகிறான்.

விரைவிலோ பிற்பட்டோ மனிதர் அனைவரும் அறிவுரைக்காகத் தற்சார்புடைய மனிதனையே நாடுவர். சிறந்த மனங்கள் அவரை ஓர் ஊன்றுகோலாகப் பயன்படுத்திக் கொள்ளாத போதிலும், அவர்தம் பணியையும், பயனையும் உயர்வாகப் பாராட்டி, முன்பு சென்று மறைந்த தெய்வங்களுள் அவருக்கும் ஓர் இடம் உண்டு என்பதை ஒப்புக் கொள்ளுவர்.

கல்வியை வெறுப்பதே தற்சார்பின் சுட்டுக் காட்டெனக் கருதிவிடுதல் கூடாது. அத்தகைய மனப்பான்மை, வலிமையின்மையின் கூறுகளைக் கொண்ட முரண்டான தற்பெருமையினின்றும் தோன்றுவதாகுமென்பதோடு, வீழ்ச்சியின் முன்னறிவிப்பும் ஆகுமே அன்றித் தன்னம்பிக்கையின் தனிச்சிறப்புப் பண்புகளாகிய வலிமையின் கூறுகளோ உயர்ந்த பேறுபெறும் உறுதிப்பாடோ ஆகாது. இறுமாப்பையும், பகட்டையும் தன்னம்பிக்கையுடன் தொடர்பு படுத்தவே கூடாது. தற்சார்பு மேன்மையுறச் செய்கின்ற வேளையில் அவை இழிவுபடுத்துகின்றன. பணம், ஆடை, சொத்து, தன்மதிப்பு, பதவி ஆகிய தற்செயல் விளைவுகளையும், துணைப்பொருள்களையும் அடிப்படையாகக் கொண்டதே

இறுமாப்பு; அவற்றை இழந்துவிட்டால் அனைத்தையும் இழந்துவிடுவோம்.

நேர்மை, தூய்மை, மெய்யார்வம், குணவியல்பு, மெய்ம்மை ஆகிய தலையாய கொள்கைகளையும், கோட்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டதே தன்னம்பிக்கை; எதை இழப்பினும் அஃது ஒரு பொருட்டாகாது. ஏனெனின், இவை என்றுமே இழக்கப்படுவதில்லை. புறப் பகட்டாலும், தற்செருக்காலும் இறுமாப்பு தனது அறியாமையை மறைக்க முயலுகின்றது. அதனோடு எத் திசையிலும் தன்னை ஒரு மாணவனாகக் கருத விரும்புவதில்லை. விரைந்து செல்லும் சிறிய பொழுதிற்குள் அறியாமையிலும் பகட்டிலுமே நிலைகொள்கின்றது. இன்று எத்துணை உயர்வுக்கு அது உயர்த்தப்படுகின்றதோ, நாளை அத்துணைத் தாழ்விற்கு அது வீழ்த்தப் பட்டுவிடும். மறைக்கப்படவேண்டியது எதுவுமே தன்னம்பிக்கையிடம் இல்லை. அதனோடு கற்றுக் கொள்வதற்கும் விருப்பமுடையதாயிருக்கின்றது. தற்செருக்குள்ள இடத்தில் பணிவு இருக்க முடியாதபோது, தன்னம்பிக்கையும், பணிவும் ஒத்தியங்கக் கூடியன வாயிருக்கின்றன. ஏன், அதைவிடக் கூடுதலாக ஒன்றிற்கொன்று சார்புற இணைந்து கொள்ளுவனவாகும். அதனோடு விழுமிய தன்னம்பிக்கை ஆழ்ந்த அடக்கத்துடன் இணைந் திருப்பதையே காணலாம்.

‘‘வீரத்தின் சாரம் தன்னம்பிக்கையேயாகும். மேன்

மக்கள் அனைவரும் தற்சார்புடையவரே. நாம் அவர்களை ஆசிரியர்களாகவும், பின்பற்றத் தக்கவர்களாகவும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமேயன்றி, ஊன்று கோல்களாகவும், உந்து ஆற்றலாகவும் பயன் படுத்திக் கொள்ளக் கூடாது. வேறு எவரையும் பற்றுக் கோடாகக் கொள்ளாது உண்மையின் தனித்த உயர்நிலையின் மீது தனியாக நிற்பவனே மேம்படு மனிதனான வருகின்றான். உடன்தானே உலகம் அவனைப் பற்றுக் கோடாகக் கொள்ளத் தொடங்கிவிடுகின்றது. ஆன்மீகச் சோர்விற்கும் கேடுதரும் தன் தாழ்விற்கும் அவனை ஒரு சாக்குப் போக்காகக் கொள்ளத் தொடங்கி விடுகின்றது; மேன்மக்களின் வலிமையில் நம் தீமைகளைத் தாலாட்டிக் கொள்வதைக் காட்டிலும், அவர்களுடைய ஒளிமிக்க விளக்கெதிரே நம் அறங்களுக்குப் புத்தொளி தருவதே சாலப் பொருந்துவதாகும். பிறருடைய ஒளியை நாம் நம்பியிருந்தால், இருள் நம்மைச் சூழ்ந்துவிடும். ஆனால், நாம் நமது ஒளியையே நம்பியிருப்பின் நாம் அதன் சுடரை வளர்த்தேயாக வேண்டும். நாம் பிறரிடமிருந்து ஒளியைப் பெறுவதும், மற்றவர்க்கு வழங்குவதுமாகிய இரண்டையுமே செய்யலாம். ஆனால், நமது சொந்த விளைக்கைப் புறக்கணித்துத் துருப்பிடிக்க விட்டுவிட்டுப் பிறருடைய ஒளியே போதுமெனக் கருதுவது நம்மை நாம் இருளில் கைவிடப்பட்டவர்களாவோம். என்றுமே நம்மைக் கைவிடாத ஒளி நமது சொந்த உள்ளொளியே.

தன்னம்பிக்கைக்குப் பிறிதொரு பெயராகிய

'உள்ளொளி', அச்சத்தால் நடுங்குபவர்களுக்கு எங்கிருக்க முடியும்? நாம் எவ்வாறிருக்கின்றோமோ அதன் அடிப்படையிலேயே நாம் நிலைகொள்ள வேண்டுமே அன்றிப் பிறனொருவன் எவ்வாறிருக்கின்றான் என்பதன் அடிப்படையில் நிலைகொள்ளுதல் கூடாது. பால் குடிப்பதும், பற்றிக் கொள்வதும் பசுங்குழவிக்குத் தேவையே. ஆனால் ஒரு மனிதன் அவ்வாறின்றித் தன் சொந்தக் கால்களைக் கொண்டே நடந்து செல்ல தொடங்கி விடுகின்றான். மனிதர் தாமாகவே அடைவதற்கென அமைக்கப்பட்டிருக்கின்ற ஒன்றைத் தம் கைகளில் தருமாறு இறைவனை வழிபடுகின்றனர். தாம் கடுமையாக உழைத்துப் பெறவேண்டிய உணவைத் தமது வாயில் ஊட்டுமாறு வழபடுகின்றனர். ஆனால், மனிதர் இந்த ஆன்மீகக் குழவிப் பருவத்தை விரைவில் கடந்து விடுவர். தமக்காக வழிபாடு செய்யவும், தமக்கு அறிவுரை கூறவும் புரோகிதருக்கு மக்கள் கூலிகொடுக்காத நிலை வந்தே தீரும்.

தன்னைத்தான் நம்பாத நிலையே மனிதனின் தலையாய தொந்தரையாகும். எனவே, தன்னம்பிக்கை யுடைய மனிதன் அரிதான, தனிப்பட்ட காட்சிப் பொருளாகி விடுகின்றான். ஒரு மனிதன் தன்னை ஒரு "புழு"வாகத் தானே கருதுவானாயின், பயனற்ற நெறியைத்தவிர அனிடமிருந்து வேறு என்ன விளைவு ஏற்பட்டு விட முடியும்? "தன்னைத் தானே பணிவுடையவனாக்கிக் கொள்ளுபவன் மேண்மைப் படுத்தப் படுவான்" என்பது

உண்மையே. ஆனால், தன்னைத்தானே தரங்குறைத்துக் கொள்ளுபவனுக்கு அந்நிலை ஏற்படாது. மனிதன் தான் இருக்கின்றவாறே தன்னைக் காணவேண்டும். தகுதியற்றது ஏதேனும் தன்னிடமிருப்பின் அதை நீக்கித் தகுதியுடையதை விடாமல் பற்றிக் கொண்டு நம்பிக்கையும் கொள்ள வேண்டும். மனிதன் தன்னைத்தான் தரங்குறைத்துக் கொள்ளும் போது அவன் தரங்குன்றியே விடுகின்றான். அவன் தன்னுயர்வுக்கான வாழ்வு நடத்தும்போதே உயர்வு படுத்தப்படுகின்றான்.

ஓரளவேனும் தன்னம்பிக்கை கொண்டு மனிதனுடைய செல்வாக்கையும், வளப்பத்தையும் குறிப்பிடத் தக்க அளவு பெருக்க முடியாத துறை வாழ்வில் எதுவுமே இல்லை. உலகியல் சார்ந்ததோ சமயஞ் சார்ந்ததோ ஆசிரியர், அமைப்பாளர், மேலாளர், கண்காணிப்பாளர், மற்றும் ஆட்சியும் அதிகாரமும் செலுத்த வேண்டிய பதவியிலுள்ளோர் அனைவருக்கும் இது ஓர் இன்றியமையாத கருவியாகும்.

ஓரளவேனும் தன்னம்பிக்கை கொண்டு மனிதனுடைய செல்வாக்கையும், வளப்பத்தையும் குறிப்பிடத் தக்க அளவு பெருக்க முடியாத துறை வாழ்வில் எதுவுமே இல்லை. உலகியல் சார்ந்ததோ சமயஞ் சார்ந்ததோ ஆசிரியர், அமைப்பாளர், மேலாளர், கண்காணிப்பாளர், மற்றும் ஆட்சியும் அதிகாரமும் செலுத்த வேண்டிய பதவியிலுள்ளோர் அனைவருக்கும் இது ஓர் இன்றியமையாத கருவியாகும்.

தன்னம்பிக்கையின் மேன்மையான நான்கு குணங்களாவன:

1. தீர்மானம் 3. சீர்மை

2. திண்மை 4. தன்னாண்மை

**தீர்மானம்** மனிதனை வலிமையுடையவானக்குகின்றது. தடுமாறுபவன் வலுவற்றவனேயாவான். வாழ்வெனும் நாடகத்தில் எத்துணைச் சிறியதாயினும் சிறப்பான பங்கை நடிக்க வேண்டிய மனிதன் தீர்மானமுடையவனாக இருப்பதோடு, தன் பகுதி என்ன என்பதைத் தெரிந்து கொள்ளவும் வேண்டும். அவன் செயல்படுதற்கான தன் ஆற்றலைக் குறித்து ஐயுறுதல் கூடாது. வாழ்வில் தன் பகுதி என்னவென்பதைத் தெரிந்து அதனில் தன் ஆற்றல் அனைத்தையும் செலுத்தவேண்டும். தான் செயற்படுதற்கும், பாதுகாப்பாக நிலைகொள்தற்கும் ஏதேனும் திண்ணமான அறிவுத் தளத்தை அவன் கொண்டிருக்க வேண்டும்.

தன்னம்பிக்கையின் கண் ஒரு பெரும் மூலக்கூறு இருப்பது உறுதியே. கூறப்படுவன் மதிப்புடையதா யிருக்க வேண்டுமெனின், கூறுவதற்கான உண்மை எதையேனும் மனிதன் கொண்டிருக்க வேண்டும். உண்மையை அறிவுறுத்துவதிலேயே திறமை அனைத்தும் அமைந்து கிடக்கின்றது. அவன், “உண்மையின் அடிப் படையில் உரையாட வேண்டுமேயன்றிக் கிறுக்கர்போலப் பேசுதல்

கூடாது.'' எப்போதும் கற்றுக் குட்டியாகவே இருக்காமல், ஒரு தேர்ச்சியாளனின் போக்கின்படியே தெளிவுடனும், தீரத் தெரிந்து கொண்ட நிலையிலும் அதனைக் கையாளுமளவிற்கு அதில் தேர்ச்சி பெற்றுவிட்டான் என்பதைத் தெரிந்து கொள்ளவும் வேண்டும்.

தீர்மானமின்மை ஒரு சிதைவுக் கூறாகும். ஒரு நொடித் தடுமாற்றம் வெற்றியின் போக்கையே திருப்பிவிடக் கூடும். தவறிழைத்துவிடக் கூடாதே என அஞ்சி விரைந்து தீர்மானம் செய்ய அஞ்சுபவர்கள், செயற்படும் போது ஏறத்தாழ எப்போதுமே தவறிழைத்து விடுகின்றனர். கருத்திலும், செயலிலும் சுறுசுறுப்புடையோர் தவறிழைக்கும் வாய்ப்புக் குறைவு. மேலும், தீர்மானமின்றிச் செயலி லீடுபட்டுத் தவறிழைப்பதைவிடத் தீர்மானத்துடன் செயலிலீடுபட்டுத் தவறிழைத்தல் சிறப்பேயாகும். ஏனெனின், முன்னதில் பிழைமட்டுமே யுள்ளது, பின்னதில் வலுவின்மையும் சோந்து விடுகின்றது.

மனத்தை விரைவில் திடப்படுத்தித் தீர்மானத்துடன் செயற்பட வேண்டும். ஏற்கனவே திடப்படுத்தப்பட்ட மனத்தைக் கொண்டிருத்தல் அதனினும் நன்று; பின்பு தீர்மானம் இயல்புணர்ச்சி யாகவும் தானே இயங்கும்.

விரைந்து தீர்மானம் செய்யும் மனத்திலே **திண்மை** தோன்றுகின்றது. ஒழுக்கத்தின் சிறந்த நெறியிலும் வாழ்வின் சிறந்த வழியின் கண்ணும் இறுதியாகத் தீர்மானம் கொள்ளுதலே உண்மையில் திண்மையாகும்.

எது நேரினும், தன் கொள்கைகளின் மீது உறுதியாக நிலைக்கும் பொருட்டு ஆன்மா எடுத்துக் கொள்கின்ற சூளுரையே அது. எழுத்திலோ பேச்சிலோ ஏதேனும் சூளுரை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது தேவையுமில்லை. ஏனெனின், ஒரு நிலைபெற்ற கொள்கையின்பால் நெறி திறம்பாத பற்றுறுதி கொண் டிருத்தலே சூளுரைகள் அனைத்தின் சாறமாகும்.

நிலைபெற்ற கொள்கையில்லாத மனிதன் பெருமளவு சாதனை செய்யவியலாது. சூழ்வினைத் திறமென்பது ஒரு சதுப்பு நிலமும், முள்ளடர்ந்த பாழிடமுமாகும். அங்கு மனிதன் தன் சொந்த ஒழுக்கக் கேடு என்னும் வழுக்குச் சகதியில் தொடர்ந்து ஒட்டிக் கொண்டு, தானே உண்டுபண்ணிக் கொள்கின்ற ஏமாற்றங்களென்னும் முள்களால் குத்தப்பட்டுக் காயமடைகின்றான்.

மனிதன் உறுதியான, நிலைபேறுடைய, தீர்மான முடைய மனம் கொண்டிருக்கவேண்டும். காரியங்கள் அனைத்திலும் பற்றுக்கோடாகக் கொள்வதற்கு பொருந்துவனவும், முரண் கருத்துகளென்னு சிக்கலினூடே நன்கு வழிகாட்டுவனவும், வாழ்வுப் போராட்டத்தில் தீர்க்கமான துணிவைத் தருவனவுமான விதிகளை அவன் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். அவ் விதிகளைக் கைக் கொண்ட பின்பு, ஆதாயத்தையோ மகிழ்ச்சியையோ விட அவனுக்கு அதுவே தன்மையாக இருக்க வேண்டும். வாழ்வைவிட அது சிறப்பானதாக இருக்கவேண்டும். அவன் என்றுமே அவற்றை விட்டொழிக்காத வரையில்,

அவை என்றுமே அவனை விட்டொழிவதில்லை என்பதை அவன் காணலாம். பகைவர்கள் அனைவரிடமிருந்தும் அவனைப் பாதுகாக்கும், தீங்குகள் அனைத்திலிருந்தும் அவனை விழிப்பாக விடுவிக்கும். இருள் இடர்ப்பாடுகள் அனைத்தினூடும் அவன் செல்லுகின்ற பாதைக்கு இருளில் ஒளிபரப்பும், துன்பத்தினின்றும் நீங்கி இளைப்பாறு மிடமாகும் உலகின் முரண்பாடுகளினின்றும் விலகும் புகலிடமாகவே அவை அவனுக்கு பயன்படும்.

திண்மையான மனத்தை உண்மையான **சீர்மை** ஒரு மாட்சிமை பொருந்திய உடையைப் போல் அணி செய்கின்றது. பழிக்கு உடன்படுவானென எதிர்பார்க்கப் படுகின்ற வேளை உருக்குக் கம்பியைப் போன்று நெகிழ்ச்சி அடையாதிருப்பவனும், நன்மையான ஒன்றிற்குத் தன்னைத் தகுதியுடையவனாக்குவதில் எளிதில் வளையும் கோலைப் போன்று அத்துணை ஒசிவான இருப்பவனும், அப் பண்பைக் கொண்டிருத்தலால் பிறரை அமைவுறுத்தி, உயர்த்துகின்ற ஓர் உண்மையான மதிப்பைக் கொண்டிருக்கின்றான்.

விழுப்பமுடைய மனிதனைத் தாழ்வுறுத்தவும், அடிமை கொள்ளவுமியலாது. ஏனெனின், அவன் தன்னைத் தான் தாழ்வுறுத்துவதை, அடிமைப்படுத்துவதை விட்டொழித்து விட்டான். அவனைக் குறைவுபடுத்தும் எந்த முயற்சியையும் அவனின் பார்வையால், ஒரு சொல்லால், அறிவுடைய பொருள் பொதிந்த ஓர் அமைதியால் உடனடியாகத் தகர்த்தெறிந்து விடுகின்றான்.

வம்பளப்போனுக்கும், தகுதியற்றோனுக்கும் அவனுடைய தோற்றம் ஒரு வசையாகும். அதே வேளையில் நன்மை நாடுவோனுக்கு அது ஒரு வலிமை மிக்க பாறையேயாகும்.

விழுப்பமுடைய மனிதன் மதிப்பிற்குரியவனாக இருப்பதன் காரணம் அவன் தன்மதிப்படையவனாக இருக்கின்றான். மேலும், பிறர் அனைவருக்கும் ஏற்ற அளவான மதிப்பைத் தந்து பெருந்தன்மையுடன் நடத்துகின்றான் என்பதுமாகும். தற்பெருமை தன்னையே நேசிப்பதுடன், கீழிருப்போர் அனைவரையும் அடம் கொண்டு அவமதிப்புடனேயே நடத்துகின்றது. ஏனெனின், தன்னையே விரும்புவதும், பிறரை இகழ்வதும் எப்போதும் ஒரே அளவில் ஒன்றாக இணைந்திருப்பதைக் காண்கின்றோம். எனவே, தன்னையே விரும்பும் பான்மை மிகுதியாய் இருப்பதற்கு ஒப்ப அகந்தையும் மிகுதியாகவே இருக்கும். உண்மையான விழுப்பம் தன்னல மறுப்பிலிருந்து பிறக்கிறது.

அதாவது, நிலைபேறு கொண்ட கொள்கையை நடுநிலையுடன் பின்பற்றுவதலிருந்தே தோன்றுகின்றது. தனது கடமையை நிறைவேற்றுவதில் தனிப்பட்ட நோக்கங்கள் அனைத்தையும் ஒரு புறம் ஒதுக்கிவிட்டு முழுக்க முழுக்கச் சட்டத்தின் முறையே நிலைபேறு கொள்கின்ற பான்மையிலிருந்தே நீதிபதியின் விழுப்பம் தோன்றுகின்றது. நிலையற்றதும், விரைந்து மடிவதுமான அவனுடைய சிறிய தனி மனிதப் பண்பு வெறுமையாகி விடுகின்றது. அதே வேளையில் நிலைத்து நிற்பதும்,

மாட்சிமையுடையதுமான சட்டம் அனைத்துமாகி விடுகின்றது. ஒரு வழக்கை முடிவு செய்வதில் நீதிபதி சட்டத்தை மறந்து தம் போக்கான உணர்ச்சிக்கும், விருப்பு வெறுப்பிற்கும் உட்பட்டுவிடின் அவருடைய விழுப்பம் மறைந்துவிடும்.

ஒவ்வொரு மனிதனும் ஒரு நிலைபேறு கொண்ட விதியின் வழிநின்று செயலிலீடுபடுகின்ற அளவிற்கேற்ப அவன் அமைவடக்கமும், விழுப்பமும் கொண்டிருக் கின்றான். அவ் விதி நேர்முறையானதாகத் தகர்க்கப்பட முடியாததாக இருப்பதுவே இன்றியமையாததாகும். அத்தகைய விதியை மனிதன் பின்பற்றி ஒழுகி, அதனின்றும் தடுமாற்றம் கொள்ளவோ தனி மனிதப் பண்புக் கூறுக்குத் தாழ்வுறவோ செய்யாதிருக்கும் வரையில் படையெடுக்கின்ற பற்றுகள், விருப்பு வெறுப்புகள் ஆசைகள் எத்துணைதான வலிமையுடைய னவாய் இருப்பினும், நடுநிலை பிறழா விதியின் வெல்ல முடியாத வலிமையின் முன் அவை வலுவும் பயனும் அற்றனவாகிவிடும். இறுதியில், அவற்றினுடைய கூட்டானதும், தகுதியற்றதுமான குழப்பம் அவனுடைய ஒருமுகமான, மாட்சிமைப்பட்ட நேர்மைக்கு இணங்கிவிடும்.

**தன்னாண்மை** வலிமையும், நல்ல கட்டுப்பாடும் கொண்ட மனிதனின் பிறப்புரிமையாகும். மனிதர் அனைவரும் தம் உரிமையை நாடி அவற்றைப் பெற முயலுகின்றனர். ஏதேனும் ஒரு வகையில் விடுதலை அடைதலையே அனைவரும் நாடுகின்றனர்.

மனிதன் தனக்காகவோ சமூகத்திற்காகவோ உழைக்க வேண்டும். அவன் நொண்டியாகவோ, சீர்ப்பட முடியாத முடமாகவோ, மனதைப் பொறுத்த அளவில் பொறுப் பற்றவனாகவோ அவன் எதிரிடையாக எதையுமே தர முடியாதவனாய்த் தான் கொண்டிருப்பவை அனைத்திற்கும் பிறரை நம்பியிருப்பதற்காக வெட்கப்பட வேண்டும். அத்தகைய நிலையே விடுதலை என எவரேனும் கருதினால், அதுவே அடிமைத் தனத்தின் கீழ்த்தரமான தன்மைகளில் ஒன்று என்பதை அவன் தெரிந்து கொள்ளட்டும். தற்போதைய நடப்புகளைக் கொண்டு பார்க்கையில், ஒருவன் சாதாரண காலாடியாக இல்லாமல் மதிப்பிற்குரிய சோம்பேறியாக இருப்பினும், சுறுசுறுப்பான மக்கட் கூட்டத்தின் கண் சோம்பேறியாக இருத்தல் மக்கட்குலத்திற்கே வெட்கக் கேடாவதுடன், மேற்கொண்டு மதிக்கப்படத் தக்கதாயில்லாத காலமும் வந்தே தீரும். கையாலோ மூளையாலோ சம்பாதிக்கின்றான். அவன் செல்வனாகவோ எளியவனாகவோ பிறந்திருப்பினும் இதைச் செய்கின்றான்; ஏனெனில்,செல்வம் சோம்பேறித் தனத்திற்குச் சாக்குப் போக்காக முடியாது. உண்மையில், அவை கொண்டுள்ள அரிய திறமைகளைக் கொண்டு சமூக நன்னிலைக்கு உழைக்கும் ஒரு வாய்ப்பாகும். தன்னைத் தான் ஆதாரமாகக் கொண்டவனே விடுதலையும் தற்சார்பும் தன்னாண்மையும் உடையவனாவான்.

இவ்வாறாக எட்டு ஆதாரங்களின் தன்மையும்

விளக்கப்பட்டு விட்டன. அவற்றின் கட்டுமானப்பாங்கு, அவற்றின் கலவைப் பொருள்கள், ஒவ்வொன்றும் உருவாக்கப்பட்டுள்ள உலோகப் பொருளின் நால்வகைத் தன்மை, அவை என்ன நிலைமைகள் வகிக்கின்றன, முதலிய அனைத்தும் தெளிவுபடுத்தப்பட்டு விட்டன. எவ்வாறு கட்டமைக்க வேண்டுமென்று தெரிந்து கொள்ளாதவன் தற்போது கட்டலாம்; அரைகுறையாகத் தெரிந்து கொண்டிருப்பவன் இன்னும் மிக நிறைவாகத் தெரிந்து கொள்ளலாம். நிறைவாகவே தெரிந்து கொண்டிருப்பவன் ஆக்கத்தில் ஒழுங்கு படுத்துவதிலும், எளிதாக்குவதிலும் இன்பம் காணலாம். நாம் ஒரு கோயிலை எடுத்துக் கொள்வோம்; அதன் தூண்களின் வலிமையை, சுவர்களின் வலுவை, கூரையின் உறுதிப்பாட்டை, அந்த முழுமையில் சிறபஞ் சார்ந்த அழகையும் நிறையுடைமையையும் தெரிந்து கொள்ளலாம். அவ்வாறேதான் வாழ்வின் மேன்மைக்குப் உயர்வுக்கும் வெற்றிக் குரிய எட்டு வழிகளாகும்.

நாம் சுருக்கமாகத் தொகுத்து வெற்றிக்குரிய எட்டு வழிகளையும் அவற்றின் வலிமையுடனும், ஒளியுடனும் மறுமுறையும் காண்போம்.

1) **ஆற்றல் –** ஒருவன் தன் கடமையை நிறைவேற்றும் பொருட்டு விடாமுயற்சியுடையதும், இடைவிடாததுமான கடுவுழைப்பை மேற்கொள்ளத் தன் உணர்ச்சியைத் தூண்டிக் கொள்வது.

2) **சிக்கனம்** – ஆற்றலை ஒருமுகப்படுத்தல், முதலீடு, ஒழுக்கநெறி இரண்டையுமே பாதுகாத்தல், இரண்டாவதாகக் கூறப்பட்டிருப்பது மனத்தின் முதலீடு; ஆகவே, அதுவே சிறப்பு வாய்ந்தது.

3) **சால்பு** – நன்னெறியினின்னும் திரும்பாத நேர்மை; இழப்பு அன்றி ஆக்கம் என்ற நோக்கங்கள் அனைத்திலிருந்தும் விலகி வாக்குறுதிகள், உடன்பாடுகள், ஒப்பந்தங்கள் அனைத்தையும் சிறிதும் தவறாது நிறைவேற்றுதல்.

4) **முறைப்பாடு** – நடைமுறை விவரங்கள் அனைத்தையும் ஒழுங்கமைதிக்கு உட்படுவனவாக்கல். அதன் காரணமாகப் பலவற்றை ஒன்றாகக் குறைத்து விடுவதால், தேவைக்கு மிகுதியான உழைப்பினின்றும், களைப்பினின்றும் நினைவாற்றலையும், மனத்தையும் விடுவித்தல்.

5) **இரக்கம்** – மேதகைமை, பெருந்தன்மை, மென்மை, ஈகை; திறந்த கைனாக, தன்னுரிமை உடையவனாக, அன்புடையவனாக இருத்தல்.

6) **இயல்பார்வம்** – நிறைந்த நல்லன்பு உடையவனாகவும், முழுமை உடையவனாகவும், வலிமை உடையவனாகவும், உண்மையுடையவனாகவும் இருத்தல். பொது இடத்தில் ஒரு வகை ஆளாகவும், தனிமையில் பிறிதொரு வகை ஆளாகவும் இல்லாதிருத்தல்.

வெளிப்படையாக நற்செயல்களைச் செய்யும் ஒருவன் அதே வேளையில் மறைவில் தீச் செயல்களைச் செய்யாதிருத்தல்.


7) **நடுவுநிலைமை** – நீதி தனக்காகவே போராடாது இருபக்கங்களையும் சீர்தூக்கிப் பார்த்து நேர்மை யோடியைந்து செயலாற்றுவது.

8) **தன்னம்பிக்கை** – நிலைபெற்றதும், வெல்ல முடியாததுமான விதிகளின் வழிநின்று வலிமையையும், ஆதரவையும் தன்னகத்தேயே நாடுவதன்றி, எந்த நேரத்திலும் பறித்துவிடப்படக் கூடிய வெளிப்புறக் காரியங்களை நம்பாமலிருத்தல்.

இந்த எட்டு வழிகளின் மீது நடத்தப்படுகின்ற எந்த வாழ்வும் வெற்றிக்குப் புறம்பாக எவ்வாறு இருக்க முடியும்? அவற்றின் வலிமை எந்த உடல் வலிமையோ நுண்ணறிவு வலிமையோ ஒப்புமை காட்ட முடியாத திறத்தனவாகும். இந்த எட்டையும் நிறைவுறக் கட்டமைத்துக் கொள்ளுதல் ஒரு மனிதனை வெல்ல முடியாதவனாக்கி விடுகின்றது. எவ்வாறெனினும், மக்கள் பெரும் பாலும் இக் குணங்களில் ஒன்றிலோ பலவற்றிலோ வலிமையுடையவராகவும். பிறவற்றில் வலிமையற்றவராகவும் இருப்பதைக் காணலாம். இந்த வலுவற்ற கூறுதான் தோல்வியை வரவழைகின்றது. அதாவது, நன்மையானதும், இன்றியமையாததுமான ஏதேனும் குணம் இல்லாமலிருப்பதிலேயே தோல்வியின் காரணத்தைக் கண்டறிய வேண்டுமேயன்றி, அதனைக் கொண்டிருப்பதில் கண்டறியவியலாது.

இந் நூல் காட்டும் பயிற்சியின் படியே தமது வாழ்வுக் கோயிலைக் கட்டத் தொடங்குவோர் இதை மனத்தில் கொள்ள வேண்டும். அதாவது, ஒரு கட்டிடத்தை எழுப்புவதெனின் அதற்குக் காலம் தேவைப்படுகின்றது. செங்கல் மேல் செங்கல், கல்மேல் கல் வைத்துப் பொறுமையோடுதான் எழுப்ப வேண்டும். தூண்கள் உறுதியாக நடப்பட்டு மேல் பூச்சும் பூசப்பட வேண்டும். அதனை முடித்து முழுமையாக்க உழைப்பும், அக்கறையும் தேவைப்படுகின்றன. அதே போன்று, உட்புறமனக் கோயிலாகிய கட்டிடம் கண்ணுக்குப் புலப்படாதது, ஓசையற்றது என்பதற்காக உண்மையாகவும், திடமாகவும் அமைந்திருப்பதில் அதைவிட எந்த அளவிலும் குறைவுடையதன்று.

தோழர்களே! உங்களது குணவியல்பைக் கட்டாக அமையுங்கள், உங்களது வாழ்வெனும் இல்லத்தை எழுப்புங்கள், உங்களது ஆக்கக் கோயிலைக் கட்டுங்கள்.



## புலவர் த. கோவேந்தன் டி.லிட் 1932

கோவேந்தன் பாடிக் குவிக்கின்றான் நாளடைவில்
பாவேந்தன் ஆய்விடுவான் பார்.

- புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் (1963)

பல்லா யிரம்நூல் படித்தறியும் பண்பாளன்;
நல்லார் இணைக்கத்தின் நட்பாளன்; - வல்லான்
எழுதுகின்ற நூல்எல்லாம் இன்தமிழுக்கு ஏற்றம்;
தொழுகின்றேன் கோவேந்தன் தொண்டு.

- அருட்கவி அரங்க சீனிவாசன் (1975)